விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 29 திங்கட்கிழமை (11.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 054

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# இலங்கையை குறிவைத்து ஐ.நாவில் விசேட பொறிமுறை!




## ஆட்டத்தை ஆரம்பிக்கிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணையை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையில் விசேட பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தவுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## 'எமக்குச் சார்பாகவே இந்தியா வாக்களிக்கும்'

### இலங்கை நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் யோசனையின் போது இந்தியா தமக்கு சார்பாக வாக்களிக்கும் என்று இலங்கை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம் இந்தியா, இலங்கைக்கு எதிராக தமது வாக்கைப் பயன்படுத்தியிருந்தது. இதனை அடுத்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளில் ஆரோக்கிய நிலை மேம்படவில்லை என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

இந்த நிலையிலேயே திருவானந்தபுரம் சென்றிருந்த இலங்கையின் பொதுநிர்வாகத் துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ன இந்தியா இந்தத் தடவை இலங்கைக்கு ஆதரவாக ஜெனிவாவில் வாக்களிக்கும் என்று நம்பிக்கை' வெளி (20ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மை இனமக்கள் மீது வன்முறைகள் அதிகம் பிரயோகிப்பு

### சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இன்றைய கால கட்டத்தில் சிறுபான்மை மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாகவும் தற்போது விசேடமாக முஸ்லிம் மக்கள் மீது அது தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

பொதுபலசேனா என்ற கடும்போக்கான பௌத்த அமைப்பினால் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இந்த பொதுபலசேனா என்ற அமைப்பினை முற்று முழுதாக இலங்கை அரசாங்கமே நடத்தி வருவதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பொது எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பினால் கொழும்பில் (20ஆம் பக்கம் பார்க்க)

2011 / 2012
ஆம் ஆண்டு
பல்கலைக்கழக
அனுமதிக்கான
வெட்டுப்புள்ளி
உள்ளே...

## சர்வதேசம் எமக்கு உதவவேண்டுமானால் நாம் ஒற்றுமையுடன் இருப்பது அவசியம்

### கிடைத்த வாய்ப்பை கை நழுவவிடக் கூடாது–மாவை

(சூரிச்)

இலங்கைக்கு எதிராக இன்று சர்வதேசத்தில் நடைபெறும் இராஜதந்திரப் போரில் பொறுமையுடனும், உயர்ந்த தன்னலமற்ற அர்ப்பணிப்புடனும் ஒரே குரலாய் ஒன்றுபட்டு செயற்பட்டால். இலங்கையில் எம் தாய் மண்ணில் தமிழர் ஆட்சி உறுதியுடன் அமையும் என்பதில் நம்பிக்கையுண்டு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

சிவராம் நினைவுப் பணிமன்றம் ஏற்பாடு செய்த ஐந்தாவது நினைவுக் கருத்தரங்கு சுவிஸ் சூரிச் மாநகரில் நேற்று முன்தினம் சனி மாலை இடம்பெற்றது.

ஊடகவியலாளர் கனகரவி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கலந்து கொண்டு இனப்பிரச்சினையும் சமகால அரசிய (02ஆம் பக்கம் பார்க்க)

## 'ரோ' தலைவர் மகிந்தவை சந்தித்தார்

(புதுடில்லி)

இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இந்தியாவின் உளவு அமைப்பான ரோ வின் தலைவர் ஆலோக் ஜோசி நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

இந்திய விருந்தினர் மாளிகையில் வைத்து இடம்பெற்ற இந்தச் சந்திப்பு, சுமார் 30 நிமிடங்கள் வரையில் நீடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

த ஹிந்து பத்திரிகை இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. எனினும் இதன் போது பேசிக்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் தகவல் எவை (20ஆம் பக்கம் பார்க்க)

## 'விஸ்வரூபம்' திரைப்படத்திற்கு இலங்கையில் தடை நீக்கம்

(கொழும்பு)

கமல் ஹாசனின் விஸ்வரூபம் திரைப்படத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடையை இலங்கை அரசாங்கம் நீக்கியுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமையிலிருந்து விஸ்வரூபம் திரைப்படம் நாட்டின் திரையரங்குகளில் காண்பிக்கப்படும் என்று இலங்கையின் கலை மற்றும் கலாசாரத் துறைக்கான அமைச்சர் டீ.பி.ஏக்கநாயக்க பிபிசி தமிழோசையிடம் கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)



## இரண்டு கட்டமாக பல்கலை அனுமதி!

(கொழும்பு)

2011ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை மார்ச் மாத இறுதிக்குள் பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என உயர் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இசற் புள்ளி பிரச்சினை தொடர்பில் 2011ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கு (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான்–இலங்கை உறவு மேலும் வலுவடைகிறது!

## ஈரான் அமைச்சர் தெரிவிப்பு

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் சிறந்த உறவு காணப்படுவதாகவும் இரு நாடுகளுக்கிடையிலான வெளியுறவுத்துறை மேலும் வளர்ச்சியடைந்து செல்வதாகவும் ஈரானிய வெளியுறவுத் துறை அமைச்சர் அலி அக்பர் சலெஹி தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கான இலங்கைத் தூதுவர் மொஹமட் பெய்சால் ராசினை நேற்று முன் தினம் சந்தித்த பின்னர், செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தெற்காசிய நாடுகளுக்கிடையிலான சுமுக உறவை வலுப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை ஈரான் மேற் கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையுடனான பொருளாதார, சுகாதார மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப் படுத்திக் கொள்ளப்படும் என ஈரானிய வெளியுறவுத்துறைஅமைச்சர் குறிப்பிட்டார். (செ–4)

# தேசியக் கொடி அவமதிப்பு; கைதான நால்வரும் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திப் பகுதியில் வைத்து தேசியக் கொடியினை அவமதித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கொடியினை எரித்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞர்கள் நால்வரையும் பொலிஸார் நேற்றுமாலை கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் அந்த இளைஞர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்படாமையால் அந்த நால்வரும் விடுவிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை, சாவகச்சேரி மற்றும் சங்கானையை சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். (செ–4)

# சர்வதேசம் எமக்கு உதவ...

லும் என்ற தலைப்பில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் இன்றும் பத்திரிகைச் சுதந்திரம் அற்ற சூழலில் இனப்பற்றோடு, விடுதலை உணர்வுகளோடு உழைத்துவரும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல, நீதி நியாயத்திற்காகக் குரல் கொடுத்து வரும் சிங்கள ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் வருகின்றனர்.

அரசின் சர்வாதிகார, இனவாத ஆட்சியினால் அச்சுறுத்தலுக்கு உள்ளான ஊடகவியலாளர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் கோரியுள்ளனர்.

அரசின் இத்தகையை நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் குறிப்பாக சிவராம் அவர்களுக்கும் என் இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை மண்ணில் களப்பலியாகிவிட்ட எம் உறவுகளுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று உலக அரசியல் அரங்கில் இலங்கைத் தமிழர் பிரச்சினை முக்கிய அங்கம் வகித்து வருவதை அறிவோம்.

உலக வல்லாண்மை நாடுகள் உலகின் பல நாடுகளின் பிரச்சினைகளில் அக்கறை கொண்டு நடவடிக்கையில் ஈடுபடுகையில், இந்துமா சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கைப் பிரச்சினையிலும் ஒரு தீர்வு ஏற்பட வேண்டுமென ஈடுபாடு கொண்டு அரசியல், இராஜதந்திர நடவடிக்கைகளை எடுத்து வரும் போது நாமும் இராஜதந்திரத்துடன் நடந்து கொள்வது அவசியமானதாகும்.

இலங்கையில் தமிழ், முஸ்லிம் மக்களின் விடுதலைக்கும், சுதந்திர ஆளுகைக்குமாய் குறிப்பாக கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலான ஜனநாயக அறவழிப் போராட்டங்களும், ஆயுதப் போராட்டங்களும் தமிழ் மக்களின் விடுதலை எனும் கொள்கை மீதான திடசங்கற்பமுமே சர்வதேசத்தில் இன்று ஏற்பட்டுவரும் இராஜதந்திர நடவடிக்கைகளுக்குக் காரணம் ஆகும்.

இச்சந்தர்ப்பத்தை நாம் இழந்துவிடக் கூடாது. சர்வதேச நாடுகளை அனுசரித்து இந்த ஜெனிவா இராஜதந்திரப் போரில் தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட்டுச் செயற்பட்டு வெற்றி பெற வேண்டும். அல்லது அணி திரண்டு வரும் சர்வதேச நாடுகள் விரக்தியடைந்துவிட நேரும்.

குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்த இராஜதந்திர நடவடிக்கையில் செயலாற்றி வருவது முக்கியமானதொன்றாகும்.

புலத்திலும், களத்திலும் புரிந்துணர்வுடன் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்தி நிற்கின்றேன். அதற்கான அர்த்தமுள்ள பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் கொள்கை, இலட்சியப் பற்றுடனான செயற்பாடுகள் இலங்கையில் ஒரு சிறந்த அரசியல் தீர்வை, தமிழர் தாயகத்தில் தமிழர் ஆட்சியை நிலைநாட்டுவதற்குப் பேருதவியாய் அமையும் என்றார் அவர். (செ–4)

# இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ச.வாமதேவன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், பழைய மாணவி திருமதி லலிதாகுமார் சிவபாலன், கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் இ.முருகதாசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (செ–8)

# இலங்கைப் பணிப்பெண்கள் 47 பேர் துன்புறுத்தலால் நாடு திரும்பினர்!

ஜோர்தானில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு இலக்காகி, தடுப்பு முகாமில் தங்கியிருந்த இலங்கைப் பணிப்பெண்கள் 47 பேர் நேற்று நாடு திரும்பியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

ஜோர்தானிலுள்ள இலங்கைத் தூதரகத்திலே இவர்கள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் தற்காலிக கடவுச்சீட்டு வழங்கப்பட்டு நாட்டுக்கு திருப்பியழைக்கப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தேவையான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (செ–4)


முதலாவது ஆண்டு நினைவலைகள்



உள்ளத்திலே பாலனாய்
முகத்திலே சந்திரனாய்
விளங்கிய எம் குலவிளக்கு

அமரர் பொன்னையா பாலச்சந்திரன்

மலர்வு 21.12.1943 — உதிர்வு 25.01.2012

இழப்புக்கள் எவ்வளவு கொடுமை என்பதை உணர்ந்தோம் நாம்
நீங்கள் இவ்வுலகில் இல்லை என்பதை நம்பவும் முடியவில்லை
நிதமும் உங்கள் வரவினை எதிர்பார்த்து
உயிரற்ற உடம்பாய் ஸ்தம்பித்து நிற்கின்றோம்

27/1 5ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்



வேலை ஆட்கள் உடன் தேவை

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் தேநீர்ச்சாலைக்கு
- ரீமேக்கர்
- சப்பிளையர்
- உதவியாளர் (பெண்) உடன் தேவை.

தங்குமிடம், உணவு வழங்கப்படும்.
தொடர்பு: 0775747369
0774524780

(1715)








எங்கும் விற்பனையாகிறது

2013 பலாபலன்கள் வெளியீடு

"ஜோதிர்வித்யாரத்னா" அரசவிருது பெற்றவர் சோதிடர் V.A. சிவராசா

56, அம்மன் றோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
T.P.:0212228708

(1688)



WESTERN UNION MONEY TRANSFER

தொடர்ந்தும் உங்கள் சேவையில்

உலகமெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் CD, VCDக்கள் Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 021 222 5392

(C-2404)



3-ம் ஆண்டு நினைவஞ்சலி




செல்வி இ.சிவகௌரி

என்றும் உங்கள் நினைவழியா நாட்களாய் தொடரும் எம் பயணம்...

திதி: பிரதமை

ஆத்ம சாந்தியை இறைஞ்சும்
"பெரியதம்பி இராசநாயகம்", தாவடி.
பெற்றோர், சகோதரங்கள்.

(1714)



மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம் T.P.: 0719315664, 0777569295

மீண்டும் யாழில்

10.02.2013 முதல் 15.02.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப் படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)
(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(A-2392)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஓர் அரசியல்வாதியின் மனித நேயம்

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது நடந்த நிகழ்ச்சி இது.

வில்லியம் ஸ்காட் என்பவர் கடமை தவறாத இராணுவவீரர்.

ஒருநாள் அவரது நண்பர் ஒருவருக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தது. அதனால் நண்பரது பணியை தாமே ஏற்றுக் கொண்டு பணி புரிந்து கொண்டிருந்தார்.

மறுநாள் காலையில் அவருக்கு ஒரு விடயம் தெரிய வந்தது. அதாவது அன்றும் அவர்தான் காவல்பணி செய்ய வேண்டும் என்று.

தொடர்ந்து கண் விழித்தால் தூக்கம் வரும். அதனால் கடமையை ஒழுங்காகச் செய்ய முடியாது என்ற எண்ணம் அவர் மனதில் தோன்றியது.

உடனே அவர் தன் தலைமை அதிகாரியிடம் சென்று விடயத்தை எடுத்துரைத்தார்.

இவர் கூறிய காரணத்தை அதிகாரி ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் வேறு வழியின்றி ஸ்காட் இரண்டு வேளையும் பணி செய்ய ஒப்புக் கொண்டார்.

அவர் பணி புரிந்து கொண்டிருந்தபோது திடீரென அறியாமல் சற்று தூங்கி விட்டார்.

அச்சமயம் மேற்பார்வையிட வந்த அதிகாரி, அதைப் பார்த்து விட்டு அவருடைய மேலதிகாரியிடம் விடயத்தைக் கூறி விட்டார்.

போர்க்களத்தில் பணி புரியும் போது தூங்கும் வீரர்களுக்கு மரண தண்டனை கொடுப்பது அவர்களுடைய வழமையான காரியமாகும்.

அதன்படி ஸ்காட் பணி நேரத்தில் தூங்கியதால் அவரை இருபத்தி நான்கு மணி நேரத்தினுள் சுட்டுக் கொல்லும்படி உத்தரவிடப்பட்டது.

அவருடைய நண்பர்கள் இவ்விடயத்தைக் கேள்விப்பட்டதும் மிகவும் பதறிப் போனார்கள். அவர்கள் உயர் அதிகாரியிடம் சென்று முடிந்தவரை வாதாடிப் பார்த்தார்கள். எதுவிதப் பலனும் கிட்டவில்லை.

கடைசியில், மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை மன்னிக்கும் அதிகாரம் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனுக்கு உண்டு என்று கேள்விப்பட்டதும், ஸ்காட்டின் நண்பர்கள் அவரைச் சென்று சந்தித்து நடந்தவற்றைக் கூறினார்கள்.

சிறிது நேரம் அவர் யோசித்தார். உடனே அவர் ஓர் உத்தரவைத் தயார் செய்து, அதனை ஸ்காட்டின் தலைமையதிகாரிக்கு அனுப்பி வைத்தார். அதன்பின் அவர் புறப்பட்டு ஸ்காட்டைச் சென்று பார்த்தார்.

அவனிடம் பிறந்த இடம், தாய், தந்தை ஆகியோரைப் பற்றியெல்லாம் விசாரித்தார்.

பின்னர் ஸ்காட்டை நோக்கி, ''உன் பெற்றோரை துக்கத்தில் ஆழ்த்தி விடாதே!'' என்று கூறினார்.

அதற்கு அவன் "ஐயா! நாளைக்கு நான் இறக்கப்போவதுதான் தங்களுக்குத் தெரியுமே!" என்றான்.

ஆபிரகாம் லிங்கன் ஸ்காட்டின் தோளைப் பற்றியவாறு, "ஸ்காட்! நீ நாளை இறக்கப்போவதில்லை; அதற்கு மாறாக நீ உன் வேலைக்குச் செல்லப் போகிறாய். நீ எனக்கு மிகவும் சிரமம் கொடுத்து விட்டாய். நான் இங்கு வருவதற்கு உண்டான பணத்தை எப்படி கொடுக்கப் போகிறாய்?" என்று வினவினார்.

"ஐயா! கவலைப்படாதீர்கள்; உங்களுக்கான செலவை நான் திருப்பிக் கொடுத்து விடுவேன்'' என்று உறுதியாகவும் நேர்மையாகவும் கூறினார்.

உண்மை அறிந்த லிங்கன் மகிழ்ச்சியாக, "ஸ்காட், உன் வங்கி சேமிப்பும் நிலத்தில் மேல் வாங்கும் கடனும் நண்பர்கள் கொடுக்கும் பணமும் என் செலவைச் சரி செய்யாது. அதற்குப் பதிலாக ஸ்காட் என்ற இராணுவவீரன் கடமைகளைச் சரியாகத் தொடர்ந்து செய்தால் மட்டுமே அதைச் சரி செய்ய முடியும்" என்று அவர் கையைப் பிடித்துக் கூறினார்.

''அப்படியே செய்வேன் ஐயா'' என்று ஸ்காட் ஆபிரகாம் லிங்கனுக்கு உறுதிமொழி வழங்கினான்.

மனித சேவைக்காகத்தான் சட்டம் உருவாக்கப்பட்டதே தவிர, மனித நேயத்தை மறந்து மிகவும் கண்டிப்பாக நடந்து கொள்ளக் கூடாது என்பதை விளக்கவே இந்தக்கதை.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அழிவடைந்துவரும் குளங்களால் விவசாயத்தை கைவிடும் நிலை

## விவசாய அமைப்புக்கள் குற்றச்சாட்டு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டம் குளங்களுக்கு பெயர்போன பிரதேசம். ஒவ்வொரு கிராமமும் குளத்தின் பெயரால் அழைக்கப்படுவது என்பது பலரது கருத்தாகவும் உள்ளது.

இந்நிலையில் இன்று குளங்கள் அழிவடைந்து வருவதுடன் அதனை நம்பி விவசாயம் செய்யப்படும் நிலங்கள் அனைத்தும் கட்டடம் அமைப்பதற்காக விற்பனை செய்யப்படும் நிலையினால் விவசாயிகளும் விவசாயத்தை கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் உள்ள 600 இற்கும் மேற்பட்ட குளங்களில் நகரத்தை அண்டிய பகுதிகளில் உள்ள சுமார் 12 இற்கும் மேற்பட்ட குளங்களில் மக்களினால் மண் நிரப்பப்பட்டு அவற்றினுள் அத்துமீறி கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதாக விவசாய அமைப்புக்கள் குற்றம் சுமத்துகின்றன.

பல அரசியல் கட்சிகளும் தமது தேர்தல் கால வாக்குகளுக்காக குளங்களின் நீரேந்து பிரதேசங்களில் காணிகளை பிடித்து மக்களுக்கு வழங்கியதாகவும் அதன் தொடர்ச்சியாக மேலும் நிலத்தை அபகரிக்கும் நோக்கோடு குளத்தினுள் மண்ணை போட்டு அதனை மேட்டு நிலமாக உருவாக்கி வீடுகள் உட்பட பல கட்டடங்களையும் அமைப்பதாக தெரிவிக்கும் விவசாயிகள் இவ்வாறு குளங்கள் மூடப்பட்டு வருவதனால் நீர் கொள்ளளவு குளங்களில் குறைவடைந்து வருவதாகவும் நெற்செய்கைக்கு தேவையான நீரை பெற முடியாமையினால் விவசாய நிலத்தின் உரிமையாளர்கள் விவசாய நிலத்தை கட்டடம் அமைப்பதற்காக விற்பனை செய்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இத்துடன் அனுமதி பெறப்படாது கட்டடம் அமைக்கப்படுவது தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் குளங்கள் மூடப்பட்டு வருவது தொடர்பாக கமநல சேவைகள் திணைக்களமும் கவனமெடுக்காமையினால் மேலும் மேலும் குளத்தினை மண் போட்டு நிரப்பும் நிலை அதிகரித்து வருவதாகவும் இன்னும் சில காலத்தில் வவுனியா மாவட்டத்தில் குளங்கள் இல்லாமல் விவசாய செய்கையும் கைவிடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுவர் எனவும் தெரிவித்தனர்.

இதன்காரணமாக விவசாயத்தை நம்பி வாழும் விவசாயிகளின் ஜீவனோபாயம் பாதிக்கப்படுவதுடன் நிலத்தடி நீரும் அற்றுப்போய் விடும் என்பதனால் பட்டினி ஏற்படும் எனவும் தமது விசனத்தை தெரிவித்தனர்.

அண்மைய காலங்களில் வவுனியாவில் வரட்சி நிலை ஏற்படவும் பலரது வீடுகளில் கிணற்று நீர் இன்றி மக்கள் தவித்திருந்ததற்கும் குளங்கள் மூடப்பட்டமையே காரணமென தெரிவித்த விவசாயிகள் இது தொடர்பில் தாம் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வன்னி அபிவிருத்திக் குழு தலைவர் ஆகியோருக்கு அறிவித்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டியதுடன் மேலும் குளங்கள் மூடப்படாது தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்ய அதிகாரிகளும் முன் வர வேண்டும் எனவும் தெரிவித்தனர். (அ-9-266)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 180 | 240 | 200 | 300 |
| தக்காளி | 100 | 110 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 40-50 | 50 | 60 | 70 |
| கரட் | 120 | 80 | 120 | 160 |
| பூசணி | 30 | 30 | 30 | 50 |
| புடோல் | 40 | 50 | 30 | 60 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 80 | 100-140 |
| பெரிய வெங்காயம் | 100 | 60 | 90 | 100 |
| பாகற்காய் | 60 | 80 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40-60 | 40 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 80-100 | 60 | 70 | 80 |
| லீக்ஸ் | 120 | 110 | 100 | 150 |
| பீற்றூட் | 50 | 40 | 60 | 70 |
| கறிமிளகாய் | 160 | 140 | 140 | 150 |
| முருங்கைக்காய் | 350 | 500 | 400 | -- |
| போஞ்சி | 60 | 60 | 60 | 100 |
| கத்தரிதம்புள்ள | 35-40 | 30 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10-20 | 20 | 25 | 30 |
| தேசிக்காய் | 20-40 | 60 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 40-50 | 40-45 |
| இராசவள்ளி | 80 | 120 | 100 | 130 |
| வெங்காயப்பூ | 60 | 100 | 120 | 80 |

# இராசி பலன்

11.02.2013
(தை 29, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
பிரதமை பின்னிரவு 12.3[illegible] மணிவரை
சதயம் பின்னிரவு 5.08 மணிவரை
இராகுகாலம் 8.04-9.34 மணிவரை
சுபநேரம் 12.34-2.04 மணிவரை

**மேடம்** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**இடபம்** சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், சமுதாயத்தில் உயர் நிலைக்கு வரும் எண்ணம் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உற்சாகமான நாள்.

**மிதுனம்** வேலைச்சுமை குறையும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பகை விலகி பாசம் கூடும் நாள், பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**கடகம்** விலையுயர்ந்த பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது, பிறருக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் கூடும்.

**சிங்கம்** உறவினர் வருகையுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தேவைகள் பூர்த்தியாகும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**கன்னி** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வரவேண்டிய பாக்கிகள் வசூலாகலாம், முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், பிள்ளைகளால் பெருமை சேரும் நாள், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்** பணத்தேவைகளை நிறைவு செய்ய நண்பர்களின் ஒத்துழைப்பை நாடுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் அடைவீர்கள், நண்பர்கள் கடைசி நேரத்தில் கை கொடுத்து உதவுவர், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, கௌரவமான நாள்.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும், எடுத்த காரியங்கள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வதன் மூலம் அனுகூலமுண்டு, ஒரு சில வேலைகளை முடிக்க பல மணி நேரம் காத்திருக்க வேண்டி வரலாம்.

**மீனம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மாலை நேரம் மகிழ்ச்சி தரும் விதத்தில் பயணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம், சயன சுகக் குறைவான நாள், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம்; ஜனசக்தி வழங்கும் லைஃவ்சேவர்




இலங்கையின் காப்புறுதித் துறையில் பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாகத் திகழும் ஜனசக்தி, தமது மற்றுமொரு புதிய காப்புறுதித் திட்டமான ஜனசக்தி லைஃவ்சேவர் காப்புறுதித் திட்டத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

வாழ்நாள்முழுவதும் ஓய்வூதிய அனுகூலங்களை அனுபவிக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் காப்புறுதித்திட்டம், காப்புறுதிதாரர் மற்றும் அவரின் வாழ்க்கைத் துணையையும் பாதுகாத்திடும் வகையில் அமைந்துள்ளது.

வாழ்வில் முதிர்வான காலப் பகுதிக்கென பொறுப்பான முறையில், இலகுவாக, வரி விலக்கழிப்புடனான ஒரு சேமிப்பை மேற்கொள்வதற்கான காப்புறுதித் திட்டமாக அமைந்துள்ளது.

இந்தக் காப்புறுதி திட்ட அறிமுகம் குறித்து ஜனசக்தி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைப் பிரிவின் பொது முகாமையாளர் சிஹாரா டி சில்வா கருத்து தெரிவிக்கையில்,

ஜனசக்தி லைஃவ்சேவர் ஓய்வூதிய திட்டமானது, காப்புறுதிதாரர்களுக்கு பல அனுகூலங்கள் வழங்கப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த காப்புறுதித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு வயது வரையறைகள் எதுவுமில்லை. ஒவ்வொரு நபரின் தேவைகளுக்கு அமைய, எவ்வேளையிலும் இந்த திட்டத்தை ஆரம்பிக்கக்கூடிய வசதிகளும் காணப்படுகின்றன. ஜனசக்தி லைஃவ் சேவர் காப்புறுதித்திட்டத்தில் எவ்வேளையிலும் எந்தளவு தொகையையும் (ஆகக்குறைந்தது ரூ.1000) செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே தொழில் புரியும் காலத்தில் தம்மாலான இயன்ற தொகையை தமது முதுமைப்பருவத்திற்கென ஒதுக்கிக் கொள்வதன் மூலம், ஜனசக்தி லைஃசேவர் காப்புறுதிதாரர்கள் உறுதியான வருமானத்தை வாழ்நாள் முழுவதும் பெற்றுக் கொள்ளமுடியும்.

பட்டியலிடப்பட்டுள்ள காப்புறுதி கம்பனிகளிடையே மொத்தமாக 1.49 பில்லியன் ரூபாயை மூலதனமாக கொண்ட காப்புறுதி நிறுவனமாகும்.

இதில் 12.7 பில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்களும் 7 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருடாந்த மொத்த தேறிய தவணைக் கட்டணங்களையும் கொண்டுள்ளது. காப்புறுதிதாரர்களுக்குக்கு 20 பில்லியன் ரூபாயை நட்டஈடாக வழங்கியுள்ளதுடன், ஏ தரம் பெற்ற காப்புறுதி நிறு வனங்களில் உந்துசக்தியையும் கொண்டுள்ளது.

# யாழ்.நகரில் காணி விலை பல மடங்கு அதிகரிப்பு

யாழ்ப்பாண நகரில் ஒரு பரப்பு காணியின் விலை சுமார் 7 முதல் 8 மில்லியன் ரூபாய் வரையில் விற்பனையாவதாகவும், கடந்த 5 வருட காலப்பகுதியினுள் யாழ்.நகரப் பகுதியில் காணியின் விலை 10 மடங்கினால் அதிகரித்துள்ளதாக கே.பி.எம்.ஜி மற்றும் பரிசோதனை புலனாய்வு பிரிவு என்பன இணைந்து மேற்கொண்டிருந்த வளர்ந்து வரும் யாழ்ப்பாணம் என்னும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடலோர பகுதிகளை அண்டிக் காணப்படும் பிரதேசங்களான கசூரினா மற்றும் காரைநகர் ஆகிய பகுதிகளில் ஒரு பரப்பு தற்போது 2 இலட்சம் முதல் 3 இலட்சம் ரூபாயிற்கு கொள்வனவு செய்யக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆயினும்எதிர்வரும்காலங்களில் இந்த பகுதிகளில் காணியின் விற்பனை அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் நிலவுவதாகவும் எதிர்வு கூறியுள்ளது.

மேலும், யாழ்ப்பாணத்தை பொறுத்தமட்டில் சுற்றுலா வசதிகள் போதியளவில் காணப்படவில்லை எனவும்,

இதுவரையில் ஒரேயொரு நட்சத்திர அந்தஸ்துடைய ஹோட்டல் மட்டுமே காணப்படுவதாவும், நயினாதீவு போன்ற பகுதிகளுக்கு அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் நிலையில், தங்குமிட வசதிகளை பெற்றுக் கொள்வதில் அதிகளவு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடிப்படை வசதிகளை கருத்தில் கொள்ளும்போது, விநியோக வலையமைப்பு மற்றும் மின்சார வசதிகள் போன்றன அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

தொழிற்சாலைகள் இயக்குவதற்கு அதிகளவு வினைத்திறன் வாய்ந்த மின்வலு அவசியமாகின்றது. இந்த சவால் நிறைந்த காரணி புதிய முதலீட்டு திட்டங்களுக்கு ஒரு தடையாகவும் அமையக்கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதுப் பொலிவுடன் கொமர்ஷல் வங்கி இணையத்தளம்

COMMERCIAL BANK


அதிநவீன வசதியைக் கொண்ட தனது இணையத்தள சேவையை கொமர்ஷல் வங்கி தொடங்கிவைத்துள்ளது.

இணைய வங்கிச் சேவையை மேலும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் நோக்கில் புதுப்பொலிவூட்டப்பட்டு இந்த இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய மெருகூட்டப்பட்ட இணையத்தளத்தை www.combank.lk மூலம் அடையமுடியும்.

கொமர்ஷல் வங்கியின் பணிப்பாளரும் வங்கியின் பிரதம செயற்பாட்டுப் பணிப்பாளருமான ஜெகன் துரைரட்ணம் இவ் இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தார்.

கடன்பெறல், கணக்குகளைத் திறத்தல், வைப்பு மற்றும் ஏனைய தேவைகளுக்கான படிவங்களை தரவிறக்கம் செய்யும் வசதி மற்றும் இன்னோரன்ன பல வசதிகளுடனும் மேற்படி இணையத்தளம் அமைந்துள்ளது.

# செலிங்கோ லை.'.ப் அறிமுகப்படுத்தும் '5 பெனிபிட் அனுகூல' காப்புறுதித் திட்டம்




செலிங்கோ லைஃப் நிறுவனம் அதன் 25-வது வருடகொண் டாட்டத்தை முன்னிட்டு மிக இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது.

செலிங்கோ லைஃப் 5 பெனிபிட் என்ற பெயரிடப்பட்டுள்ள இத் திட்டம்தற்போது காப்புறுதி செய்து கொண்டுள்ள 15.5 வீதமான மக்கள் தொகையும் தாண்டி ஊடறுத்துச்செல்லும் உருவாக்கப்பட்டுள்ளதாக கம்பனி அறிவித்துள்ளது.

விபத்து மரணத்தின் போது காப்புறுதி செய்த அடிப்படை தொகையிலும் பார்க்க ஏழு மடங்கு அதிகமான தொகையையும் சாதாரண மரணத்தின் போது ஐந்து மடங்கு அதிகமான தொகையும் கடும் நோய்வாய்ப்பட்டுள்ள நிலையில் இரட்டிப்பு மடங்கு அதிகமாகப் பெற்றுக்கொள்ளவும். அதே போல் நிலையான அங்கவீனம் மற்றும் பாதி அங்கவீனம் ஏற்படும் பட்சத்தில் இரட்டிப்பு மடங்கு அதிகமாக பெற்றுக்கொள்ளவும் முடியும்.

காப்புறுதியாளர்தனதுவாழ்க்கைத் துணையும்; இதில் இணைத்துக் கொள்ளலாம்.முதிர்ச்சிநலன் தவிர்ந்த ஏனைய எல்லா நன்மை களையும் அவரும் அனுபவிக்கலாம். காப்புறுயாளரின் பிள்ளைகளுக்கு கடும் சுகவீனத்தின் போது அதற்கான அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இது வாடிக்கையாளர் ஒருவருக்கு மிகவும் இலகுவாகப்புரிய வைக்கக்கூடிய ஒரு காப்புறுதித்திட்டமாகும். அனுகூலங்கள் அனைத்தும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டவை மேலும் முற்று முழுதும் வெளிப் படையானவை என்றார் செலிங்கோ லைப்பின் பணிப்பாளரும் பிரதிப் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான துஷார ரணசிங்க.

ஆயுள் காப்புறுதித்துறை எதிர் நோக்கும் முக்கிய இரண்டு சவால்களையும் கருத்திற்கொண்டு இந்தக் காப்புறுதித்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.( 11.5 வீத சனத் தொகையே காப்புறுதி செய்துள்ளமை மற்றும் ஊழியர் படையில் 29.2 வீதம் மட்டுமே காப்புறுதி செய்துள்ளமை)

என்பனவே இதற்கு காரணமாகும்.

# செலிங்கோவின் விற்பனைப்படை களத்தில்

இம்மாதம் செலிங்கோ லைப்பின் 6ஆவது ஆண்டு காப்புறுதி வாரத்தை முன்னிட்டு அதன் விற்பனைப் படையைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் விற்பன்னர்கள் வீதியில் இறங்கவுள்ளனர்.

மக்களோடு மக்களாக நட மாடியும்; அவர்களோடு பேசியும் இந்த ஊக்குவிப்பில் அவர்கள் ஈடபடவுள்ளனர்.

அதாவது இன்று முதல் எதிர் வரும் 17ம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரையான ஒரு வார காலம் இவர்கள் இலங்கை முழுவதும் உள்ள வீடுகள் தோறும் செல்லவுள்ளனர்.




# பங்குச்சந்தை மற்றும் தங்க விலை நிலைவரம்

வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைந்த கடந்த வார பங்குச் சந்தையின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் முன்னேற்றகரமான நிலையில் நிறைவடைந்திருந்தன.

அனைத்து பங்குதாரர்களினதும் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ள ஒரு விடயமாக இந்த வாரம் மத்திய வங்கியின் மூலம் மீளாய்வு செய்யப்படவுள்ள நாணயமாற்றுக் கொள்கைகளில் பெரியளவில் எதிர் பார்க்கப்படும் கொள்கைப் பெறுமதியில் வீழ்ச்சி, பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்களில் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கை செலுத்துவதாக அமைந்திருக்கும்.

ஆயினும் மத்திய கால நோக்கில் முதலீடுகளை மேற்கொள்வோருக்கு சவாலானதாக அமைந்திருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச்சுட்டெண் 5,850.67 ஆகவும் ஸ்ரீலங்கா 20 சுட்டி 3,271.25 ஆகவும் அமைந்திருந்தன.

பெப்ரவரி 4-ம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்குப் புரள்வு பெறுமதியாக ரூ.5,103, 480, 006 அமைந்திருந்தது.

கடந்த வாரம் மொத்தமாக 21, 300 பங்குக்கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 19,744 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்கள் 1, 556 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் கொமர்ஷல் டிவலப்., செலிங்கோ இன்ஸ்சுரன்ஸ், ஷலிமர், லங்கா செரமிக் மற்றும் பிசி பர்மா போன்றன முதல் ஐந்து சிறந்த இலாப மீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகாளாக பதிவாகியிருந்தன.

பிம்புத்ஃபினாஸ், சிலோன் பிரின்டர்ஸ், சிலோன் லெதர் (உரிமைப் பங்குகள்), பாரகன் மற்றும் ஜி. எஸ். பினாஸ் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிளவு நட்டமீட்டியதாக பதிவாகியிருந்தன.

**தங்கத்தின் விலை**

கடந்த வாரம் தங்கத்தின் விலை 24 கரட் பவுணொன்று 54,300 ரூபாயை அண்மித்து காணப் பட்டதாக தங்கநகை வட்டாரங்ககளின் மூலம் அறிமுடிந் தது.

22 கெரட் பவுணொன்று சராசரியாக 49,800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

கடந்த வாரம் தங்கத்தின் விலையில் விழச்சி ஏற்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5799.69 | 5,850.67 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,196.81 | 3,271.25 ⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 5,103.48

**உயர்வடைந்தபங்குகள்**, கொமர்ஷல் டெவலப்.(73.30),செலிங்கோ இன்சுரன்ஸ் (1000.00),ஷலிமர்(1000.00),லங்கா செரமிக்(67.20),பிசி பார்மா(10.00).

**சரிவடைந்தபங்குகள்** பிமுத் பினான்ஸ்(15.50), சிலோன் பிறிண்டர்ஸ்(1550.00), சிலோன் லெதர்(ஹ)(5.90), பரஹன்(930.70), ஜி எஸ் பினான்ஸ்(625.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 124.68 | 127.93 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 195.49 | 201.51 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 166.35 | 172.17 |
| சுவிஸ் பிராங் | 134.87 | 140.30 |
| கனேடிய டொலர் | 124.18 | 128.90 |
| அவுஸ்திரேலிய டொலர் | 127.36 | 132.46 |
| சிங்கப்பூர் டொலர் | 100.02 | 103.66 |
| ஜப்பான் யென் | 1.32 | 1.37 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.37 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.32 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 500 புகையிரத கடவைகள் பாதுகாப்பற்ற நிலையில்

நாட்டில் தற்போது புகையிரதப் பாதைகளில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் 500 புகையிரதக் கடவைகளுக்கு புதிய புகையிரதக் கடவைகளை பொருத்துமாறு அமைச்சர் குமார வெல்கம அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பாதுகாப்பற்ற நிலையில் இருந்த புகையிரத கடவைகளில் ஏற்பட்ட விபத்துக்களைக் கருத்திற்கொண்டே இத்திட்டத்தை முன்னெடுக்குமாறு கூறியுள்ளார்.

தற்போது ஏராளமான நாடுகளில் பாதுகாப்பற்ற புகையிரதப் பாதைகளில் பாதுகாப்பு கடவைகள் பொருத்துவதற்கு முன்வந்துள்ள போதிலும் கேள்விக் கட்டளைகள் மூலம் பொருத்தமான நாடுகள் தெரிவு செய்யப்படவுள்ளதாக புகையிரதத் திணைக்கள பொது முகாமையாளர் பி.ஏ.பீ.ஆரியரட்ன தெரிவித்துள்ளாா.

மணியொலியும் ஒளிச் சமிக்ஞை முறைமையும் தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் அதனை மேலும் விரிவுபடுத்துவதற்கு இத்திட்டம் மூலம் வழியேற்படுமென புகையிரத திணைக்கள பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வாக்குச் சீட்டுகள் விவகாரம்; ஆணையாளரை சந்திப்பார் கரு

(கொழும்பு)

வாக்குச்சீட்டுகள் மீட்கப்பட்ட சம்பவம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தேர்தல் ஆணையாளரை சந்திக்கவுள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வாக்குச் சீட்டுக்கள் அண்மையில் கிடைக்கப் பெற்றிருந்தன. இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட சில வாக்குச்சீட்டுக்களை தம்மிடம் வைத்துக்கொண்டதாகவும் இவற்றை தேர்தல் ஆணையாளரிடம் காண்பிக்கப் போவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வாக்குச்சீட்டுக்கள் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்தப்பட்டவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொதுவான வேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக புள்ளடியிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களே இவ்வாறு மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சுயதொழில் முயற்சியாக இலுப்பெண்ணெய் வியாபாரம்

(பூந்தோட்டம்)

வவுனியா வீமன் கல் கிராமத்தில் இலுப்பெண்ணெய் வியாபாரம் சுயதொழில் முயற்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறைந்த முதலீட்டில் இலாபம் பெறக் கூடிய வகையில் இருக்கும் இத்தொழிலினை தமது கிராமத்தவர்கள் நீண்டகாலமாக மேற்கொண்டு வருவதாகவும் இதன் மூலம் தமக்கு போதியளவான வருமானம் கிடைப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இலுப்பெண்ணெய் வடிப்பதில் தாம் பழைமையான முறையினையே மேற்கொண்டு வருவதனால் தமது இலுப்பெண்ணெய்க்கு கூடுதல் சந்தை வாய்ப்புள்ளதாக தெரிவிக்கும் வீமன் கல் கிராமத்தில் இலுப்பெண்ணெய் வடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் இதனை ஏனையவர்கள் சுயதொழிலாக மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தனர்.

இலுப்பெண்ணை தயாரிப்பதற்கு மூன்று மாதங்கள் வரை செயன்முறை தேவையுள்ள போதிலும் ஒரு போத்தல் எண்ணெய் 600 ரூபா வீதம்விற்பனை செய்ய கூடியதாகவுள்ளதாகவும் தெரிவித்த இக்கிராம மக்கள் சிறந்த நோய் நிவாரணியாக காணப்படும் இலுப்பெண்ணையை பல பிரதேசத்தவர்களும் தமது கிராமத்திற்கு வந்து பெற்றுச் செல்வதாகவும் தெரிவித்தனர். (அ-9-266)

# எதிர்க்கட்சிகளின் பொதுக்கூட்டமைப்பை உருவாக்க இன்று இணக்கப்பாடு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொதுக்கூட்டமைப்பு தொடர்பான இணக்கப்பாடு இன்று திங்கட்கிழமை எட்டப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இது தொடர்பான விசேட உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்களை நடத்தும் நோக்கில் இந்த புதிய எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்படவுள்ளது.

எளிமையான நிபந்தனைகளின் அடிப்படையில் எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய சோசலிசக் கட்சி, புதிய சமசமாஜக் கட்சி, புதிய இடதுசாரி கட்சி, மவ்பிம தேசிய முன்னணி, ருஹுனு மக்கள் கட்சி, ஐக்கிய மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் கட்சி, தமிழ் முஸ்லிம் தேசிய பேரவை உள்ளிட்ட கட்சிகள் இந்த எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கவுள்ளன.

கூட்டமைப்பு கட்சிகள் ஒன்றையொன்று விமர்சனம் செய்யாது பிரசாரங்களில் ஈடுபடுவது குறித்து இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15, 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பாரியளவில் எதிர்ப்பு பேரணிகள், போராட்டங்கள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)


புதிய கட்டட திறப்பு விழா அழைப்பிதழ்

N.S.R. Ruban Complex




நிகழும் மங்களகரமான நந்தன வருடம் தை மாதம் 29 ஆம் நாள் இன்று திங்கட்கிழமை (11.02.2013) சதய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய பிற்பகல் ஒரு மணி முதல் 2.30 மணி வரையுள்ள சுபவேளையில்,





இல. 01, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள N.S.R. Ruban Complex என்னும் புதிய கட்டடத்தை இறைவன் திருவருள் துணைகொண்டு திறப்பு விழா செய்வதற்கு பெரியோர்கள் நிச்சயித்துள்ளனர்.

பிரதம விருந்தினர் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கட்டடத்தை சம்பிரதாய முறைப்படி திறந்து வைப்பார்கள்.

சிறப்பு விருந்தினர் யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா அவர்கள்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2403)

திரு. நடராசா சத்யரூபன்
உரிமையாளர்: சிறி நதியா நகை மாளிகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லங்கலட்டி வீதியை புனரமைக்க கோரிக்கை

(தெல்லிப்பழை)

கொல்லங்கலட்டி பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதியானது புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலையும் காணப்படுகிறது.


இவ்வீதியால் தினமும் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், பயணிகள் ஆகியோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்ட வண்ணமே பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

இரவு வேளைகளில் இவ்வீதியால் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வீதியிலேயே 768 ஆம் இலக்க பேருந்து பயணிக்கின்றது.

இதன் கிளை வீதிகள் வடக்கின் வசந்தத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட போதிலும் இப்பிரதான வீதியானது புனரமைக்கப்படாமைக்கான காரணம் என்னவென மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இப்பிரதான வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-28)



நன்றி:- ஐலண்ட்

# ஜனாதிபதி யாழிற்கு விஜயம் செய்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பார்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாட்கள் பயணமாக நாளை செவ்வாய்க்கிழமை வருகை தரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார். யாழ்.மாவட்டத்தின் விசேட அபிவிருத்திக் குழுக்கூட்டம் ஜனாதிபதி தலைமையில் யாழ்.ரில்ஹேறா விருந்தினர் விடுதியில் நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதனை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உறுதிப்படுத்தினார்.**

அத்தோடு இந்த விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் உள்ளிட்டவர்களும் பங்கு கொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தக் கூட்டம் தொடர்பில் அழைப்பு விடுக்கப்படவில்லை.

கடந்த வருடம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக்கூட்டத்திற்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர்க்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த அபிவிருத்திக்குழுக் கூட்டம் நிறைவு பெற்றதும் ஜனாதிபதி நயினாதீவுக்கு செல்லவுள்ளார்.

நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஜப்பான் நாட்டின் 2 ஆயிரத்து 800 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 5 மாடிக்கட்டடத் தொகுதியை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார். இந்தத் தகவலை யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா உறுதிப்படுத்தினார்.

இதையடுத்து ஜனாதிபதி சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின்சார உற்பத்தி நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிலையத்தின் ஊடாக யாழ்.குடாநாடு முழுவதும் தடையற்ற மின்சார விநியோகம் இடம்பெறும் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை வலி.வடக்கில் மயிலிட்டி பகுதியில் படையினரால் அமைக்கப்பட்டுள்ள ஹோட்டலையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ்.மாவட்டத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகை தரவுள்ளார் என்ற தகவல் வெளியாகிய பின்பு பல மாற்றங்களை குடாநாடு அடைந்துள்ளது.

நீண்ட காலமாக இழுபறி நிலையிலிருந்த யாழ்.நகரத்தை அண்மித்த வீதிகள் காப்பெற்றிடப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இதனைவிட யாழ். நகரத்திலும் ஜனாதிபதி பயணம் செய்யும் வீதிகளின் மருங்கிலும் அவரது உருவப் படங்கள் புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றன. அத்தோடு ஜனாதிபதியை வாழ்த்தும் வகையில் பதாகைகளும் ஆங்காங்கே கட்டப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவினர் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

ஜனாதிபதி நாளைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளதால் அதற்கு முன்னோடியாக இந்த நாடாளுமன்றக் குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் மீள்குடியேற்றப்பட்ட மக்களையும் இந்தக் குழுவினர் சென்று சந்தித்து கலந்துரையாடவுள்ளதோடு உதவிப் பொருட்களையும் வழங்கவுள்ளனர் என தெரிய வருகின்றது. (அ-6)





## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கண்ணகை அம்மன் ஆலய பூங்காவனம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அந்நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக இரவு 8 மணியளவில் சொல்வேந்தர் பொன் சுகந்தனின் தெய்வீகம் என்னும் தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறும். (அ)


## மாநகர சபை பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தேசிய நுளம்பு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் மாநகர சுகாதார பிரிவின் அனைத்து உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், கிராம சேவையாளர்கள், பட்டதாரி பயிலுநர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு படையினர், தொண்டர்கள், கிராமிய குழுக்கள், சிவில் பாதுகாப்பு குழுக்கள் இணைந்து நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

புகையூட்டல், மருந்து தெளித்தல், குடம்பியினை அழிக்கும் மீன் இனங்களை ஏற்ற குளங்களில் விடுதல், குப்பை கூழங்களை அகற்றுதல், வடிகால் சுத்திகரிப்பு போன்ற நடவடிக்கைகளும் குருநகர், யாழ்.நகர், கொழும்புத்துறை, நாவாந்துறை, வண்ணார்பண்ணை ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன.

இதுவரை 120 பணியாளர்கள் சிறு சிறு குழுக்களாக பிரிக்கப்பட்டு பொது இடங்களிலும் எண்ணாயிரத்துக்கும் மேற்பட்ட வீட்டைத் தரிசித்தும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை முன்னிட்டு வீதிப் புனரமைப்பு பணிகள் அவசர அவசரமாக இடம்பெற்று வருகின்றது. யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அருகில் பலாலி வீதியில் உள்ள கழிவு நீரோடும் வாய்க்காலின் ஓரமாக உரைப்பையினுள் மண்ணினை நிரப்பி அடுக்கி அதற்கு மேற்பகுதியில் வீதி அமைக்கப்படுகிறது. இதனைப் படத்தில் காணலாம். (படம்:- எஸ்.ஆர்.கரன்)

# வெற்றுக்காணிகள் விபரத்தை கோருகிறார் சு.சே. பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள வெற்றுக் காணிகள் தொடர்பான விபரங்களை உடனடியாகப் பெற்று தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் உள்ளூராட்சி மன்றங்களின் பொதுச்சுகாதார அலுவலர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் பணிப்பிற்கமைய இந்தக் காணிகளின் விபரங்களை பொதுச்சுகாதார அலுவலர்களிடம் பணிப்பாளர் கேதீஸ்வரன் கோரியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான காணிகள் வெற்றுக் காணிகளாகவுள்ளன. அவற்றின் உரிமையாளர்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கி வாழ்ந்து வருகின்றனர். பலர் வெளிநாடுகளுக்கு குடும்பங்களுடன் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் காணி விவகாரம் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில் வெற்றுக் காணிகளின் விபரம் திரட்டப்படுகிறது.

மேலும் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் போன்ற நுளம்பினால் பரவக்கூடிய நோய்களின் தாக்கம் அதிகரித்து வருவதனாலும் இந்த வெற்றுக் காணிகளின் விபரம் சேரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் அடர்த்தியாக வாழும் பிரதேசங்களில் வெற்றுக்காணிகள் இருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்தக் காணிகளில் படர்ந்து இருக்கும் பற்றைகளினால் நுளம்பு பெருக்கம் அதிகரித்து காணப்படுவதோடு மக்கள் கழிவுப் பொருட்களையும் கொட்டுவது அதிகரித்து வருகிறது எனவும் கூறப்படுகிறது. (அ-6)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை ஐக்கிய நாணய சங்கத்தின் 80 ஆவது ஆண்டிற்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக க.இராதாகிருஷ்ணன், செயலாளராக ப.அருள்ராஜன், பொருளாளராக வே.சுப்பிரமணியம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாக உறுப்பினர்களாக கு.கருணாநிதி, த.நாராயணன், கு.குகதாசன், திருமதி க.புவனேந்திரன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (அ-5)

* * *

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி பாலர் பகல் விடுதியின் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது தலைவராக செ.பத்மநாதன், செயலாளராக திருமதி உமாதேவி யோகானந்தம், பொருளாளராக பொ.சரவணபவானந்தன், உப தலைவராக சி.பகவத்சிங்கம், உபசெயலாளராக த.பரராசசிங்கம், காப்பாளராக ஐ.சிவராசா ஆகியோரும் மேலும் 4 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-9)

* * *

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருங்கலைகள் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக திருமதி யோ.ஞானாமிர்தம், செயலாளராக செல்வி து.ரேணுகா, பொருளாளராக திருமதி செ.புவனேஸ்வரி, உபதலைவராக ஜெ.அபிராமசுந்தரி, உபசெயலாளராக செல்வி தி.கமலேஸ்வரி, காப்பாளராக த.பரராசசிங்கம், பத்திராதிபராக செல்வி அ.சாயினி ஆகியோரும் மேலும் 6 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனம் குளத்தில் வீழ்ந்தது! மூவர் பலி; 9 பேர் காயம்

(கொழும்பு)

வாகனம் குளத்தில் வீழ்ந்ததில் மூவர் பலியாகியதுடன், 9 பேர் காயம் அடைந்துள்ளனர். அத்துடன் மூவரைக் காணவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் மஹாபாலம் நாயகந்துர வாவியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த நிலையில் 9 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இவர்களில் மூன்று கைக்குழந்தைகள் உள்ளடக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை ஆஞ்சஉல்பத்த எனுமிடத்தில் மரண வீடொன்றுக்கு சென்று திரும்பிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து சம்பவித்துள்ளது. (அ-2)

# ஆசிய காற்பந்து தொடருக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)




வடமாகாணத்தில் உள்ள தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் 40 ஆண்டுகளுக்குப் பின்னான ஓர் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. இலங்கையின் தேசிய அணியில் மகாஜனக் கல்லூரி மாணவி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மகாஜனாக் கல்லூரியில் பயிலும் சானு எனும் மாணவியே அச்சாதனையை நிகழ்த்தியுள்ளார். இவர் மகாஜனாவில் 14 வயதுப் பிரிவில் உதைபந்தாட்ட அணியில் இணைந்து விளையாடி பல சாதனைகளை நிலை நாட்டினார்.

தற்போது யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டிகளில் விளையாடி தன் திறமைகளை வெளிக்காட்டி யாழ். மாவட்டத்தில் இருந்து 14 வயதுப் பிரிவு ஆசியா காற்பந்து தொடரில் விளையாடுவதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை அணியில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு தமிழ் வீரராக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத் திறமைகளை மகாஜனா பழைய மாணவனான சாந்தகுமார், பயிற்றுநர் சத்தியராஜ் ஆகியோர் இணைந்து வெளிக்கொணர்ந்துள்ளனர். (அ)

# மத்திய வங்கி ஆளுநர் பதவி விலக வேண்டும்

## ஐ.தே.க கோரிக்கை

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் திறைசேரியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர ஆகியோர் பதவி விலக வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஊழியர் சேமலாபநிதி மற்றும் த பினான்ஸ் நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையிலான மோசடியான கொடுக்கல் வாங்கல்களுக்கு குறித்த இருவருமே பொறுப்பு என பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

கப்ரால் மற்றும் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழியர் சேமலாபநிதியத்தில் பங்களிப்புச் செய்த பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக குறித்த இருவரும் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

த பினான்ஸ் நிறுவனத்தின் 30 ரூபா பங்குகளை ஊழியர் சேமலாப நிதியம் தலா 50 ரூபா என்ற அடிப்படையில் கொள்வனவு செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென யோகராஜன் மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# மதச் சுதந்திரத்தை பாதுகாக்க விசேட பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது

(கொழும்பு)

ஆன்மீகத் தலங்கள் மற்றும் மதச் சுதந்திரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஏதேனும் சம்பவங்கள் இடம்பெறுமாயின் அது குறித்து உடன் நடவடிக்கை எடுக்க விசேட பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மாறுபட்ட சில மதங்களை பின்பற்றும் மக்கள் வாழ்வதாகவும் மத ஸ்தலங்களில் நிகழும் சம்பவங்கள் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் முறைப்பாடுகள் செய்ய முடியும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. இந்த விசேட பிரிவு நேற்று காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் சேவையானது 24 மணிநேரமும் தொழிற்படும் என அவ் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, மத ஸ்தலங்களில் அல்லது மதம் குறித்து இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்கள் 0113182904 மற்றும் 0113188753 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கும் 0112423944 என்ற தொலை நகல் இலக்கத்திற்கும் முறைப்பாடுகளை அனுப்ப லாம் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர்அலுவலகம்தெரிவித்துள்ளது. (அ-2)

## க.பொ.த உயர்தர மாணவர்கள் பாராட்டுதலும் வாழ்த்துதலும்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று இதர பாடசாலைகளில் 2012 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3A பிரிவில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களைப் பாராட்டுவதுடன் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகவுள்ள அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். 2013.02.14 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலையில் நடை பெறும் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்விற்கு வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். இந்து ஆரம்பப்
பாடசாலை சமூகம். (சி-2401)

## பேருந்து பள்ளத்தில் பாய்ந்தது; 18 பேர் காயம்

ஆடைத்தொழிற்சாலையில் சேவையாற்றுவோரை ஏற்றிக் கொண்டுச் சென்ற பேருந்தொன்று பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் அங்குனுகொல பெலஸ்ஸில் என்ற இடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர்கள் அங்குனுகொலபெலஸ் மற்றும் ஹக்குருவெலஆகியவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)




வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## மனவளக்கலை யோகா

எளியமுறை உடற்பயிற்சிகள்
நோய்களைத் தீர்க்க
நோய் எதிர்ப்பாற்றல் பெருக

சித்தர் அருளிய காயகல்பம்
இளமையாக வாழ
உயிர்வளம் பெருக்க

தியானப் பயிற்சி
அலையும் மனம் அமைதி பெற
மன அழுத்தம், கோபம், கவலைதீர
மனநிறைவோடு வாழ

மனவளக்கலை பேராசிரியர் திருமதி A.லீலாவதி அவர்கள்
(இந்தியா) வழங்குகிறார்கள்
அகத்தாய்வு-I,III பயிற்சிகளும் நடைபெறும்

இடம்: அருளகம், 14/4, முதலாம் ஒழுங்கை,
கோயில் வீதி, யாழ்ப்பாணம்
திகதி: 15.02.2013 4.00 pm
தொடர்புகளுக்கு: 075 7258350, 021 320 2286 (இ)


# கேள்வி அறிவித்தல்-2013
# கரைச்சிப் பிரதேச சபை- கிளிநொச்சி

எதிர்வரும் 26.03.2013 ஆம் திகதி நடைபெறவுள்ள கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், வாகன பாதுகாப்பு நிலையங்களை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கமைய கேள்வி அறிவித்தல் கோரப்படுகின்றது. பொருத்தமானவர்கள் கேள்விப்பத்திரங்களை அரக்கு முத்திரையிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம்:- அலுவலக நாட்களில் 01.03.2013 தொடக்கம் 07.03.2013 வரை.

கேள்விப்பத்திரம் வழங்கும் நேரம்:-மு.ப.8.30 இல் இருந்து 3.30 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி:-11.03.2013 மு.ப. 11.00 மணிக்கு

கேள்வி திறக்கும் திகதி :-11.03.2013 மு.ப. 11.00 மணிக்கு.

கேள்வி திறக்கும் இடம்:- கரைச்சிப் பிரதேச சபை உப அலுவலகம் முரசுமோட்டை

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தலைவர் கரைச்சிப் பிரதேச சபை, உப அலுவலகம், முரசுமோட்டை என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது கரைச்சிப்பிரதேச சபையின் முரசுமோட்டை உப அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டை கொண்டு வருதல் வேண்டும்.

| இல | விபரம் | கேள்விப்படிவ கட்டணம் | கேள்விவைப்பு (மீளளிக்கக் கூடியது) | ஆரம்பக் கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | 500/- | 5000/- | 60000/- |
| 2. | வாகன பாதுகாப்பு நிலையம் | 500/- | 5000/- | 100000/- |

### நிபந்தனைகள்

1. திருவிழாக்காலங்களில் 26,27 ஆம் திகதிகளில் மட்டுமே பாதுகாப்பு நிலையங்கள் அமைந்திருத்தல் வேண்டும்.
2. துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், வாகனம் என்பன தொலையும் சந்தர்ப்பத்தில் குத்தகை எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
3. சுற்று வேலி தாங்களாகவே அமைத்தல் வேண்டும்.
4. கேள்விதாரராக தெரிவு செய்யப்படுபவர் பிரதேச சபையால் குறிக்கப்படும் திகதியில் முழுப்பணத்தினையும் ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும்.
5. ஆரம்ப கேள்வித்தொகைக்கு குறைந்த தொகையில் விண்ணப்பித்தாலோ அல்லது சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்பட்டு குறித்த திகதிக்குள் பணத்தினை செலுத்தத்தவறினாலோ குறித்த நபரின் பெயர் கறுப்பு பட்டியலில் இணைக்கப்படுவதுடன் இவரின் வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

இது. தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற விரும்பினால் கரைச்சிப் பிரதேச சபையின் முரசுமோட்டை உப அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

வை. குகராசா
தலைவர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.


(சி/2400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

366




## கவிஞன் புலமை

அவந்தியில் ஹேமச்சந்திர னென்ற ஒரு கவிஞன் இருந் தான். அவன் போஜராஜனின் சபையிலுள்ள காளிதாசனின் பெருமையையும் புலமையும் கேள்விப்பட்டு அவனை எப்படியும் தோற்கடிப்பது எனத் தீர்மானித்துக்கொண் டான்.

ஒருநாள் அவன் பல்லக்கு ஏறி தனது ஆட்களுடன் தாரா நகரத்தில் ஒரு சத்திரத்தில் இறங்கினான். ஹேமசந்திர னின் புலமை எவ்வளவு என் பதைக் கண்டுகொள்ள காளி தாசன் ஒரு பல்லக்கு தூக்குப வன் போல வேடமணிந்து கொண்டு அச்சத்திரத்திற்குச் சென்றான். கொஞ்ச நேரத் திற்கெல்லாம் ஹேமசந்திரன் பல்லக்கு தூக்குபவர்களைக் கூப்பிடவே காளிதாசனும் அக்கூட்டத்தோடு சேர்ந்து சென்றான்.

ஹேமசந்திரன் பல்லக்கில் ஏறி உட்கார்ந்தும் முன்பக்கம் இருவரும் பின்பக்கம் இரு வருமாக அதைத்தூக்கிச் சென் றனர். முன் இருந்த இருவரில் ஒருவன்தான் மாறுவேடமணி ந்த காளிதாசன். பல்லக்குத் தூக் கிப் பழக்கமில்லாத காளிதாசன் அடிக்கடி தான் சுமக்கும் சுமையை தோளுக்குத் தோள் மாற்றிக் கொண்டிருந்தான். இதைக் கண்ட ஹேமச்சந்திரன் வட



மொழியில் செய்யுளில் உனக் குப் பல்லக்கின் தண்டு வலி யைக் கொடுக்கிறதா? என்று கேட்டான்.

ஹேமசந்திரன் சொன்ன வலி கொடுக்கிறதா?வென உபயோகப்படுத்திய வார்த் தையில் இலக்கணப் பிழை இருந்தது. அதைக்குறிப்பிட்டு பல்லக்கு தூக்கும் காளிதாசன் இந்த வலியைவிட உமது இலக்கணப் பிழையால் காது வலி ஏற்படுகிறது என்றான்.

இதைக்கேட்டு ஹேமசந்திரன் திடுக்கிட்டான். பல்லக்கு தூக் குபவன் வடமொழியில் எவ் விதம் தேர்ச்சி பெற்றானென்று அறியவிரும்பி உனக்கு வட மொழியில் இவ்வளவு புலமை எப்படி ஏற்பட்டது எனக் கேட்டான்.

அதற்கு அவன் நான் காளி தாசனின் பல்லக்கு தூக்குப வன். அவர் தமது சீடர்களுக் குப் பாடம் சொல்லிக் கொடுக் கையில் அவ்வப்போது கேட்ட தால் ஏற்பட்ட ஞானமே இது என்றான்.

காளிதாசனின் பல்லக்கு தூக்குபவனுக்கே இவ்வளவு புலமை இருந்தால் காளிதாச னின் புலமை எவ்வளவோ என நினைத்து ஆச்சரியமடைந் தான் ஹேமசந்திரன்.

உடனே காளிதாசனைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் பிறந்தது. ஹேமசந்தி ரன் தன் வீட்டிற்கு வருவ தைக் கண்ட காளிதாசன் சட் டென வேலைக்காரன் போல உருமாறி வீட்டு வாசலில் நின்றான். அப்போது ஹேம சந்திரன் அவனைப்பார்த்து காளிதாசன் இருக்கிறானா? என்று கேட்க அவனும் பதிலுக்கு வடமொழியில் ஒரு செய்யுளைக் கூறினான்.

புதிய குதிரை மீதேறி கையில் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு அதிவேகமாக நகர வாசலைக்கடந்து போய் விட் டான் என்பதே அதன் பொருள்.

காளிதாசன் வீட்டு வாச லைக் காவல் காப்போன் இவ் விதம் பாண்டித்தியம் பெற்றி ருந்தால் காளிதாசன் எவ்வ ளவு புலமை பெற்றவனோ என நினைத்ததும் ஹேமசந்திரனு க்கு பகீரென்றது. உடனே வந்த வழியே தன் ஊருக்குத் திரும் பிச் சென்றான்.


## அம்புலிமாமா கதைகள்

## உணவா? வேலையா? கல்வியா?

ஒரு சமயம் காஞ்சிப் பேட்டை குருகுலத்தின் குரு வான கபீர்தாஸ் தன் சீடர் களுக்கு ஒரு சோதனை நடத் தினார். மூன்று அட்டைப் பெட்டிகளை அவர்கள் முன்னே வைத்தார். ஒன்றில் உணவு என்றும் மற்றொன்றில் வேலை என்றும் மற்றொன்றில் கல்வி என்றும் எழுதப்பட்டி ருந்தது. அவர்களிடம் சீடர் களே! கவனியுங்கள்! இந்த மூன்று விடயங்களில் எதில் உங்களுக்கு அதிக ஈடுபாடோ அந்தப் பெட்டியிலிருந்து ஒரு காகிதத் துண்டை எடுங்கள் என்றார். அவ்வாறே அவர் கள் செய்தபின் அவர்களை அவர்கள் தேர்வு செய்த தலைப்புக்கேற்ப பெட்டிக்கு அருகே அணியணியாக நிற்கச் சொன்னார். உணவு அணியில் பெரும்பாலான மாணவர்களும் அடுத்தபடியாக வேலை அணி யின் சிலரும் நிற்க ஒருவன் மட் டும் கல்வி அணியில் நின்றான்.

நீ ஒருவன் மட்டுமா இதைத் தேர்ந்தேடுத்தாய்? என்று குரு கேட்க அந்த மாணவன் கல்வி யின் மூலம் எனக்கு நல்ல வேலை கிடைக்கும் அதன் மூலம் உணவும் கிடைக்கும் என்றான்.

சபாஷ், சரியான பதில்! என்ற குரு ஏனைய மாணவர்களை பார்த்து ஆர்வமின்றி கல்வி பயில் வதில் பயனில்லை. மாணவர்க ளாகிய நீங்கள் கல்விக்கு மட் டுமே முக்கியத்துவம் தரவேண் டும். அவ்வாறு முழுக்கவனத் துடன் கல்வி பயின்றால் ஏனைய இரண்டும் தாமே உங் களைத் தேடி வரும். உணவு உண்டவுடனே சீரணமாகி மறை யும். உடலில் சக்தியுள்ள வரை மட்டுமே வேலை செய்ய முடி யும். ஆனால் நீங்கள் கல்வியி னால் பெறும் அறிவு உயி ருள்ளவரை உங்களுடனே நிலைத்திருக்கும். அதனால் கல்வி ஒன்றுதான் என்றும் அழியாத உன்னதமான செல்வம் என்று விளக்கம் அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடிமரத்தின் முண்டு முடிச்சுகளைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தாள் எமிலி. தன் மரணத் தேதி குறிக்கப்பட்டது தெரியாமல் பச்சைக் குழந்தையாய் சிரித்துக் கொண்டிருக்கும் மரத்தின் அந்திமப் புன்னகையை படமெடுத்தாள்.

♦ ♦ ♦ ♦ ♦

பெட்டிக்கடைகளும் தேநீர் நிலையங்களும் சிற்றுண்டிச் சாலைகளும் இளநீர்க் கடைகளும் சாலை ஓரத்து ஆலமர நிழலில் மொத்தமாய் முளைத்திருந்தன.

கடைகளை நோக்கி நகர்ந்தார்கள் மூவரும்.

"தென்னிந்தியத் தேநீர் குடிக்கிறீர் களா?" என்றான் சின்னப்பாண்டி.

"இல்லை நீங்கள் இங்கு தான் சிரித்தேன். சரி... தேநீர் வேண்டாம் இளநீர் சாப்பிடுங்கள்."

இளநீர்க்காரரர் அரிவாள் மூக்கு முனையில் ஒரு கொத்துக் கொத்தி அலட்சியமாய் எடுப்பதையும் 'சொன்னபடி கேள்' என்று சொன்னபடி அதை இடக்கையில் ஓர் உருட்டு உருட்டி அதன் தலைப் பக்கம் சீவுவதையும் வெள்ளிக் காசுகளை வீசி எறிவது போல் சீவப்பட்ட மட்டைகள் செதில் செதிலாய்ச் சிதறி விழுவதையும் கூர்மையாய்ச் சீவிச்சீவி பருப்பின் பதங்கண்டு அரிவாள் நுனியில் கண்திறந்து இளநீரில் ஒரு சொட் டும் சிதறாமல் இடக்கையிலிருந்து அதை வலக்கைக்கு தூக்கி எறிந்து "இந்தா சாப்பிடு" என்று எடுத்து நீட்டுவதையும் ஒரு கலைக்காட்சி போல் எமிலியும் இஷிமுராவும் கண்டு களித்துக் கொண்டிருந்த போது, அவர்களின் காதுகளை நிரப்பிக்

"பைசா இல்லாத பரதேசி-நான்
பன்னண்டு மாசமும் சுகவாசி
எல்லார்க்கும் ஆசையெல்லாம்
தென்னாட்டு மலையளவு
எனக்குள்ள ஆசையெல்லாம்
திருவோட்டுக் குழியளவு

தூக்கத்தை வித்துவித்து
சொத்துப்பத்து வாங்குறியே
சொத்துப்பத்து செலவளிச்சு
தூக்கத்தை வாங்குவியா?

சொத்துப்பத்து வித்துப்புட்டேன்
சொந்தம் பந்தம் விட்டுப்புட்டேன்
எச்சித் திருவோட்டை
எறிய மனம் கூடலையே

கருவோடு பிறக்கையிலே
கையோடு பொருளில்லை
திருவோடு துறக்காம
நானொண்ணும் துறவியில்ல"

# மூன்றாம் உலகப்போர்

42

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

"எங்கே போகிறோம்" என்றான் இஷி.

"எங்கள் கிராமத்துக்கு" என் றான் சினனப்பாண்டி.

"அப்படியா?" ஆச்சரியம் காட்டினாள் எமிலி.

"நிறுத்துங்கள்! தயவு செய்து காரை நிறத்துங்கள்!" என்று பதறிய எமிலியின் குரல் கேட்டு திண்டுக்கல் குமுளி நெடுஞ் சாலையில் பறந்து கொண்டிருந்த கார், சாலையில் இடப்பக்கம் இறங்கி நின்றது. ஒரு புளிய மரத்தை ஒட்டியும் உரசாமலும்.

புளியமரம் எங்கள் பூர்வீகம் என்பது மாதிரி கிளைகளில் விளையாடிக்கொண்டிருந்தன ஏழெட்டுக் கிளிகள்.

பச்சைச் சிறகுகள் கிளையோடு கரைந்துபோக, அலகாலும் ஒலியாலும் அடையாளம் காணப்பட்ட தமிழ்நாட்டுக் கிளிகளோடு ஆங்கிலத்தில் உரையாடிப் படமெடுத் தாள் எமிலி.

"பறவைகளின் தாய் வீடே... நீ வாழ்க!" மரத்துக்கு ஒரு வணக்கமிட்டாள்.

"எமிலி... இனி இந்த மரங் களை உன் புகைப்படத்தில் மட்டுமே பார்க்கமுடியும்" கவலை யோடு சொன்ன சின்னப்பாண்டி யின் குரல் கறுப்படித்தது.

"ஏன்?" பதறினாள் எமிலி.

"நான்கு வழிச் சாலைக்காக இந்த மரங்களெல்லாம் வெட்டப்பட



காற்றில் ஆடும் கிளை இலை தவிர மனித அசைவுகளையே கட்டிப்போட்ட அந்தப்பாட்டின் பொருள் என்ன என்றார்கள் எமிலியும் இஷிமுராவும்.

சொல்லுக்குச் சொல் என்றில்லாமல் அதன் உள்ளீட்டை மட்டும் மொழிபெயர்த்துச் சொன்னான் சின்னப்பாண்டி.

ஒரு பரதேசியின் பாட்டில் இத்துணை தத்துவ விலாசமா? ஒரு பண்டாரப் பாட்டில் இத்துணை அறிவின் விசாலமா? திருவோடு கூட உடைக்கப்படவேண்டிய உடமையா? அந்தத் தத்துவ அதிர்ச்சியிலிருந்து விடுபட வெகு நேரமாயிற்று எமிலிக்கும் இஷி முராவுக்கும்.

"ஆங்கிலக்கவி ஆர்.எல் ஸ்டீபன்ஸனைத்தான் நாங்கள் கொண்டாடித் திரிகிறோம்.

# 'திருவோடு துறக்காம நானொண்ணும்...'

விருக்கின்றன."

"என்ன இது? முகத்தைச் சமன் செய்வதற்காக மூக்கை அறுப் பதா?" என்றான் இஷி.

"ஒரு மரம் வெட்டப்படுவதற்கு முன்னால் மூன்று மரங்கள் நாட்டப்பட வேண்டும் என்பதை உலக அரசுகள் சட்டமாக இயற்ற ஒப்புக் கொள்ள வேண்டும்" என் றாள் எமிலி.

"இந்தச் சாலைகளால் லாபம் முதலாளிக்கும் மூலதனக்காரர்களுக்கும். நஷ்டம்-ஏழை களுக்கும் மரங்களுக்கும்" வருந்தனான் இஷி.

பருகுவது தேநீர் இல்லை. தேயிலையின் நறுஞ்சாரம் மட்டும்தான் தேநீர். நீங்கள் சர்க்கரையும் பாலும் ஊற்றித் தேநீரைக் கொன்று குடிக்கிறீர்கள்."

வாகன இரைச்சல்களுக்கு மேலாய் வாய்விட்டுச் சிரித்தான் சின்னப் பாண்டி.

"என்ன சொல்லிவிட்டேன்? ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?" என்றான் இஷி.

"பாலூற்றித் தேநீரைக் கொல்கிறோம் என்கிறீர்களே... சாகப்போகிறவன் வாயில் இறுதியாக பால் ஊற்றகிற இந்துக்களின் கலாசாரம் உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கவனத்தை ஈர்த்தது, ஒரு பரதேசியின் பாட்டு.

பெட்டிக்கடைக்கும் தேநீர்க் கடைக்கும் இடையில் இருந்த ஒரு மண் மேட்டில் நரைத்தும் நரைக்காத பரட்டைத் தலையும் தாடியுமாய் உடம்பில் ஒட்டிய ஒட்டுக்காவித் துணியோடு பிசுக்கடிக்கும் அழுக்கு மேனியோடு பிசிறடிக்காத பெருங்குரலில் இந்த உலகத்தையே தன்காலடியில் போட்டு மிதித்துத் துவைத்தபடி அவனுக்கே பேர் தெரியாத சாருகேசியில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தான் பரதேசி.

சில வினாடிகள் செய்தொழில் நிறுத்தி மொத்தக்கூட்டமும் காது கொடுத்தது பரதேசிப் பாட்டிற்கு.

"நட்சத்திரங்கள்
பார்த்தவண்ணம்
ஒரு புதர்ப்படுக்கை
உண்டு களிக்க
நதியில் நனைத்த ஒரு
ரொட்டித்துண்டு

என்னைப் போல் ஒருவனுக்கு
எப்போதும், போதும்
இந்த வாழ்க்கை"

இப்படி எழுதிய எங்கள் ஆங்கிலக் கவியைத் தன் திருவோட்டுக் கவியில் அடக்கம் செய்துவிட்டார் உங்கள் பரதேசி. நெற்றியில் விழுந்தாடிய முடியை ஒதுக்கவும் மறந்தவளாய்த் தன்னை மறந்து தன் நாமம் கெட்டாள் எமிலி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடைகளின் உணவாக வெட்டுப்புல்லும் அதன் பராமரிப்பும்

பண்ணையாளர்களுக்கு பசும் புல்லைக் கொடுத்து உற்பத்தியை இலாபகரமான முறையில் அதிகரிக்க கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் புல் வெட்டுத்துண்டங்களை வழங்கி வருகின்றது.

அசையூண் இரைப்பையைக் கொண்டுள்ள கால்நடைகள் ஐதுத்தீனை வினைத்திறனாகப் பயன்படுத்தி அதிகளவு உற்பத்தியைக் கொடுக்கும் ஆற்றலுடையவை. கால்நடைகளுக்கான உணவைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமத்தைக் குறைக்கவும் அடர்வுத்தீனுக்கான செலவைக்குறைக்கவும் புதிய இன புல்துண்டங்களை பயிரிடுவதன் மூலம் பசும்புல்லை உற்பத்தியாக்கி கால்நடை உற்பத்தியில் இலாபத்தை பெற்றுக் கொள்வதற்காக விவசாய பீடம். கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம் மற்றும் மிருக வைத்திய ஆராய்ச்சி நிறுவனம் வழங்கும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள பண்ணையாளர்கள் முன்வர வேண்டும். பொருத்தமான புல்வெட்டுத்துண்டங்களைப் பெற்று சிபாரிசு செய்யப்பட்ட முறைகளில் பராமரித்து உரிய காலத்தில் அறுவடை செய்வதன் மூலம் புல் உற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும்.

அட்டவணை 01

| புல்லினங்கள் | முரட்டுப்புரதம் (%) (Crude Protein) | விளைச்சல்(உலர் நிறை) Yield( Dry Matter) (Kg/Ha/year) |
|---|---|---|
| கினி A Panicum maximum (Ecotype- A) | 10-12 | 10,000-12,000 |
| கினி B Panicum maximum (Ecotype- B) | 12 | 29,000 |
| நேப்பியர் Pennisetum purpureum | 12-14 | 20,000-40,000 |
| Co-3 Hybrid Napier | 9-15 | 30,000-75,000 |
| Co-4 Hybrid Napier | 10.5 | 65,000 |

எமது பிரதேசத்திற்கென சிபாரிசு செய்யப்பட்ட சில வெட்டுப் புல் இனங்களாவன கினி A, கினி B, நேப்பியர் மற்றும் கோயம்புத்தூர் -3 (CO-3), கோயம்புத்தூர் -4 (CO-4) என்பனவாகும். கினி B யானது கினி A யிலிருந்து பெறப்பட்ட ஓர் மேம்படுத்தப்பட்ட புல்லினமாகும். இக்கினிவர்க்கங்கள் அதிக வரட்சியையும் நிழலையும் தாங்கி அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடிய சிறப்பியல்பைக் கொண்டுள்ளன. அத்துடன் கினி வர்க்கங்கள் பாதகமான காலநிலையிலும் அதிகளவில் tillers (மட்டம் வெடித்து) ஐ உற்பத்திசெய்து அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடிய ஓர் பல்லாண்டுப் பயிரினமாகும்.

நேப்பியர் புல்லின் வர்க்கமானது சிறிய அளவிலான உற்பத்தியாளர்களிலிருந்து பாரிய அளவிலான உற்பத்தியாளர்கள் வரை பயிர் செய்யக் கூடிய ஓர் இனமாகும். இப்புல் வர்க்கமானது அதிக வரட்சியான காலப்பகுதியிலும் துரிதமாக வளர்ச்சியடைந்து அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடியது.

புல்லினங்களிலிருந்து பெறப்படும் ஓரலகு நிலப்பரப்பிற்கான விளைச்சலை அதிகரிக்கவும். அதன் போசாக்கினை அதிகரிப்பதற்காகவும் நேப்பியர் இனங்களிலிருந்து கலப்பின பிறப்பாக்கத்தின் மூலம் உருவாக்கப்பட்ட புல் வர்க்கங்களே CO-3 மற்றும் CO-4 ஆகியனவாகும். இக்கலப்பினப் பயிர்கள் எமது பிரதேசத்தில் (தாழ்நாட்டு உலர் வலயம்) துரிதமாக வளர்ச்சியடைந்து அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடியன.

அத்துடன் இவை மாடுகளினால் அதிகளவில் விரும்பி உண்ணப்படுகின்றன. வெட்டுப்புற்களின் விளைச்சல் (உலர் நிறை) மற்றும் அவற்றினுடைய முரட்டுப் புரதத்தின் அளவு ஆகியன அட்டவணை 1 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வெட்டுப்புற்களை பதியமுறை இனப்பெருக்கத்தின் மூலம் உற்பத்தி செய்வதற்கான வெட்டுத்துண்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வெட்டுத்துண்டத்தைப்பெறவேண்டிய பொருத்தமான பதியப்பகுதி, நடுகை இடைவெளி மற்றும் துண்டங்களின் எண்ணிக்கை என்பன அட்டவணை 2 இல் கொடுக்கப்பட்டுள்ளன. துண்டங்கள் மூலம் பயிரிடும்போது அவை உலர்வடைய முன் நாட்டப்படல் வேண்டும். உடனடியாக நடுவதற்கு இயலாமலிருப்பின் வெட்டுத்துண்டங்களை சாக்கினால் மூடி நன்கு நீரைத்தெளித்து ஈரலிப்பாக வைத்திருக்கலாம்.

அட்டவணை 02

| புல்லினங்கள் | பொருத்தமான பதியப்பகுதி | நடுகை இடைவெளி (cm) | ஒரு குழியில் நடவேண்டிய துண்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கினி வகை (கினிA, கினி B) | வேர்த்துண்டம் | சமதள திறந்த பிரதேசம் 60×45<br>சமதள நிழல் பிரதேசம் 45×30<br>சரிவான திறந்தவெளி 45×30<br>சரிவானநிழல் பிரதேசம் 30×30 | 3 |
| நேப்பியர் மற்றும் கலப்பு நேப்பியர் $(Co_3, CO_4)$ | துண்டுத்துண்டம் வேர்த்துண்டம் | சமதள திறந்த பிரதேசம் 75×60<br>சமதள நிழல் பிரதேசம் 60×45<br>சரிவான திறந்தவெளி 60×45<br>சரிவான நிழல் பிரதேசம் 60×30 | 1 |

ஏனைய பயிரினங்களைப்போன்றே வெட்டுப் புல்லினங்களை பயிர்செய்யும்போதும் நிலம் பண்படுத்தல் அவசியமாகும். புல் வளர்ப்பை மழைகாலத்தில் ஆரம்பிப்பது உகந்ததாகையால் நிலம் பண்படுத்தலானது அதற்கு ஏற்றாற்போல் அமையவேண்டும். பாரிய அளவிலான உற்பத்தியாயின் கலப்பையை பயன்படுத்தலாம். சிறிய அளவிலான உற்பத்தியாயின் மண்வெட்டியினால் தரையைக் கொத்திபின்முள்ளியைப்பயன்படுத்திபாரியமண் கட்டிகளை சிறு துணிக்கைகளாக்க வேண்டும்.

நிலத்தைப் பண்படுத்திய பின்னர் அடிக்கட்டுப் பசளையை மண்ணிற்கு இடுதல் வேண்டும். அதற்காக இரசாயன அல்லது சேதனப் பசளையை உபயோகிக்க முடியும். இரசாயனப் பசளையை பயன்படுத்துதல் வினைத்திறனானது. எனினும் அது உற்பத்திச் செலவை அதிகரிக்கும். எனவே இதற்காக மாட்டுச்சாணம், கோழிக்கூட்டுக்கூளம் மற்றும் பண்ணைக் கழிவுகளை ஒரு சதுர மீற்றருக்கு ஒரு கிலோகிராம் என்ற அளவில் இடுதல் வேண்டும். இரசாயன பசளையை பயன்படுத்துவதாயின் பொதுவாக ஹெக்ரயர் ஒன்றிற்கு யூரியா (100 கிலோகிராம்), மியூறியேற் பொட்டாசு (60 கிலோகிராம்), ட்ரிப்பில் சுப்பர் பொஸ்பேற் (75 கிலோ கிராம்) என்ற அளவில் இடுதல் வேண்டும்.

பண்படுத்திய நிலத்தில் பெறப்பட்ட வெட்டுத்துண்டங்களை சிபாரிசு செய்யப்பட்ட இடைவெளிகளில் நடுதல்வேண்டும். தொடர்ச்சியாக சிறந்த விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கு சிறந்த பராமரிப்பு அவசியமாகும். நாட்டப்பட்ட அனைத்து வெட்டுத்துண்டங்களும் ஒரே நேரத்தில் முளைக்காது. எனவே நாட்டிய பின்னர் அவற்றை அவதானித்து முளைக்காத துண்டங்களுக்குப் பதிலாக 10 நாட்களின் பின் புதிய துண்டங்களை நாட்டுதல் வேண்டும். இப்புற்களுடன் களைகளும் போட்டியிட்டு வளர்வதனால் துண்டங்கள் நாட்டப்பட்ட நாள் முதல் களைகள் பற்றி மிக அவதானமாக இருக்கவேண்டும். சிறிய அளவான களைகள் காணப்படின் கைகளினால் பிடுங்குவதன்மூலமோ அல்லது மண்வெட்டியினால் வெட்டியோ களைகளை அகற்றலாம். இல்லையேல் களைநாசினிகளை பயன்படுத்தல்வேண்டும். ஆனால் அது மிகவும் செலவு கூடிய முறையாகும்.

ஒவ்வொரு அறுவடையின் பின்னரும் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஒரு சதுர மீற்றர் பரப்பிற்கு ஒரு கிலோகிராம் என்ற அளவில் சேதனப் பசளையை இடுதல் வேண்டும். அசேதனப் பசளையை உபயோகிப்பதாயின் ஒருவருடத்திற்கு யூரியா (500 கிலோகிராம்), ட்ரிப்பில் சுப்பர் பொஸ்பேற் (175 கிலோகிராம்), மியூறியேற் பொட்டாசு (150 கிலோகிராம்) என்ற அளவில் இடுதல் வேண்டும். யூரியாவை ஒரேயடியாக இடாது வருடம் ஒன்றிற்கு 4 தடவைகள் எனும் வீதத்தில் இடுதல் பயனுடையதாகும்.

மிருக வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தினால் (2004ஆம் ஆண்டு) சிபாரிசு செய்யப்பட்ட (Co-3) புற்களுக்கு வழங்கப்படவேண்டிய பசளையின் அளவு அட்டவணை மூன்றில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 03

| பசளையிடும் காலப் பகுதி | பசளையின் வகை | பசளையினளவு (Kg/ha) | பசளையினளவு (g/தாவரம்) |
|---|---|---|---|
| துண்டங்கள் நாட்டப்பட முன்னர் | சேதனப்பசளை (பண்ணைக்கழிவு மாட்டுச்சாணம், கோழிக்கூட்டு கூளம்) | 15,000 | 1500 |
| துண்டங்கள் நாட்டப்பட்டு 7-10 நாட்களின் பின்னர் | யூரியா<br>ட்ரிப்பில்சுப்பர்பொஸ்பேற் (TSP)<br>மியூரியேற் பொட்டாசு (MP) | 200<br>120<br>100 | 20<br>12<br>10 |
| முதலாவது அறுவடையின் பின்னர் (துண்டங்களை நாட்டி 2 மாதங்களின் பின்னர்) | யூரியா<br>ட்ரிப்பில்சுப்பர்பொஸ்பேற் (TSP)<br>மியூரியேற் பொட்டாசு (MP) | 100<br>275<br>225 | 10<br>25<br>20 |
| ஒவ்வொரு அறுவடையின் பின்னரும் (35-45 நாட்கள் இடைவெளி) | யூரியா | 100 | 10 |

இவ்வாறு வளர்க்கப்படும் புல்லானது குறித்த காலப்பகுதியில் குறித்த உயரத்தில் வெட்டப்படுதல் மிகவும் அவசியமாகும். தவறும் பட்சத்தில் புற்களின் தொடர்ச்சியான வளர்ச்சி குறைவடைவதுடன் அடுத்துவரும் அறுவடையும் பாரிய அளவில் பாதிக்கப்படும். கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் (2003 ஆம் ஆண்டு) சிபாரிசு செய்யப்பட்ட வெட்டுப்புற்களின் இரு அறுவடைகளுக்கிடையே பேணப்படவேண்டிய காலப்பகுதியும் நிலமட்டத்திலிருந்து புற்கள் வெட்டப்படவேண்டிய உயரமும் அட்டவணை 4 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 04

| புல்லினங்கள் | புல்லினங்களை நில மட்டத்திலிருந்து வெட்டப்பட வேண்டிய உயரம் | இரு அறுவடைகளுக்கிடைப்பட்ட கால இடைவெளி |
|---|---|---|
| கினி வகை (கினிA, கினி B) | 3 அங்குல உயரம் | 45 நாள் |
| நேப்பியர் மற்றும் கலப்பு நேப்பியர் | 4 அங்குல உயரம் | 30-45நாள் |

புல் அறுவடை செய்யும் காலமானது குறித்த காலத்திலும் பார்க்க காலம் தாழ்த்தப்படுமாயின் அவை முதிர்ச்சியடைவதால் விலங்குகளினால் விரும்பி உண்ணப்படும் அளவு குறைவடைவது மட்டுமன்றி சமிபாடடையும் வீதத்திலும் பாதிப்பையேற்படுத்தும். புற்கள் குறித்த காலத்திற்கு முன்பே அறுவடை செய்யப்படின் பெறப்படும் விளைச்சலானது அதிக அளவில் பாதிக்கப்படும். இதேபோல் அறுவடை செய்யும் உயரமும் பயிரின் விளைச்சலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. புற்கள் அதன் அறுவடைக்காக சிபாரிசு செய்யப்பட்ட உயரத்திலும் பார்க்க கூடிய உயரத்தில் வெட்டப்படின் தொடர்ச்சியான வளர்ச்சிக்குரிய அரும்புகள் தடிப் படைவதுடன் அடியிலிருந்து உருவாகும் புதிய அரும்புகளின் உருவாக்கமும் பாதிக்கப்படும்.

எனவே மேற்குறிப்பிட்ட முறைகளைப் பின்பற்றி வெட்டுப்புற்களை எமது பிரதேசத்தில் பயிர் செய்வோமேயானால் அதிக விளைச்சலை பெறுவது மட்டுமன்றி கால்நடை உற்பத்தியிலும் இலாபகரமான முறையில் அதிகரிப்பை ஏற்படுத்தமுடியும்.

செல்வி. ச.நவரட்ணம்
விலங்கு விஞ்ஞானத்துறை,
விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்திடமிருந்து கடனை எதிர்பார்க்கிறது அரசு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2013 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்னர் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையை பெற்றுக் கொள்ள இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த கடன்கள் இலங்கை மத்திய வங்கியின் ஊடாக பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் இந்தக் கோரிக்கையை அடுத்து சர்வதேச நாணய நிதியம் இது குறித்து ஆராய்ந்து வருகிறது.

நடைமுறை பாரிய பொருளாதார சுமையை சீர்செய்வதற்காகவே இந்தக் கடன் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக அரசாங்கத் தீர்ப்பு தெரிவிக்கிறது.

ஏற்கனவே இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.5 பில்லியன் டொலர்களை கடனாக பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இந்திய ரோலர் படகால் வடக்கு மீனவர்கள் பாதிப்பு

## கடல்வள ஆராய்ச்சி மத்திய நிலையம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளினால் வடமாகாண மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக எம்ஜட்ர்டேமை தளமாக கொண்ட கடல்வள ஆராய்ச்சி மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையப் பணிப்பாளர் மார்டின் பாவின்ங் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் இந்திய மீனவர்கள் வடமாகாணத்தின் கடற்பரப்பை ஆக்கிரமிக்க ஆரம்பித்துள்ளனர். தென்னிந்தியாவில் சுமார் 5 ஆயிரத்திற்கும் அதிகமான ரோலர் படகுகளில் மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினையே தமது மீன்பிடி தேவைகளுக்கு நம்பி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையின் வட பகுதியைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் தமது வாழ்வாதாரத்துக்காக வடமாகாண கடற்பரப்பை நம்பியுள்ளனர்.

ஒவ்வொரு நாளும் தமிழகத்தின் இராமேஸ்வரம் மற்றும் நாகபட்டினம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் வடமாகாண மீனவர்கள் வாழ்வாதாரத்தை சூறையாடிச் செல்வதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதற்கு உடனடி தீர்வு ஒன்று காணப்படுவது அவசியம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# ஜி.எஸ்.பி. சலுகைக்கு இலங்கை மீண்டும் விண்ணப்பிக்கவுள்ளது!

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்காக இலங்கை மீண்டும் விண்ணப்பிப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகிறது.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் இதற்கான விண்ணப்பம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை 2010 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தினால் திரும்பப் பெறப்பட்டது. இதன் காரணமாக 1.5 பில்லியன் டொலர் பெறுமதியான சலுகையை இலங்கை இழந்தது. இதனையடுத்து இலங்கையில் ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதுடன் வேலையற்றோர் வீதமும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையிலேயே இலங்கை அரசாங்கம் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைக்காக விண்ணப்பிக்கவுள்ளது. (அ-2)

# பெண்களை பாதுகாக்க பொலிஸ் கண்காணிப்பாம்

(கொழும்பு)

கொழும்பில் இரவு நேரங்களில் பயணிக்கும் பெண்களை பாதுகாக்கும் பொருட்டு பொலிஸ் கண்காணிப்புகள் அதிகரிக்கப்படவுள்ளன.

முச்சக்கரவண்டி குழு ஒன்று அண்மையில் பெண் ஒருவரைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவத்தை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பொலிஸார் இரவு நேரங்களில் முச்சக்கரவண்டிகளின் நடமாட்டங்களை அவதானிக்கவுள்ளனர்.

குறித்த பொலிஸ் கண்காணிப்புகள் பொதுவாக பெண்கள் பணியாற்றும் இடங்களில் தீவிரப்படுத்தப்படவுள்ளன. இதேவேளை, முச்சக்கரவண்டிகளிலேயே பெரும்பாலும் பெண்களுக்கு எதிரான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக பொலிஸ் விசாரணைகள் தெரிவித்துள்ளன.

2012 ஆம் ஆண்டு இலங்கையில் ஆயிரத்து 920 பாலியல் வல்லுறவு சம்பவங்கள் இடம்பெற்றன. 2011 ஆம் ஆண்டில் ஆயிரத்து 871 பாலியல் வல்லுறவு சம்பவங்கள் இடம்பெற்றன. (அ-2)

# இலங்கைக்கு எதிராக ஏழு நாடுகள் சதித்திட்டம்

(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக ஏழு நாடுகள் சதித்திட்டங்களை தீட்டி வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

டியூனிசியா, உருகுவே, ஈக்வடோர், கொஸ்டாரிக்கா, லெட்வியா, ஸ்லோவக்கியா மற்றும் ஒஸ்ட்ரியா ஆகிய நாடுகளே இவ்வாறு இலங்கைக்கு எதிராக சதித்திட்டம் தீட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர முயற்சிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகளில் ஐந்து நாடுகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவை. சர்வதேச நீதிமன்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடாத காரணத்தினால் இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஒருவருட காலத்தில் 3 இலட்சம் திவிநெகும கணக்குகள் ஆரம்பிப்பு

## பாராட்டுகிறார் பசில்

(கொழும்பு)

ஒருவருட காலத்தினுள் 3 இலட்சம் திவிநெகும கணக்குகளை புதிதாக ஆரம்பிப்பதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கியினால் முடிந்துள்ளது. திவிநெகும திட்டத்தின் உத்தியோகபூர்வ வங்கியாளனாக மாறியுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கி யினால் இவ்வாறு மூன்று இலட்சம் கணக்குகளை புதிதாக ஆரம்பிக்க முடிந்துள்ளதை தாம் பெரிதும் பாராட்டுவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மூன்று இலட்சம் கணக்குகளை ஆரம்பித்தவர்கள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும் தமது சுய முயற்சியினால் முன்னேறுவதற்கு முயற்சித்து வருகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களாகவும் காணப்படுகின்றனர் என்றார்.

இவ்வாறு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மூன்று இலட்சம் கணக்குகளின் வைப்புத் தொகையானது 280 மில்லியன் ரூபாவாக காணப்படுவதாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவர் திருமதி கேஷலா ஜயவர்த்தன தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், இவ்வாறு ஒன்று திரட்டப்பட்ட நிதியுடன் மேலும் நிதியினை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் முன்னேற்றத்திற்காகவே பயன்படுத்தப்படும்.

ரணவிரு திவிநெகும, லொத்தர் திவிநெகும உள்ளிட்ட பல்வேறு துறைகள் உள்ளடக்கப்படும் வகையிலேயே இக்கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார். (அ-2)

# என்னுடைய பக்குவத்தை சிலர் பலவீனமாக எண்ணுகின்றனர்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

நான் எதனையும் பக்குவமாக செய்ய நினைக்கிறவன். ஆனால், என்னுடைய பக்குவத்தை சிலர் பலவீனமாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என மு.கா.வின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அம்பாறையில் இடம்பெற்ற மாவட்ட செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பசீர் சேகுதாவூத் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர் அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகீன்றன. என்னைப் பொறுத்தவரை முதலில் கட்சியில் அங்கீகாரம் எடுக்க வேண்டும்.

இதனிடையே இந்தக் கட்சியை பாதுகாத்துக் கொள்வதில் என்னுடைய பங்கு என்னவென்று நான் பேச வேண்டும். நான் மிகவும் வேதனைப்படுகின்றேன். பதவிகளுக்காக நான் இருந்து கொண்டிருப்பதாக பார்க்கப்படுகின்றது. எதனையும் வெளிப்படையாக பேச வேண்டும் என்றார். (அ-2)

# முதியோர் பேரவை நிர்வாகிகள் தெரிவு


(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முதியோர்களின் நலன்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனின் ஒழுங்குபடுத்தலில் முதியோர் பேரவை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மாவட்டதிட்டமிடல்பணிப்பாளர்எஸ்.மோகனபவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

இதில் தலைவராக ரா.புவனேந்திரன், உப தலைவராக சோ.தாமோதரம்பிள்ளை, செயலாளராக திருமதி குமாரவேலு, உப செயலாளராக அ.இமானுவேல், பொருளாளராக சி.சந்திரராசா ஆகியோர் தெரிவாகினர். (அ-2-84)





சாவகச்சேரி சங்கத்தானை தமிழ் ஒளி கல்வி நிலையத்தில் இவ்வாண்டு மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலய வர்த்தக ஆசிரிய ஆலோசகர் திருமதி மகிலா இராசேந்திரா மங்கல விளக்கேற்றுவதனையும் அருகில் நிலைய இயக்குநர் ஸ்ரீ.தஜீபன் நிற்பதனையும் சிரேஷ்ட மாணவத் தலைவனுக்கான சின்னத்தினை கணித பாட ஆசிரியர் அகிலன் சூட்டுவதனையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆண்டு யாழ் தொடருந்து நிலையத்தில் தென்பகுதியிலிருந்து 50 சிங்கள குடும்பங்கள் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். இவர்கள் இறக்கப்பட்டது முதல், இலங்கை இராணுவம் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கி வந்தது.

தாம் 1980களில் யாழ் நகரில் குடியிருந்ததாகவும், எனவே தம்மை அங்கு மீள்குடியேற்றம் செய்யுமாறும் அவர்கள் அப்போது கோரிக்கை விடுத்திருந்தனர். அரசாங்க அதிகாரிகள் அங்கு வந்து அவர்களிடம் விபரங்களைப் பெற்று விசாரித்ததில் முன்பு குடியிருந்தமைக்கான எவ்வித சான்றும் இருக்கவில்லை.

அதனால், நீங்கள் மீண்டும், எங்கிருந்தீர்களோ அங்கேயே சென்று விடுங்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், நாங்கள் இங்குதான் குடியேறப்போகின்றோம் எனப் பிடிவாதம் பிடித்தனர்.

முன்னறிவிப்பும் இன்றி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு சென்றுள்ளார்.

அனைத்தையும் பார்வையிட்ட அவர் பலவந்தமாகக் தென்னிலங்கையிலிருந்து குடியேற்றப்பட்ட அந்தச் சிங்களக் குடும்பங்களுக்கு நிரந்தர காணி உறுதியைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்துவிட்டுச் சென்றுள்ளார். அதேநேரத்தில் ஈ.பி.டி.யின் கட்டுப்பாட்டில் உள்ள மண்டைதீவில் புதிய கடற்படை முகாமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

அங்கிருந்து மணல் கொள்ளையிடப்பட்டுவருகிறது. அம்மணல் தென்னிலங்கையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அதன் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் கொள்ளை இலாபம் ஈட்டிவருகின்றனர். ஆனால், மண்டைதீவு மக்கள் இது குறித்து ஈ.பி.

யும் ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு முன்பதாக தாயகத் தமிழர்களும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களும் இலங்கையில் தற்போது நிலவும் சூழலில் எவ்வகையான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து, பல்வேறு கருத்தாடல்களை மேற்கொண்டு வருகின்றனர். இரு தரப்பும் ஒரே அடிப்படை திட்டத்தின்கீழ் செயற்படும்போது தமிழருக்கு ஆதரவான நாடுகளும் அதனையே முன்னகர்த்திச் செல்ல முடியும். இது புலம்பெயர் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படும் ஒருசிறந்த திட்டம். இது குறித்து சில ஊடகங்கள் தவறான செய்திகள் வெளியிடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என உலகத் தமிழர் பேர

யிருந்தது.

கனடா ஆரம்பம்முதலே இலங்கையை எச்சரித்து வருகின்றது. மனித உரிமைகளை இலங்கை அரசு மதிக்காவிடில் தமதுநாடு நவம்பர் மாதம் நடைபெறவுள்ள மகாநாட்டில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று கனடாவின் பிரதமரே பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

ஆனாலும், அதற்குப் பிறகும் இடம்பெற்றவரும் தொடர் சம்பவங்களையடுத்து மாநாட்டை இடமாற்றம் செய்யுமாறு கனடா கோரிக்கை விடுத்திருந்தது. கனடாவுடன் வேறு சில நாடுகளும் இணைந்து கொண்டுள்ளன.

ஆனால், பொதுநலவாய அமைப்பின் பொதுச்செயலாளர் கமலேஷ் சர்மா அண்மையில் இலங்கை வந்து வெளிநாட்டு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பின்பே மாநாட்டை வேறொரு நாட்டில் நடத்துவதா அல்லது இலங்கையில் நடத்துவதா என்பது குறித்து ஆராயப்படும் என்ற முடிவு வெளியாகியுள்ளது. இதற்கு இலங்கை அரசின் வெளிநாட்டமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவின்படி மாநாட்டிற்கான ஏற்பாடுகளை செய்யும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்தக் கேள்வி அவசியமற்றது என அவர் சாடியிருந்தார்.

இலங்கையில் மனித உரிமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது; அபிவிருத்தியிலும் வளம் காணப்பட்டுள்ளது; இந்நிலையில் இலங்கையை பின்தள்ள நினைப்பது மிகக் கண்டிக்கத்தக்கது என அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். பொதுநலவாய அமைப்பின் கொள்கைகளுக்கு முரணான வகையில் செயற்படும் இலங்கை அரசை, அந்த அமைப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என புலம்பெயர் தமிழ் அமைப்புகள் வேண்டு



# சிங்கள மக்களுக்கு... நாவற்குழியில் வீடுகள்

இச்சந்தர்ப்பத்தில் அவர்களின் உணவுத் தேவைகளை இராணுவத்தினரே நிறைவேற்றி வந்தனர். ஒரு வாரம் வரை அங்கிருந்த அவர்களை இராணுவம் திடீரென யாழ்நகரின் எல்லையோரமாக உள்ள நாவற்குழி தேசிய வீடமைப்புத் திட்ட காணியில் குடியேற்றினர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் குடிசார் அமைப்புகள் அனைத்தும் இதனை எதிர்த்து ஜனாதிபதியிடம் முறையிட்டனர். ஆனால், முறைப்பாடுகள் அனைத்தும் தூக்கி எறியப்பட்டன. மிகவும் இரகசியமான முறையில் அவர்களை அங்கு குடியமர்த்த அரசு செயற்பட்டு வருகின்றது.

அதனால், புத்த பிக்குகள் வழங்கியதாக போக்குக்காட்டி அவர்கள் ஒவ்வொருவருக்கும் 5 இலட்சம் ரூபா வரை வீடு கட்டுவதற்கான பணம் கொடுக்கப்பட்டுள்ளது. இராணுவம் அவர்களின் வீடுகளைக் கட்ட முன்னின்று உதவுகின்றது. தற்போது 20 கல்வீடுகள் சகல வசதிகளுடனும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஆனால், முதலில் 50 சிங்களக் குடும்பங்களே அரசினால் பலவந்தமாக குடியேற்றப்பட்டனர். ஆனால், இப்போது அங்கு 135 குடும்பங்கள் இருப்பதாக இராணுவப் புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

நாவற்குழியை மையைப்படுத்தி மேலும் பல சிங்களக் குடும்பங்கள் அங்கு வந்து குடியேறலாம் என்ற அச்சமும் யாழ் மக்களிடையே ஏற்பட்டுள்து. இதேவேளையில், எவ்வித

டி.பியினரிடம் முறைப்பாடு செய்தபோது, அது குறித்து எவ்வித நடவடிக்கைகளிலும் அது இறங்கவில்லை....

புலம்பெயர் தமிழர்களும் தாயகத் தமிழர்களும் இணைந்து ஒரே கொள்கையின்கீழ் செயற்படும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இம்முயற்சி இவ்வருடம், முதல் மாதத்தில் ஜேர்மனியின் தலைநகரான பெர்லினில் இடம்பெற்றது. தாயகத் தமிழர்களின் சார்பில் தமிழர் தேசியக் கூட்டமைப்பும், தமிழத் தேசிய மக்கள் முன்னணியும் புலம்பெயர் மக்கள் சார்பில் உலகத் தமிழர் பேரவை, அனைத்துலக ஈழத்தமிழர் மக்கள் அவை ஆகியவற்றின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

மேலும் ஏனைய நாடுகளிலுள்ள தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் இத்திட்டத்தில் இணைத்துச் செயற்படும் முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு உட்பட பல நாடுகளில் வசிக்கும் தமிழர்களை

வையின் தலைவர் வணபிதா இம்மானுவேல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அமைப்பு மாநாடு இலங்கையில் நடைபெறுமா? இல்லையா?- இது குறித்து ஏப்ரல் மாதம் லண்டனில் நடைபெறும் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் அமைச்சர்கள் கலந்துகொள்ளும் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ளது.

ஏற்கனவே இவ்வருடம் நவம்பர் மாதம் இம்மாநாட்டை இலங்கையில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருந்தது. கடந்தமுறை அவுஸ்திரேலியாவில் இம்மாநாடு நடைபெற்றபோது இம்முடிவு உறுதி செய்யப்பட்டது.

ஆனால், இலங்கையில் தொடர்ந்து நடைபெறும் மனித உரிமை மீறல்கள், பிரதம நீதியரசர் பதவி நீக்கப்பட்டமை, ஜெனிவா மாநாட்டில் இலங்கை வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்படாமை ஆகிய காரணங்களினால், இலங்கையில் பொதுநலவாய அமைப்பு மகாநாடு நடைபெறக்கூடாது என்றும் அது வேறொரு நாட்டிற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் கனடா கோரி

கோள் விடுத்து வருகின்றன.

சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் உலகில் மிகப் பலம்வாய்ந்த சட்டத்துறை அமைப்பாகும். அந்த அமைப்பைச்சேர்ந்த நால்வருக்கு இலங்கை நுழைய அனுமதி வழங்க மறுத்ததின் மூலம் அந்த அமைப்பு மிக்க அதிருப்தியடைந்துள்ளது.

நுழைவு அனுமதி வழங்க மறுக்கும் உரிமை தமது நாட்டுச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதே என குடிவரவு குடியகல்வு ஆணையாளர் சூலானந்த பெரேரா தெரித்துள்ளார். ஆனால், குறிப்பான காரணம் ஏதும் இல்லாமல் தமது அமைப்பின் அங்கத்தவர்களுக்கு நுழைவு அனுமதி தர மறுத்ததற்கான காரணத்தை நிச்சயம் அறிவிக்க வேண்டும் என அது கோரியுள்ளது. இலங்கையின் நீதித்துறை செயற்பாடுகள் குறித்து ஓர் ஆய்வு மேற்கொள்வதற்காகவே மேற்படி சட்டத்தரணிகள் குழு இலங்கை வரவிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கைத் தூதரகம் அவர்களுக்கு விசாவழங்க மறுத்தது என்பது இலங்கை தவறை மறைக்க முற்படுவதையே காண்பிக்கிறது.

வீ.ஆர்.வரதராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் கிழக்கில் வாக்கெடுப்பு நடத்தவே டெசோ முயற்சிக்கிறது

## சிங்கள நாளேடு தகவல்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு,கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்த தமிழகத் தின் டெசோ அமைப்பு முயற்சித்து வருவதாக சிங்கள பத்திரிகையொ ன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாடொன்றின் ஊடாக இந்த யோசனையை முன்வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்க ப்படுகின்றது.

தி.மு.க. துணைத் தலைவர் மு.க. ஸ்டாலின் வடக்கு, கிழக்கு சர்வஜன வாக்கெடுப்பு குறித்த யோச னையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணை யாளர் நவநீதம்பிள்ளையிடம் ஒப்ப டைத்துள்ளார்.

தமிழகத்தின் அரசியல் கட்சி ஒன் றினால் முன்வைக்கப்பட்ட தீர்மான த்தை ஏற்றுக் கொள்வது சட்டவிரோ தமானது என அரசாங்கம் தெரிவித் துள்ளது. இது தொடர்பில் நவநீதம் பிள்ளை அரசாங்கத்திற்கு எவ்வித அறிவித்தல்களையும் வழங்க வில்லை.

வடக்கு, கிழக்கு ஈழக்கோரிக்கை தொடர்பான யோசனை முன்வைக் கப்படுவதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தென் னாபிரிக்காவிற்குச் சென்று ஆலோ சனை பெற்றுக் கொண்டுள்ளதாக குறித்த பத்திரிக்கை சுட்டிக்காட்டி யுள்ளது. (அ-2)

# ஐ.தே.க. உறுப்பினர்கள் சிலர் ஆளும் கட்சியில் இணைய முடிவு

ஐக்கிய தேசியக்கட்சியின் முக் கிய நாடாளுமன்ற உறுப்பினர் உள் ளிட்ட சிலர் ஆளும் கட்சியுடன் இணை ந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

முக்கியமான நாடாளுமன்ற உறு ப்பினர் ஒருவரும் மூன்று மாகாண சபை உறுப்பினர்களும் இவ்வாறு ஆளும் கட்சியில் இணைந்து கொள் ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபை உறுப்பினர்க ளான ஸ்ரீலால் லக்திலக்க, ஷிரந்த அமரசேகர, மைத்திரி குணரட்ன ஆகியோரே இவ்வாறு ஆளும் கட்சி யில் இணையத் திட்டமிட்டுள்ளதா கவும் குறிப்பிடப்படுகின்றது.

மேல் மாகாணத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று வெற் றியீட்டிய ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு ஆளும் கட்சியுடன் இணை ந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

ஆளும் கட்சியில் இணைந்து கொள்வது தொடர்பில் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள் ளது. எதிர்வரும் அமைச்சரவை மாற் றத்தின் போது அமைச்சுப் பதவி ஒன்றை வழங்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரி வித்துள்ளார். (அ-2)

# ஈழத்தமிழர் பகுதிகள் மேம்படுத்தப்படுகின்றன

## அமைச்சர் செனவிரத்ன தெரிவிப்பு

(திருவனந்தபுரம்)

இலங்கையில் தமிழர்கள் அதி கம் வாழும் பகுதிகளில் கல்வி, சுகா தாரம், சிவில் நிர்வாகம் ஆகியவ ற்றை மேம்படுத்துவதற்கான நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகி றது என்றும் அதில் நல்ல முன்னே ற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் இல ங்கை அரசின் பொது நிர்வாகத் துறை அமைச்சர் செனவிரத்ன செய் தியாளர்களிடம் கூறினார்.

இந்தியா- இலங்கை இரு நாடுக ளுக்கிடையே உள்ள உறவு தொட ரும். நாங்கள் கூட்டாக செயற்படுவோம். இந்து மதம், பௌத்த மதம் இரண் டுமே இந்தியாவின் கொடை தான்!

இலங்கையின் சுகாதாரம் மற் றும் சுற்றுலாவில் இந்திய அரசின் ஒத்துழைப்பு மிக அதிகம். பல முன் னேற்றங்கள் இந்தத் துறையில் காத்திருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர அனைத்துக் கட்சிகளும் ஆளும் கட்சிக் கூட்டணியில் உள்ளன.

இலங்கையில் மிகப்பெரிய ஏற் றுமதியாளர் இந்தியா எனவும் கடந்த வருடத்தில் மாத்திரம் இலங்கை- இந்தியாவிற்கிடையில் 5 மில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தக நடவடி க்கைகள் இடம்பெற்றுள்ளதாகவும் இலங்கையில் மின்சார திட்டத்தை ஊக்குவிக்க இந்தியா உதவி புரிவ தாகவும் அமைச்சர் செனவிரத்ன இதன்போது கூறினார். (அ-2)

# உலமா சபைக்கு எதிராக பொதுபலசேனா வழக்கு

(கொழும்பு)

அகில இலங்கை ஜம்மியல்துல் உலமா சபைக்கு எதிராக பொது பலசேனா அமைப்பு வழக்குத் தாக் கல் செய்யவுள்ளது.

ஹலால் சான்றிதழ் பிரச்சினை தொடர்பிலேயே இந்த வழக்கு தாக் கல் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பில் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடட்டே ஞானசார தேரர் கூறு கையில், ஹலால் சான்றிதழ் ஒரு வியாபாரமாக மேற்கொள்ளப்படு கிறது என்று குற்றம் சுமத்தியுள்ளார்.

ஹலால் சான்றிதழ் குறித்து விசா ரணை நடத்தி யார் அந்த சான்றி தழை வழங்குவது என்பதை கண்டு பிடிக்க வேண்டும் என்றும் பொது பலசேனாவின் செயலாளர் கோரி யுள்ளார். (அ-2)

# 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2013.02

★1531-லண்டன் எட்டாம் ஹென்றி மன்னன் லண்டன் திருச்சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

★1659-சுவீடன் படைகளின் கோப்பன்ஹேகன் நகரத் தாக்குதல் பலத்த உயிரிழப்புகளுடன் முறியடிக்கப்பட்டது.

★1752-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது மருத்துவமனை பென்சில்வேனியாவில் திறக்கப்பட்டது.

★1809-ரொபேர்ட் ஃபுல்ட்டன் நீராவிப்படகுக்கான காப்புரிமம் பெற்றார்.

★1814-நோர்வேயின் விடுதலை அறிவிக்கப்பட்டது.

★1826-லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக்கழகம் என்ற பெயருடன் அமைக்கப்பட்டது.

★1873-ஸ்பானிய உயர்நீதிமன்றம் முதலாம் அமெடியஸ் மன்னனை பதவி விலக்கி ஸ்பெயின் நாட்டைக் குடியரசாக அறிவித்தது.

★1919-பிரிட்றிக் எபேர்ட் ஜெர்மனியின் ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

★1929-இலாத்தரன் உடன்படிக்கை மூலமாக வத்திக்கான் நகர் உருவானது.

★1933-மகாத்மா காந்தி ஹரிஜன் என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்.

★1942-இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூரில் பூக்கிட் டீமா என்ற இடத்தில் நேச நாடுகள் கூட்டணிக்கும் ஜப்பானுக்கும் இடையில் சமர் நிகழ்ந்தது.

★1945-இரண்டாம் உலகப் போர்: யால்ட்டா உச்சி மாநாடு முடிவடைந்தது.

★1953-சோவியத் ஒன்றியம் இஸ்ரவேலுடன் தூதரக உறவை முறித்துக் கொண்டது.

★1960-சீன எல்லையில் நடந்த தாக்குதல் ஒன்றில் 12 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

★1964-சைப்பிரசில் கிரேக்கர்களுக்கும் துருக்கியர்களுக்கும் இடையில் லிமசோல் என்ற இடத்தில் சமர் இடம்பெற்றது.

★1964- சீனக் குடியரசு (தாய்வான்) பிரான்சுடன் தூதரக உறவை முறித்துக் கொண்டது.

★1968- இஸ்ரேல்-ஜோர்தான் எல்லைச் சண்டை ஆரம்பித்தது.

★1971-ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சோவியத் ஒன்றியம் உட்பட 87 நாடுகள் சர்வதேச நீர்ப்பரப்பில் அணுவாயுதத் தடையைக் கொண்டு வர முடிவெடுத்தன.

★1973-வியட்நாம் போர்: அமெரிக்கப் போர்க்கைதிகளின் முதலாவது தொகுதியை விடுவிக்கும் நிகழ்வு வியட்நாமில் இடம்பெற்றது.

★1979-அயதொல்லா கொமெய்னியின் தலைமையில் ஈரானில் இஸ்லாமியப் புரட்சி வெற்றி அடைந்தது.

★1990-தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் சிறைவாசத்தின் பின்னர் விடுதலையானார்.

★1997-டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் விண்வெளித் தொலைக்காட்டியைத் திருத்தும் நோக்கில் விண்ணுக்கு ஏவப்பட்டது.

★2005-ஜேர்மனியின் முதல் 24 மணிநேரத் தமிழ் வானொலியான ஐரோப்பியத் தமிழ் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★1847-தோமஸ் அல்வா எடிசன், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர், தொழிலதிபர் (இ.1931)

★1917-சிட்னி ஷெல்டன், அமெரிக்க எழுத்தாளர் (இ.2007)

★1924-வி.வி.வைரமுத்து, நடிகமணி, ஈழத்தின் நாட்டுக்கூத்து நடிகர் (இ.1989)

★1964-சேரா பேலின், அலாஸ்கா மாநில ஆளுநர்

### இறப்புக்கள்

★1650-ரேனே டெஸ்கார்ட்டஸ், தத்துவ ஞானி, கணித மேதை (பி.1596)

★1693-ஜான் டி பிரிட்டோ, இயேசு திருச்சபை மதப் போதகர் (பி.1647)

★1713-ஜகாந்தர் ஷா, முகலாய அரசன் (பி.1664)

★1946- மா. சிங்காரவேலர், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தந்தை (பி.1860)

★1948-செர்கீ ஐசென்ஸ்டைன், ரஷ்யத் திரைப்பட இயக்குநர் (பி.1898)

★1973-ஹான்ஸ் ஜென்சன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (பி.1907)

★1978-ஹரி மார்ட்டின்சன், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி.1904)

★1991-ரொபேர்ட் ஹோலி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1922)

★2006- பெக்கி கிரிப்ஸ் அப்பையா, எழுத்தாளர் (பி.1921)

### சிறப்பு நாட்கள்

★ஜப்பான் - நிறுவன தினம்

★ஈரான் - இஸ்லாமியப் புரட்சி தினம் (1974)

★கமரூன் - இளைஞர் தினம்

★ஐக்கிய அமெரிக்கா- கண்டுபிடிப்பாளர் தினம்

★பொஸ்னியா- சுதந்திர தினம்

★வத்திக்கான் நகரம் -சுதந்திர தினம்(1922)

### வி.வி.வைரமுத்து வாழ்க்கைச் சுருக்கம்



வி.வி.வைரமுத்து யாழ்ப்பாணத்தில் காங்கேசன் துறையைச் சேர்ந்த வேலப்பா, ஆச்சிக்குட்டி தம்பதியினருக்கு மகனாக 1924 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி பிறந்தார். வி.வி. வைரமுத்து இலங்கையின் மிகச் சிறந்த இசை நாடகக் கலைஞராகக் கருதப்படுபவர். இவர் அரிச்சந்திரனாகத் தோன்றி நடித்த மயான காண்டம் எண்ணற்ற தடவைகள் மேடையேற்றப்பட்ட இசை நாடகமாகும். தனது இனிய குரல் வளத்தால் பாடி உருக்கமாக வசனங்கள் பேசி நடிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

#### கலைப்பணி

1950 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் மேடையேற்றப்பட்ட சம்பூர்ண அரிச்சந்திரா நாடகத்திலேயே வைரமுத்து முதன் முதலாக அரிச்சந்திரனாக நடித்தார். வைரமுத்துவின் வாழ்க்கைக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது மயான காண்டம் என்னும் இசை நாடகம். இது இலங்கை முழுவதும் மூவாயிரத்திற்கும் அதிகமான தடவைகள் மேடையேற்றப்பட்டது.

இலங்கை வானொலியில் பல இசை நாடகங்களை வழங்கினார். மிருதங்கம், ஆர்மோனியம், வயலின், ஜலதங்கரம் போன்ற இசைக்கருவிகளை இசைப்பதிலும் வல்லவராய் இருந்ததோடு இலங்கை வானொலியில் கர்நாடக இசைக் கச்சேரிகளும் செய்திருக்கின்றார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது பவள விழாவின் போது இவர் பாடி நடித்த நந்தனார் இசை நாடகத்தை ஒலிப்பதிவு செய்து இறுவெட்டாக வெளியிட்டார்கள். இலங்கை வானொலியில் முதல் முதலாக வெளிவந்த நாட்டுக்கூத்து நாடகம் இதுவாகும்.

#### திரைப்படத்தில்

கலைஞர் ஏ.ரகுநாதன் தயாரித்த நிர்மலா திரைப்படத்தில் இவரது மயானகாண்டம் இசை நாடகத்தின் பகுதியும இணைக்கப்பட்டது.

#### விருதுகள்

கலையரசு சொர்ணலிங்கம் இவருக்கு நடிகமணி என்னும் பட்டத்தை 1960 ஆம் ஆண்டில் வழங்கிக் கௌரவித்தார். 1964 ஆம்ஆண்டு அமைச்சர் எஸ். தொண்டமான் நாடகச் சக்கரவர்த்தி என்னும் பட்டம் வழங்கினார். 1970 ஆம் ஆண்டு தந்தை செல்வா நடிப்பிசை மன்னன் எனும் பட்டத்தை வழங்கினார்.

#### மறைவு

வைரமுத்து வானொலி நாடக ஒலிப்பதிவுக்காக கொழும்பு சென்றவேளை 1989 ஆம்ஆண்டு ஜுலை மாதம் 8 ஆம் திகதி அன்று மாரடைப்பேற்பட்டு காலமானார். இதன் பின் பேராசிரியர் கா.சிவத்தம்பி நாடக தீபம் என்னும் வி.வி.வைரமுத்துவின் நினைவு நூலில் தமிழ் நாடகத்தின் மரணிக்காத குரல் என்று வைரமுத்து அவர்களுக்கு புகழாரம் சூட்டியிருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2004 ஆம் ஆண்டில் இவருக்கு கலாநிதி பட்டத்தை வழங்கி கௌரவித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய குழுக்கூட்டத்திலிருந்து வெளியேறினார் ஏ.எச்.எம்.பௌசி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் முறுகல் தீவிர மடைந்துள்ளது. இதன் ஒருக்கட்டமாக இலங்கையின் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்துள்ளதாக தெரிய வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதிய தேர்தல் தொகுதி அமைப்பாளர்களை நியமித்தமையை அடுத்தே இந்தத் தீவிர நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் ஒருகட்டமாக இலங்கையின் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியக்குழுக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்துள்ளார்.

ஏற்கனவே பௌசி கட்சியின் கொழும்பு மத்திய தொகுதி அமைப்பாளராக செயற்படுகிறார். எனினும் அதில் பாதியை பிரதிய மைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு வழங்கியமையை ஆட்சேபித்தே அவர் கட்சியின் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்துள்ளார்.

தாம் தேவையில்லையென்றால் அதனை நேரடியாக கூறலாம். அதனை விடுத்து தேர்தல் தொகுதியில் பாதியை மாத்திரம் தமக்கு பொறுப்புத் தருவதை தாம் ஏற்கப் போவதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மத்திய தொகுதியில் ஏற்கனவே முஸ்லிமாகிய தாம் அமைப்பாளராக செயற்படும் போது அங்கு சிங்கள, தமிழ் வாக்காளர்களை கவர சிங்களம் அல்லது தமிழ் அமைப்பாளர் ஒருவரை நியமித்திருக்கலாம்.

அதனை விடுத்து ஏன் மற்றும் ஒரு முஸ்லிமான பைசர் நியமிக்கப்பட்டார் என்று பௌசி கேள்வி எழுப்பியுள்ளார். எனினும் அவருடைய எதிர்ப்புக்கு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் பதில் கிடைக்கவில்லை.

இந்நிலையில் தொகுதி அமைப்பாளர் நியமனங்கள் யாவும் ஜனாதிபதியால் தீர்மானிக்கப்பட்டவை. அதில் தமக்கு சம்பந்தமில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (அ-2)

## மாணவனின் சடலம் மீட்பு

வவுனியா தட்சனாங்குளத்தில் இருந்து வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் ஒருவனின் சடலம் நேற்று முன்தினம் மாலை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா தோணிக்கல்லை சேர்ந்த செ.கோபிகரன் என்பவரே சக நண்பர்களுடன் குளத்தில் நீராடச் சென்ற சமயமே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். இதேவேளை, இது தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோரிடம் கேட்டபோது இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தியதன் பின்னர் சடலத்தினை பிரேத பரிசோதனை செய்வதற்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தார். (அ-9-266)

## இரட்டை பிரஜாவுரிமை வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைக்கு

இரட்டை பிரஜாவுரிமை எனும் பெயர் மாற்றப்பட்டு வெளிநாட்டில் வாழும் இலங்கையர் என்ற பெயரில் இரட்டை பிரஜாவுரிமை வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப் படுத்தப்படும் என குடிவரவு- குடியகல்வு திணைக்களத்தின் பிரதான கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

வெளிநாட்டில் வாழும் இலங்கையர் *Overseas Srilankan Citizen* திட்டம் தொடர்பாக சட்ட வரைஞர் திணைக்களத்தின் திருத்தங்கள் வந்தவுடன் பாராளுமன்றில் சமர்ப்பித்து அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் உடனடியாக இத் திட்டம் அமுல்படுத்தப்படும்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட புதிய நடைமுறை தொடர்பாக நகரில் சட்டவரைபு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

குடிவரவு தொடர்பாகவும் பிரஜாவுரிமை தொடர்பாகவும் இரண்டு விடயங்கள் இச்சட்ட வரைவுக்குள் இணைக்கப்பட்டுள்ளன. சட்ட வரைஞர் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட இத்திருத்தங்கள் தொடர்பில் குடிவரவு குடியகல்வு திணைக்களம் இணங்காத காரணத்தினால் இத்திருத்தங்கள் இரண்டையும் ஏற்கனவே பெறப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்துக்கு உட்பட்ட விதத்தில் திருத்தித் தருமாறு சட்டவரைஞர் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது.

இந்த திட்டம் இவ்வாண்டு ஜனவரி முதல் நடைமுறைப்படுத்துவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இரட்டை பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிப்பவர்கள் *Overseas Srilankan Citizen* என்ற திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## குழந்தையை காட்டி யாசகம் செய்த நபர் கைதானார்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தில் இரண்டு வயதான வாடகைக் குழந்தையைக் காட்டி யாசகம் செய்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயணிகள் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்தே புகையிரதப் பாதுகாப்பு பிரிவினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரிடம் விசாரணை மேற்கொண்ட போது அவர் முரணான பதில்களை வழங்கியுள்ளார். மேலும் குழந்தையை வாடகைக்கு பெற்றமையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

குறித்த குழந்தை தற்போது புகையிரதப் பாதுகாப்பு பிரிவினர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-2)

## கப்பல்கள் மூலமாக வெளிநாட்டு எலிகள் நாட்டுக்குள் வருகின்றன

கொழும்பில் எலிகளை கட்டுப்படுத்தும் செயன்முறை மந்த நிலையை அடைந்துள்ளமையால் அவை தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே இருந்து வருவதாக கொழும்பு மாநகர சபை வைத்தியர் காரியவசம் தெரிவித்தார்.

எலி மருந்துகளாக உபயோகிக்கும் இரசாயனங்களை காலத்துக்கு காலம் மாற்ற வேண்டியுள்ளதால் அவற்றின் விலையேற்றம் மற்றும் தொழிலாளர் பிரச்சினை ஆகியன காரணமாகவே எலிகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது மந்தகதியை அடைந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் எலிகள் பெருகுவதற்கான முக்கிய இடமாக கொழும்பு துறைமுகம் கருதப்படுகிறது. துறைமுகம் உள்ளிட்ட புறக்கோட்டை மருதானையூடான பொறளை வரையான பகுதி எலிகளுக்குரிய பிரதான எல்லையாக வரையறுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் மூலமாகவே வெவ்வேறு நாடுகளிலிருந்து எலிகள் இங்கு வந்து சேர்கின்றன. துறைமுகத்தில் கப்பலொன்று நங்கூரமிடப்பட்டதும் அதற்குள்ளிருந்து பெரும் எண்ணிக்கையான எலிகள் வெளியேறுகின்றன என்றார். (அ-2)

## உள்நாட்டு விவகாரத்தில் வெளிநாடுகள் தலையீடு

### ஜெனீவா வதிவிடப் பிரதிநிதி வருத்தம்

(ஜெனீவா)

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் சில இலங்கையர்கள் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சித்து வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனீவாவிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார். ஜெனீவாவில் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

நாட்டின் உள் விவகாரங்களில் வெளிநாடுகள். தலையீடு செய்யும் வகையில் புலம் பெயர்ந்து வாழ்வோர் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது. வெளிநாடுகளில் வாழும் சில இலங்கையர்கள் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்தக்கூடிய பிரசாரங்களில் ஈடுபட்டு வருகி ன்றனர். மேலும் மெய்யான விடயங்களை மறைத்து போலிப்பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

உள்நாட்டு முரண்பாடுகள் சர்வதேச அரங்கில் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமையக்கூடாது எனவும் உள் முரண்பாடுகள் நாட்டின் வெளியுறவுக் கொள்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொள்கைகளை அன்றாட வீட்டு நிகழ்வுகளில் நாம் பின்பற்றி வருகிறோம். சில விடயங்களில் வீட்டுக்குள் முரண்பாடுகள் காணப்பட்டாலும் அதனை அம்பலப்படுத்தி குடும்பத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்த நாம் முனைப்புக் காட்டுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## வெள்ளை வானில் கடத்தப்பட்ட சிறுவன் விடுவிக்கப்பட்டான்

(மட்டக்களப்பு)

காத்தான்குடியில் சிறுவன் ஒருவன் இனம் தெரியாத நபர்களினால் வெள்ளை வானில் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடியைச் சேர்ந்த 12 வயது சிறுவனே இவ்வாறு கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

இச்சிறுவன் நேற்று முன்தினம் துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த போது வெள்ளைவானில் வந்த இனம் தெரியாத சிலரினால் கடத்தப்பட்டுள்ளார்.

இதனையடுத்து இச்சிறுவனின் பெற்றோர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் சிறுவனை காணவில்லையென முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலிஸார் மற்றும் சிறுவனின் குடும்ப உறவினர்கள் சிறுவனை தேடிக் கொண்டிருந்தபோது சிறுவன் அன்றைய தினமே பிற்பகல் வீடு வந்து சேர்ந்துள்ளார். (அ-2)



யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் வெற்றி பெற்ற இல்லத்துக்கு வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா கேடயம் வழங்குவதையும் அருகில் அதிபர் கலைநாதன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவக்கால சிந்தனைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தினால் நம்பிக்கை ஆண்டின் தவக்காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் இதை என் நினைவாக செய்யுங்கள் என்னும் கருப்பொருளில் அமைந்த கவிதை, கட்டுரை, ஓவியப் போட்டிகள் மற்றும் விவாதம் என்பன இடம் பெறவுள்ளன.

இதன்படி கவிதைப் போட்டி தரம் 8 முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும் திறந்த போட்டியாகவும் இடம் பெறுகின்றன. எழுதப்படும் கவிதைகள் 12 முதல் 16 வரையான வரிகளுக்குள் அமைய வேண்டும்.

கட்டுரைப் போட்டியில் தரம் 10 முதல் பல்கலைக்கழகம் வரையான மாணவர்கள் பங்குபற்ற முடியும். கட்டுரையானது 250 தொடக்கம் 300 வரையான சொற்களுக்கு குறையாமல் அமைவதோடு ஏ-4 தாளில் எழுதப்படுதல் வேண்டும். ஓவியப் போட்டியில் தரம் 6 முதல் தரம் 12 வரையான மாணவர்கள் பங்குபற்ற முடியும். வரை தாளின் அளவு 18×24 ஆக அமைதல் வேண்டும்.

விவாதத்தில் 4 பேர் அடங்கிய குழுக்களாக பங்குபற்ற முடியும். இதில் தரம் 10 முதல் சகல தரப்பினரும் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்குறித்த போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் தமது படைப்புக்களை எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம், இல.200, குருசோ வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# அடிப்படை வசதிகள் இன்றி தவிக்கும் நீலியாமோட்டை கிராம மக்கள்

(பூந்தோட்டம்)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள நீலியாமோட்டை கிராமம் அடிப்படை வசதிகள் இன்றி கடந்த பல வருடங்களாக காணப்படுவதாக அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 58 இற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசிக்கும் இக்கிராமத்திற்கு மின்சார வசதிகளோ போக்குவரத்து வசதிகளோ இல்லாததுடன் வீட்டுத்திட்டமும் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அக்கிராம மக்கள் தெரிவிக்கையில்,

கடந்த 1979 ஆம் ஆண்டு மக்கள் இக்கிராமத்தில் குடியேறிய நிலையில் 1990 ஆம் ஆண்டு 300 இற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வந்த நிலையில் யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து மடு பிரதேசத்திலும் சிலர் இந்தியாவிற்கும் சென்றிருந்ததாகவும் மீண்டும் 1993 ஆம் ஆண்டு மீள்குடியேறிய நிலையில் 1994ஆம் ஆண்டு மீண்டும் இடப்பெயர்வுக்கு முகம் கொடுத்து 2008 ஆம் ஆண்டு 58 குடும்பத்தினராக மீள்குடியேறியதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் மின்சார வசதிகள் செய்து தரப்படாத நிலையில் அடர்ந்த காடுகள் சூழப்பெற்ற கிராமத்தில் தாங்கள் வாழ்ந்து வருவதாகவும் இரவு நேரங்களில் யானைகளின் தொந்தரவு உள்ளபோதிலும் தாம் போதுமான வெளிச்சம் இன்மையால் பாரிய அச்சுறுத்தலுடன் வாழ்வதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை தமது கிராமம் வவுனியா, மன்னார் வீதியில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளதனால் போக்குவரத்து வசதிகள் இன்மையின் காரணத்தால் நடந்தும் துவிச்சக்கரவண்டியிலும் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகவும் இரவு நேரங்களில் தாம் போக்குவரத்துக்கு மிகவும் சிரமப்படுவதுடன் தமது கிராமத்தில் இடை நிலை பாடசாலை இன்மையால் மேல் வகுப்பு மாணவர்கள் நடந்து சென்றே அருகில் உள்ள கிராமத்தில் தமது கல்வியை தொடர வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இத்துடன் தமது கிராமத்தை அண்டிய பகுதியில் வைத்திய வசதிகள் இல்லை எனவும் வீட்டுத்திட்டம் தொடர்பில் எவரும் கவனம் செலுத்தாததன் காரணமாக தாம் தொடர்ந்தும் குடிசைகளில் வாழும் நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் பிரதான வீதி தற்போது செப்பனிடப்படுகின்ற போதும் உள்ளக வீதிகள் மிகவும் மோசமாக காணப்படுவதாகவும் இக்கிராம மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். இக்கிராமம் தொடர்பில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் கமலதாஸிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இக்கிராமம் தொடர்பில் தாம் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும் தற்போது இக்கிராமத்திற்கு 85 வீடுகள் வீட்டுத்திட்டத்தின் மூலம் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததுடன் தண்ணீர் பிரச்சினை தொடர்பில் தாம் பல அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஆய்வுகளை மேற்கொண்டு கிணறுகளை அமைத்து வரும் போதிலும் அவற்றில் நீரை பெறுவது கடினமாகவுள்ளதாகவும் கற்பாறையாக நிலம் காணப்படுவதே அதற்கு காரணம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வருடம் நீலியாமோட்டை அமைந்துள்ள பிரமனாலங்குளம் கிராமசேவகர் பிரிவில் 4 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு கிணறுகள் அமைக்கும் திட்டம் கற்பாறைகள் காணப்பட்டமையினால் கைவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துடன் இக் கிராமம் வரட்சியான கிராமமாக உள்ளதனை ஏற்றுக்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மின்சாரமானது வடக்கின் வசந்தத்தின் ஊடாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த பிரதேச செயலாளர் தற்போது பிரதான வீதி செப்பனிடப்படுவதாகவும் உள்ளக வீதிகள் பிரதேச சபைகளுக்கு உரித்தானது என்பதால் அவற்றை செப்பனிடுவதற்கு தம்மிடம் நிதி போதுமானதாக இல்லை என பிரதேச சபை தெரிவித்து வருவதாகவும் கூறிய அவர் தற்போது சில அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலமாக அக்கிராமத்திற்கு சுயதொழில் மற்றும் கைத்தொழில் முயற்சிக்காக செயற்பாடுகளை மேற்கொள்ள ஆவன செய்து வருவதாகவும் தெரிவித்தார். (அ-9-266)

# திருத்தப்படாத தபால் நிலையத்தால் தொடர்பாடல் இன்றிய பெரியதம்பனை

(பூந்தோட்டம்)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் உள்ள பெரிய தம்பனைக் கிராமத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட தபால் நிலையம் கடும் காற்றினால் சேதமடைந்து பல மாதங்களாகியும் திருத்தப்படாத நிலையில் காணப்படுவதாக அக் கிராமமக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக பெரியதம்பனைக் கிராமத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து மீண்டும் 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மீள்குடியேறியபோது பெரியதம்பனை உட்பட அதனை அண்டிய பகுதி மக்களின் தேவை கருதி சகல வசதிகளுடனான தபால் நிலையம் அமைக்கப்பட்டது.

பல இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இத் தபால் நிலையத்தினை தரமற்ற முறையில் அமைத்ததன் காரணத்தால் 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏற்பட்ட கடும் காற்றுடன் சேர்ந்த மழையின் போது கட்டடத்தின் கூரை முற்றாக சேதமடைந்து அங்கிருந்த பொருட்களும் நீரில் நனைந்து போயிருந்தன.

இதனையடுத்து தபால் நிலையத்தினை அருகில் உள்ள தனியார் ஒருவரது கடையில் இயங்க வைப்பதற்கு அஞ்சல் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் சேதமடைந்த கட்டடம் திருத்தப்படாது அதே நிலையிலேயே காணப்படுகின்றது.

இதன்காரணமாக அங்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்ச்சியாக மழை வெயிலில் கிடப்பதால் அவை மேலும் பழுதடைந்துள்ளதுடன் கறையான் அரிக்கும் நிலையில் காணப்படுகின்றது என தமது ஆதங்கத்தை தெரிவித்தனர்.

இதேவேளை அத் தபால் நிலையத்தினை திருத்தம் செய்து சகல வசதிகளுடன் மக்களுக்கு அஞ்சல் திணைக்களம் கையளிக்குமானால் மீள்குடியேற்றப்பட்ட இப் பகுதிக்கான தொலைத் தொடர்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்ள முடியுமெனவும் தெரிவித்தனர். (அ-9-266)

# மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு பாரிய நோய்கள்

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 200 கைதிகளுக்கு பாரிய நோய்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 304 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 200 பேருக்கு பாரியளவிலான நோய்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி போகம்பறை, வெலிக்கடை ஆகிய சிறைகளில் இந்தக் கைதிகள் தண்டனை அனுபவித்து வருகின்றனர். இவர்கள் கண் பார்வையின்மை, இருதய நோய்கள், நீரிழிவு, மனநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களினால் பாதிக்கப்படுள்ளனர்.

கடுமையான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களில் இருவர் பெண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் பெரும் மன உளைச்சலிற்குள்ளாகி இருப்பதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# அரசின் 50 இணையத்தளங்கள் சைபர் தாக்குதலுக்கு உள்ளாகின

(கொழும்பு)

இலங்கை அரசின் 50 இணையத்தளங்கள் சைபர் தாக்குதலுக்கு இலக்காகி செயலிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

ஆகப் பிந்திய தாக்குதல் நல்லிணக்க ஆணைக்குழுவின் இணையத்தளம் மீது நடத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இணையத்தளங்கள் மீதான சைபர் தாக்குதல்களால் கணனிகளில் சேமிக்கப்பட்டிருந்த இலங்கை அரசின் அதிகாரபூர்வ ஆவணங்களும் தகவல்களும் அழிந்து போயுள்ளன.

ஊழியர் சேமலாப நிதியம், நீதி அமைச்சு, தேசிய அருங்காட்சியகம், குடிவரவுத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், ஊவா மாகாண சுற்றுலாப் பிரிவு, மூலோபாய நிறுவன முகாமைத்துவ முகவரகம், தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம், வடமத்திய மாகாண சபை, துறைமுக அதிகாரசபை, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், ஸ்ரீலங்கா சுங்கத் திணைக்களம், தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணையம், மதிப்பீட்டுத் திணைக்களம், நிதி ஆணையம், மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம், தேசிய பாரம்பரிய அமைச்சு உள்ளிட்ட பல தளங்கள் சைபர் தாக்குதலால் முடங்கியுள்ளதாக தெரிய வருகின்றது.

தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையத்தின் இணையத்தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு பல வாரங்களாகியும் இதுவரை அது மீள இயங்கத் தொடங்கவில்லை எனவும் தெரிய வருகின்றது. (அ-2)



வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியதம்பனை கிராமத்தில் ஐரோப்பிய ஒன்றியமும் ஏ.எஸ்.பி.நிறுவனமும் இணைந்து கட்டி முடித்த வீட்டுத்திட்டத்தினை பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கட்டி முடிக்கப்பட்ட வீட்டையும் ஏ.எஸ்.பி. நிறுவன மனிதவள முகாமையாளர் அவ்வீட்டினை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புச்சட்டை போராட்டத்தால் கருணாநிதி மீது தேரோட்டம்

## தமிழக அரசியல் தலைவர்கள் கருணாநிதி மீது பாய்ச்சல்



இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை மத்திய அரசில் அங்கம் வகிக்கும் கருணாநிதி நினைத்திருந்தால் தடுத்திருக்க முடியும் என தமிழக முக்கிய கட்சி உறுப்பினர்கள் கருணாநிதி மீது பலத்த குற்றம் சுமத்தியுள்ளனர். இதேவேளை கருணாநிதியின் கறுப்புச்சட்டை போராட்டமும் ஒரு நாடகமே எனவும் விமர்சித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலர் சி.மகேந்திரன் கருணாநிதி மீது குற்றச்சாட்டை முன்வைக்கையில்,

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் சபையில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தை இந்தியா பயன்படுத்தி தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கில்தான் ராஜபக்ஷவின் இந்திய பயணம் அமைந்துள்ளது.

ராஜபக்ஷவின் இந்திய வருகைக்கு தமிழகத்தில் உள்ள கட்சிகள், அமைப்புகள் அனைத்தும் எதிர்த்து தெரிவித்து போராட்டக்களத்தில் இறங்கின. இந்த வரிசையில் தி.மு.கவும் கறுப்பு சட்டை அணிந்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளது வேடிக்கையாகவுள்ளது.

இலங்கையில் இறுதிக்கட்ட போர் நடந்தபோது மத்தியில் தி.மு.க அங்கம் வகிக்கும் காங்கிரஸ் ஆட்சி நடந்தது. தி.மு.க நினைத்திருந்தால் போரை தடுத்து நிறுத்தியிருக்கலாம்.

எனினும் அந்த நடவடிக்கையில் ஈடுபடவில்லை. இப்போது தமிழகத்தில் தி.மு.க ஆட்சியில் இல்லை என்றாலும் மத்திய அரசில் அங்கம் வகிக்கிறது. இதை பயன்படுத்தி ராஜபக்ஷவின் இந்திய வருகையை தடுக்கும் வகையில் மத்திய அரசுக்கு புதிய நிர்ப்பந்தத்தை தி.மு.க கொடுத்திருக்கலாம்.

ஆனால் அதை செய்யவில்லை. இதுபோல கிடைத்த வாய்ப்பையெல்லாம் விட்டுவிட்டு தற்போது லோக்சபா தேர்தல் நெருங்கும் நேரத்தில் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவு அளிப்பது போல் காட்டிக் கொள்ள டெசோ அமைப்பிற்கு உயிர்கொடுத்து ஆலோசனை ஆர்ப்பாட்டம், போராட்டம் என நாடகம் நடத்தியுள்ளனர் என கூறி கருணாநிதிக்கு உச்சி அடி கொடுத்துள்ளார்.

மகேந்திரனின் கருத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தங்கள் பக்கமுள்ள நியாயப்பாட்டை தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவராஜ்ய சபா முழங்கி தள்ளினார்.

அதில் இலங்கை தமிழர்கள் பிரச்சினைக்கு சரியான தருணத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய அரசுக்கு தி.மு.க தலைவர் கருணாநிதி அழுத்தம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்.

தி.மு.க எம்.பிக்கள் மூலமும் கடிதங்கள் மூலமும் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் இலங்கை தமிழர்களின் வாழ்வில் விடியலை ஏற்படுத்தக்கூடிய அனைத்து கோரிக்கைகளையும் வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறார்.

சமீபத்தில் இலங்கையில் தமிழ் பெயர்கள் கொண்ட கிராமங்களின் பெயர்களை சிங்கள பெயர்களாக மாற்றியது குறித்து வருத்தம் தெரிவித்து காங்.தலைவர் சோனியாவிற்கு கடிதம் எழுதினார்.

உங்களின் கவலைகளை நானும் பகிர்ந்து கொள்கிறேன் என்றும் இது தொடர்பாக வெளியுறவு தொடர்புத்துறை அமைச்சருக்கு எடுத்துச் சொல்கிறேன் என்றும் சோனியா பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதுபோல வாய்ப்பு கிடைக்கும் போதும் வாய்ப்பை ஏற்படுத்தியும் இலங்கைத் தமிழர் நலனுக்காக தி.மு.க தன் கடமையை செய்து வருகிறது. திருச்சியில் என் மகள் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு அதன்பின் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு நீண்டதூரம் பயணம் செய்து மறுநாள் காலையில் சென்னையில் நடக்கும் கறுப்புச் சட்டை ஆர்ப்பாட்டத்தில் கருணாநிதி கலந்து கொள்கிறார் என்றால் அவரை விட வேறு யார் இலங்கை தமிழர்கள் பிரச்சினையில் அக்கறை செலுத்த முடியும் என்ற கேள்வியுடன் தன் நியாயப்பாட்டை கேள்விக்குறியுடனேயே முடித்து வைத்தார்.

இந்நிலையில் கருணாநிதி மீது உள்ள கோபத்தைக் காட்ட அ.தி.மு.கவின் சட்டமன்ற உறுப்பினர் பழ. கருப்பையாவும் தமது வரலாற்று கருத்துக்களை கொண்டு கருணாநிதியை தாக்கி கூறுகையில்,


ராஜபக்ஷவின் வருகையை எதிர்த்து கருணாநிதி கறுப்புச் சட்டை போராட்டம் நடத்துகிறார். அவர் மாறவே இல்லை. தமிழகத்தில் ஆட்சியிலிருந்தபோதும் ஏற்கனவே மத்திய அரசில் அங்கம் வகித்தபோதும் இலங்கை பிரச்சினையில் போராட்டம்தான் நடத்திக் கொண்டிருந்தார்.

மனித சங்கிலி போராட்டம், இரண்டு மணி நேரம் உண்ணாவிரதப் போராட்டம், ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார். நடுநடுவே பிரணாப் முகர்ஜியையும் தன் வீட்டிற்கு வரவழைத்தார். இலங்கை போரை நிறுத்துவதற்காக கருணாநிதி நடத்திய நாடகங்கள் இது.

அறிவிக்கப்படாத சுதந்திர நாடாக இருந்த இலங்கைத் தமிழ்ப் பகுதிகள் அடிமைப் பகுதிகளாக ஆக்குவதற்கு அடி எடுத்து கொடுத்தது இந்தியா. அதற்கு பக்கவாத்தியம் வாசித்தவரே கருணாநிதி தான்.


இப்போது தமிழ்க் கிராமங்களுக்கு சிங்கள பெயர்கள், தமிழ் நிலத்தில் சிங்களவர் குடியேற்றம், தமிழ் பகுதிகளுக்கு அதிகாரமே இல்லாத மாநில ஆட்சி கூட கிடையாது என்று ராஜபக்ஷ அறிவித்துவிட்டு திருப்பதிக்கு வருகிறார். அவருக்கு இந்தியா சிவப்பு கம்பளம் விரிக்கிறது.





ஆனால் கருணாநிதி கறுப்புச் சட்டை போட்டு அவரை திருப்பி அனுப்பிவிட முடியும் என கருதுகிறார். இப்படி பல நாடகம் நடத்துவார் கருணாநிதி. ஆனால் டில்லிக்கு தரும் ஆதரவை மட்டும் திரும்பப் பெறமாட்டார். அப்படி அவர் திரும்பப் பெற்றால் டில்லியே ராஜபக்ஷவை திருப்பி அனுப்பிவிடும் என கருணாநிதிக்கு தெரியாதா என்ன? என கருணாநிதி மீது பழி சேர்த்துள்ளார்.

இதேவேளை கருணாநிதியின் கறுப்புச்சட்டை போராட்டம் கபட நாடகமே என வைகோ எற்கனவே முழங்கியிருந்தமை இவற்றோடு குறிப்பிடத்தக்கது. (அ-5)



கும்பமேளாவின் முக்கிய நீராடல் தினமான தை அமாவாசையை முன்னிட்டு கங்கை கரைக்கு செல்லும் பாதையான காளி சாலையில் குவிந்த பக்தர்கள் கூட்டத்தின் ஒரு பகுதியை படத்தில் காணலாம்.




## கச்சதீவு விழாவுக்கு 5 ஆயிரம் ரூபா மட்டும் கொண்டு செல்ல அனுமதி

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய விழாவுக்குச் செல்லும் தமிழக பக்தர்கள் 5 ஆயிரம் ரூபாய் மட்டும் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கச்சதீவு அந்தோனியார் ஆலய விழா இம்மாதம் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறுகின்றது. இராமநாதபுரம் சிவகங்கை தவிர பிற மாவட்ட பக்தர்கள் விழாவில் பங்கேற்க பொலிஸாரிடம் என்.ஓ.சி சான்று பெற வேண்டுமென மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

இதனால் வெளி மாவட்ட பக்தர்கள் பங்கேற்பதில் சிக்கல் எழுந்துள்ளதால் தற்போது இந்த புதிய விதிமுறை தளர்த்தப்பட்டுள்ளது.

இது குறித்து இராமேஸ்வரம் அருட்தந்தை சகாயராஜ் கூறிய போது, வெளிமாவட்ட பக்தர்கள் பொலிஸாரிடம் என்.ஓ.சி சான்று வாங்க வேண்டியதில்லை. அரசு வழங்கிய அடையாள அட்டை, குடும்ப விபர அட்டை நகலுடன் நேற்றைய தினத்திற்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவித்திருந்தார்.

விழாவில் பொருட்கள் வாங்க பக்தர் ஒருவர் 5 ஆயிரம் ரூபாய் மட்டும் கொண்டு செல்ல கலெக்டர் நந்தகுமார் அனுமதித்துள்ளார். பக்தர்களை ஏற்றிச் செல்லும் படகுகளுக்கு டீசல் உட்பட குறிப்பிட்ட தொகை வழங்கப்படும்.

மேலும் இந்தாண்டில் 4 ஆயிரம் பக்தர்கள் பங்கேற்கவுள்ளனர் எனவும் குறிப்பிட்டிருந்தார். (அ-5)

## தமிழகத்தின் 42 கோடி கறுப்புப்பணம் வருமான வரி திணைக்களத்திடம்

கறுப்புப் பணத்தை தாமாக முன்வந்து ஒப்படைப்பதற்கு நேற்று முன்தினம் வரை காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து இந்தியா முழுவதும் ஒவ்வொரு மாநிலத்திலும் கறுப்பு பணம் வைத்திருப்பவர்கள் அது பற்றி தானாக முன்வந்து கணக்கு விபரங்களை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக சென்னையில் நடிகர்கள், நடிகைகள், பட அதிபர்கள், வர்த்தக பிரமுகர்கள் என 4 ஆயிரத்து 390 பேர் இதுவரை கறுப்பு பணத்தை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

கறுப்பு பணம் வைத்திருப்பவர்கள் அது பற்றி தானாக முன்வந்து அதிகாரிகளிடம் கணக்குக் காண்பித்தால் சில சலுகைகள் அளிக்கப்படும். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது எனவும் அவ்வாறு கறுப்பு பணத்தை ஒப்படைப்பதற்கு நேற்று முன்தினம் கடைசி நாள் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்தே பலர் தாமாக முன்வந்து ஒப்படைத்துள்ளதன் மூலம் தமிழ்நாட்டில் மாத்திரம் 42 கோடி ரூபாய் சேர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தாம் ஒப்படைப்பதற்கான விண்ணப்ப மனுக்களையும் பலர் வாங்கி சென்றுள்ளனர். கடைசி நேரத்திற்குள் கணிசமான அளவு கறுப்பு பணம் பற்றி தகவல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-5)

## தமிழகத்திற்கு காவிரி நீர்; கர்நாடகாவில் வெடித்தது போர்

காவிரியிலிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதை கண்டித்து கர்நாடகாவில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதன் காரணமாக கிருஷ்ணாசாகர் அணையை சுற்றி 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டதை கண்டித்து விவசாய அமைப்புகள் மட்டுமின்றி முக்கிய அரசியல் கட்சிகளும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளன.

மாண்டியாவில் கிருஷ்ணாசாகர் அணையை முற்றுகையிட முயன்ற முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பா மற்றும் அவரது ஆதரவாளர்கள் 200 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் அனைவரும் மாலையில் விடுவிக்கப்பட்டனர். எனினும் அங்கு 144 தடை உத்தரவு தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எடியூரப்பா ஜனாதிபதி மற்றும் பிரதமரை ஓரிரு நாட்களில் சந்திக்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை நீதிமன்ற உத்தரவை ஏற்று காவிரியில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட்டுள்ள போதிலும் அதனை எதிர்த்து நாளை மறுசீராய்வு மனு தாக்கல் செய்ய கர்நாடக அரசு ஏற்பாடு செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் எந்த விஷயமும் காரணமின்றித் தோன்றுவதில்லை. -ஸ்டோவ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழரின் ஒற்றுமைக்கு கருணாநிதி ஆற்றிய பங்கு என்ன?

தமிழர்கள் ஒற்றுமைப்பட்டிருந்தால் தமிழீழம் கிடைத்திருக்கும் என தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் ஒற்றுமைப்பட்டிருந்தால் என்று கலைஞர் கூறுவதற்கு முன்னதாக அந்த ஒற்றுமையைச் சீர்குலைத்தது யார்? என்பதையும் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது கலைஞர் கருணாநிதி வன்னி யுத்தத்தைத் தடுக்க எடுத்த முயற்சிகளையும் அவர் கூறியிருந்தால் பொருத்துடையதாக இருந்திருக்கும்.

வன்னி யுத்தம் நடந்தபோது, தமிழகத்தின் முதலமைச்சராக கருணாநிதியே இருந்தார்.

அவரின் ஆதரவுடனான கூட்டமைப்பு மத்தியில் ஆட்சி செய்தது;இப்போதும் ஆட்சி செய்கிறது.

நிலைமை இதுவாகஇருக்க, வன்னிப் போரில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட போதெல்லாம் கலைஞர் கருணாநிதி நாடகம் நடித்தார்.

அவரின் உண்ணாவிரதப் போராட்டமும், டில்லிக்கான விஜயமும் ஈழத்தமிழர்களின் விடயத்தில் அவர் நடந்துகொண்ட மிகமோசமான கொடூரத்தனங்களாகும்.

இதுதவிர, ஈழத்தமிழர்களின் உயிரைக் காப்பாற்றவலியுறுத்தி உலகத் தமிழர்களை ஒற்றுமைப் படுமாறு கேட்டுக் கொண்ட சீமானைச் சிறையில் தள்ளியபோது கலைஞர் நடந்து கொண்ட முறையும், இலங்கைத் தமிழர்களின் நிலைமையை அறிய டி.ஆர்.பாலு தலைமையில் கனிமொழியையும் உள்ளடக்கியதாக விசேட குழுவொன்றை இங்கு அனுப்பி வைத்ததுமான கருணாநிதியின் கபடத்தனங்கள் அம்பலத்திற்கு வந்ததை அவரின் முதுமை அவருக்கு மறதியாகிப் போயிருக்கலாம்.

ஆனால், எங்களை இந்தியா காப்பாற்றும் என்று நம்பிய நாம்; உலகத்தமிழர்களின் தலைவன் நானே என்று கூறுகின்ற கலைஞர் கருணாநிதி கைவிடமாட்டார் என்று நினைத்த நாம் - அந்த நினைப்புகளெல்லாம் பொய்யாகிப்போய் புதுமாத்தளன் புழுதியில் எங்கள் உறவுகள் சுருண்டு விழுந்த சோகத்தை எங்கள் இதயத்தில் சுமந்து கொண்டிருக்கும் நாம் எப்படி மறப்பது?

சீமானை, வைகோவை, நெடுமாறனை தூக்கியெறிந்த கலைஞர் கருணாநிதி, இப்போது தமிழர்களின் ஒற்றுமை பற்றிப் பேசுவது அபத்தமானது.

வன்னியில் தமிழரின் குருதி ஆறாகி, அவர்களின் நிலம் நீறாகிப் போனபோது, ஸ்ராலினுக்காக விமானம் ஏறி டில்லி சென்ற கலைஞருக்கு அப்போது தமிழர்களின் ஒற்றுமைபற்றித் தெரியவில்லையாஎன்ன?

இங்கும் அங்குமாக முதுமைகளின் நடிப்பு தாங்க முடியவில்லை ஐயா என்றுதான் இதற்கு முடிவு கிடைக்குமோ?

# ஜே.வி.பி. எம்.பி. இன்று கிளிநொச்சிக்கு விஜயம்

(கொழும்பு)

ஜனநாயக தேசிய முன்னணியின் (ஜே.வி.பி) நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி மற்றும் முன்னாள் குழுக்களின் பிரதித் தலைவர் இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோர் கிளிநொச்சிக்கு இன்று திங்கட்கிழமை விஜயம் செய்யவிருக்கின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்கவின் நிதியொதுக்கீட்டின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட உபகரணங்களை கையளிப்பதற்கான நிகழ்வில் பங்கேற்பதற்கே இவர்கள் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர்.

சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இந்தப் பொருட்கள் கரைச்சி பிரதேச சபையின் மண்டபத்தில் வைத்து இன்று திங்கட்கிழமை 10 மணியளவில் கையளிக்கப்படும்.

இந்த நிதியின் மூலம் [illegible]ராமிய அபிவிருத்திச் சங்கம், மாதர் [illegible]கம் மற்றும் சிறுவர் பாடசாலைகளு[illegible]த் தேவையான பொருட்கள் கை[illegible]க்கப்படவுள்ளன. (செ-4)

# பெரும்போக நெற்செய்கையை அறுவடை செய்வதில் சிரமம்!

## கவனமெடுக்குமா அரசாங்கம்?

(சிவநகர்)

பெரும்போக நெற்செய்கையின் அறுவடை தொடங்கியுள்ள நிலையில் ஆளணிப் பற்றாக்குறையாலும் நெல் அறுவடை இயந்திரங்களின் வசதி இன்மையாலும் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் விளைந்த நெல்லை அறுவடை செய்ய பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும்போது கொள்வனவு செய்பவர்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதால் மேற்படி அதிக விலை கொடுத்து இயந்திரங்களை நெல் அறுவடையில் பயன்படுத்த விவசாயிகள் அச்சப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் அரசாங்கத்தினால் நெல் கொள்வனவிற்கான நிர்ணயிக்கப்பட்ட விலை அறிவிக்கப்படுமாயின் விவசாயிகள் அச்சமின்றி நெல் அறுவடையை மேற்கொள்ள முடியும் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே மழை வெள்ளத்தினாலும் பல்வேறு இயற்கை அனர்த்தத்தாலும் விளைச்சலை இழந்துள்ள இவ் விவசாயிகளின் நன்மை கருதி உரிய திணைக்களங்கள், அரச அதிகாரிகள் உத்தரவாதம் வழங்கி உதவ வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (செ-5,254)

### 5 நாட்களேயான சிசுவை விற்க முயன்றவர்கள் கைது

பிறந்து ஐந்து நாட்கள் மட்டுமேயான குழந்தை ஒன்றை இரண்டு இலட்சம் ரூபாயிற்கு விற்க முயன்ற குழந்தையின் தாய், தந்தை மற்றும் அவிசாவளை வைத்தியசாலையில் கடமை புரியும் ஒருவரும் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் அறிந்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதன்பின்னர் அவிசாவளைப் பொலிஸார்சம்பவம்தொடர்பில்விசாரணைகளை நடத்துவதற்கு பொறுப்பேற்றுக் கொண்டனர். (செ-4)

# பாலிநகர் மகா வித்தியாலயத்தில் புவியியல் பாட ஆசிரியர் இல்லை!

## நியமனம் வழங்குமாறு மாணவர்கள் கோரிக்கை

(தும்பளை)

துணுக்காய் கல்வி வலயத்தில் அமைந்துள்ள பாலிநகர் மகா வித்தியாலயத்தில் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக புவியியல் பாடத்திற்கான ஆசிரிய வெற்றிடம் நிலவுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்களின் புவியியல் அடைவு மட்டம் பாதிப்படையும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் மாணவர்கள் புவியியல் பாடங்களிற்கு தனியார் கல்வி நிலையங்களை நாட வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாக மாணவர் சார்பில் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமைகளில் ஆசிரிய இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது தமது பாடசாலைக்கும் புவியியல் பாட ஆசிரியரை தந்துதவ வேண்டும் என பாடசாலை சமூகத்தினர் வினயமாகக் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதன்படி புவியியல் பாடத்தில் தாம் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு புவியியல் பாட ஆசிரியரை தமக்கென நியமித்து துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம் உதவ வேண்டும் என மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-5,19)

# இறக்குமதி செய்யப்பட்ட 5 ஆயிரம் தொன் டீசல் நிராகரிக்கப்பட்டது

(கொழும்பு)

லங்கா ஐ.ஓ.சி.நிறுவனத்தால் இலங்கை க்கு இறக்குமதி செய்யப்பட்டதாக கூறப்படும் 5 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை இலங்கை பெற்றோலிய சேமிப்பு டெர்மினல்ஸ் லிமிடெட் நிராகரித்துள்ளது.

இவை தரம் குறைந்தவையா என சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த சோதனை நடவடிக்கைகள் இதுவரை முடியாத நிலையில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

40 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் அடங்கிய எண்ணெய் கப்பல் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தால் இலங்கைக்கு இறக்குமதி செய் யப்பட்டுள்ளதெனவும் அதில் தரம்குறைந்த எரிபொருள் காணப்படுவதாகவும் முன்ன தாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை இலங்கை- இந்திய எண்ணெய் நிறுவனம் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## சாதனைதான் பயன்தரும்



அறிவின் வளர்ச்சிக்கு மூன்று படிகள் உள்ளன. அவை நம்பிக்கை, விளக்கம், முழுமைப்பேறு (Faith, Understanding and Realisation) உடலைக்காக்கும் நெறியிலும் மூன்று ஒழுங்காற்றல் வேண்டும். அவை ஒழுக்கம், கடமை, ஈகை (Morality,Duty and Charity). இத்தகைய தெளிந்த நிலையில் மனிதன் வாழ்ந்து முழுமைபெறவேண்டுமெனில் கீழ்க்கண்ட 7 விதிகளை நன்கு உணர்ந்து ஆற்றவேண்டும். அவை,

❖ வாழ்வின் நோக்கம், தேவைகள், விருப்பங்கள் போன்றவற்றை மதிப்பிட்டுக்கொள்ளவேண்டும். இவைஒன்றுக்கொன்று முரண்படாமலும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

❖ தனக்கு அமைந்துள்ள சூழ்நிலைகளையும் வாய்ப்புக்களையும் கணித்துக்கொள்ளவேண்டும்.

❖ இயற்கையின் ஒழுங்கமைப்பையும் அதன் ஆற்றலின் விளைவான தவறற்ற காரண விளைவு விதியையும் உணர்ந்து கொண்டும் மதித்தும் நடக்கவேண்டும்.

❖ வாழவேண்டிய முறையையும் ஆற்றவேண்டிய செயல்களையும் வரிசையாகத் தொகுத்துக்கொள்ளவேண்டும்.

❖ இத்தகைய வாழ்வுக்குத் தன்னை தகுதியாக்கிக்கொள்ள உடல் வலிமையையும் திறனையும் அறிவையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். இவற்றிற்கு முறையான உடற்பயிற்சி, உளப்பயிற்சி, சிந்தனை இவற்றைப் பழகிக்கொள்ளவேண்டும்.

❖ விழிப்போடும் விடாமுயற்சியோடும் எண்ணம், சொல், செயல் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

❖ அவ்வப்போது ஏற்படும் தவறுகளை அகத்தாய்வு (Introspection) செயல் திருத்தம் என்ற இரண்டு வழிகளாலும் திருத்தித் தன்னைத் தூய்மையாக்கிக் கொண்டேயிருக்கவேண்டும்.

இந்த ஏழு விதிகளை நன்குணர்ந்து மனிதன் அறிவில் வளர்ச்சி பெறவேண்டும். உடலையும் நன்கு காத்துக் கொள்ளவேண்டும். இத்தகைய வாழ்வின் மூலமே மனிதன் பிறருக்குப் பாரமாக இல்லாமலும் பிறருக்கு உதவியாகவும் இருந்து கொண்டே தானும் நிறைவோடும் மகிழ்ச்சியோடும் வாழலாம். முயல்க! சாதனைதான் பயன்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மக்களையே கொல்ல உத்தரவிட்டுள்ளார் ஒபாமா

## விக்கிலீக்ஸ் நிறுவுநர் அசாஞ்சே குற்றச்சாட்டு



சொந்த நாட்டு மக்களையே கொல்ல அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டுள்ளார் என்று விக்கிலீக்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஜூலியன் அசாஞ்சே குற்றம் சாட்டியுள்ளார்.

அல்கொய்தா உள்ளிட்ட போராளி அமைப்புகளுடன் அமெரிக்கர்களுக்கு தொடர்பு இருந்தால் அவர்களை எதிரிகளாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

போராளிக்குழுக்களுடன் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்துக்குரிய அமெரிக்கர்களைக் கொன்றுவிட ஒபாமா அளித்துள்ள உத்தரவாகவே இது கருதப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு அமெரிக்காவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் பிரிட்டனில் உள்ள ஈக்வடோர் நாட்டு தூதரகத்தில் தங்கியுள்ள அசாஞ்சே அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்தபோது தங்கள் நாட்டு மக்களையே கொல்ல உத்தரவிட்டிருப்பதன் மூலம் அமெரிக்க நாட்டு அரசியல் நடைமுறையையே ஒபாமா சிதைத்துவிட்டார்.

இதுபோன்ற அரசுகள் மக்களை மதிக்காமல் செயற்படும்போதுதான் அவர்களின் இரகசியங்களை அம்பலப்படுத்த விக்கிலீக்ஸ் போன்ற அமைப்புகள் தேவைப்படுகின்றன.

ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பல இடங்களில் பயங்கரவாதிகளுக்கு எதிராகவும் உளவு பார்ப்பதற்காகவும் ஆள் இல்லாத விமானங்களை அமெரிக்கா பயன்படுத்தி வருகிறது. இது தொடர்பான விதிகளின் முழுவிபரங்களை வெளியிட அமெரிக்கா தயாரா?

இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் இருந்து யாராவது எங்களுக்கு உதவ முன்வந்தால் வரவேற்போம். அவர்களின் பெயரை இரகசியமாக வைத்திருப்போம். அமெரிக்காவின் திரைமறைவு நடவடிக்கைகளை உலகுக்கு அம்பலப்படுத்துவோம் என்றும் அசாஞ்சே கூறியுள்ளார்.

இப்போது அசாஞ்சே பிரிட்டனில் இருந்து ஈக்வடோர் செல்ல அவர் முயற்சித்து வருகிறார். ஆனால், பிரிட்டன் அதற்கு அனுமதியளிக்காததால் அந்நாட்டில் உள்ள ஈக்வடோர் தூதரகத்தில் தங்கியுள்ளார். அதேநேரத்தில் அசாஞ்சேயிடம் தாங்கள் விசாரணை நடத்த வேண்டியிருப்பதால் தங்களிடம் அவரை ஒப்படைக்க வேண்டுமென்று சுவீடன் அதிகாரிகள் கோரி வருகின்றனர். அவர் சுவீடனுக்கு நாடு கடத்தப்பட்டால் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. (அ-5)

# இந்தியாவுடன் இணைந்து ஆயுத உற்பத்திக்குத் தயார்

## அமெரிக்கா தகவல்

இந்தியாவுடன் இணைந்து ஆயுதங்களை மேம்படுத்துவது, தயாரிப்பது மட்டுமன்றி கூட்டாக சேர்ந்து அவற்றை ஏற்றுமதி செய்யவும் அமெரிக்கா ஆர்வமாக உள்ளதாக தெரிவித்துள்ளது.

ஜேர்மனியில் அண்மையில் 49 ஆவது முனிச் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் பங்கேற்ற அமெரிக்க பாதுகாப்பு துறைதுணை அமைச்சர் அஷ்டோன் பி.கார்ட்டர், இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் ஆகியோர் தனியே சந்தித்துப் பேசியிருந்தனர்.

இருவரின் சந்திப்புப் பின்னர் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில்,

பரஸ்பரம் நலன்கள் குறித்து இருவரும் தெளிவுபட விவாதித்தனர் என்று தெரிவித்தார். இந்நிலையில் தனது நான்கு நாள் வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய கார்ட்டர், தனது விமானத்தில் அமெரிக்க படைகள் ஊடக சேவை நிறுவனத்துக்கு கருத்து தெரிவிக்கையில்,

இந்தியர்கள் அமெரிக்காவிடம் இருந்து ஆயுதங்களை மட்டுமே வாங்க விரும்புவதில்லை. அவர்கள் அமெரிக்காவுடன் இணைந்து ஆயுதங்களை மேம்படுத்தவும் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யவும் விரும்புகின்றனர். அதில் எங்களுக்கும் ஆர்வம் உள்ளது.

இந்தியா சி-130 ஜெ ரக விமானங்களை அமெரிக்க நிறுவனத்திடம் இருந்து வாங்கி வருகிறது. அதே ரக விமானங்களை இந்தியாவும் தயாரித்து வருகிறது. இந்தியாவுடன் இணைந்து நாங்கள் பணியாற்றுவதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும் என்று கூறியுள்ளார். (அ-5)

# சிரியாவில் வன்முறை; அமெரிக்கா ஆலோசனை

சிரியாவின் பதற்றமான சூழ்நிலையை அமெரிக்கா ஆராய்ந்து வருவதாக அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி தெரிவித்துள்ளார். கனடாவின் வெளியுறவு அமைச்சருடன் கடந்த வெள்ளியன்று கூட்டாக ஊடகத்தினரை சந்தித்த ஜோன் கெர்ரி கூறுகையில்,

சிரியாவில் அதிகளவில் வன்முறை நடந்து வருகிறது. இதில் மக்கள் அதிகளவில் பலியாகி வருகின்றனர்.

அதனை சரி செய்து முன்னெடுத்துச் செல்ல அமெரிக்கா விரும்புகிறது. அங்குள்ள நிலைமையை சமாளிக்கவும் வன்முறைகளை தடுக்கவும் இராஜதந்திர மற்றும் தனிப்பட்ட அடிப்படையில் ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்ள இயலுமா என்று அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது.

அங்குள்ள பல அமைப்புக்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இது மிகவும் சிக்கலான மற்றும் ஆபத்தான சூழ்நிலையாகும்.

அங்கு இரசாயன ஆயுதங்கள் இருக்கலாம் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று என்றும் நன்கு ஆராய்ந்து முடிவெடுத்த பின்னரே நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனவும் கூறினார். (அ-5)

# செவ்வாயில் உலோகம் போன்ற பொருள்; புகைப்படம் அனுப்பியது கியூரியாசிட்டி

(நியூயோர்க்)

செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ முடியுமா என ஆய்வு மேற்கொள்ள அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் செவ்வாய்க் கிரகத்துக்கு கியூரியாசிட்டி ஆய்வக விண்கலத்தை அனுப்பியுள்ளது.


அங்கு தரை இறங்கியுள்ள அந்த விண்கலம் செவ்வாய்க் கிரகத்தை புகைப்படம் எடுத்து பூமிக்கு அனுப்பி வருகிறது. தற்போது செவ்வாய் கிரகத்தில் உள்ள மலை மீது ஏறியுள்ள கியூரியாசிட்டி விண்கலம் ஆய்வு மேற்கொண்டு அங்குள்ள பாறைகளில் துளை போட்டு மாதிரிகளை சேகரித்து வருகிறது.

இந்த நிலையில் கடந்த ஜனவரி 30 ஆம் திகதி கியூரியாசிட்டி அனுப்பிய புகைப்படத்தில் பாறைகளின் மீது உலோகம் போன்ற பொருள் மின்னிக் கொண்டிருப்பது தெரிந்தது. அது 0.5 செ.மீற்றருக்கு குறைவான நீளத்தில் விரல் போன்று உள்ளது.

இது குறித்து நாசா விஞ்ஞானிகள் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. எனினும் கியூரியாசிட்டி செவ்வாய்க்கிரக பாறையில்துளை போட்டு மாதிரிகளை சேகரித்து வருகிறது.

அவற்றின் ஆய்வுக்கு பின்னர் தான் அந்த உலோகம் குறித்து தெரிய வரும் என கூறியுள்ளனர். (அ-5)

# உலக தரிசனம்




தென் அமெரிக்காவின் ஜோகன்ஸ்பெர்க் நகரில் வசித்து வரும் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தனது வீட்டில் பேரன் ஜென் மண்டேலாவை கொஞ்சி மகிழ்வதைப் படத்தில் காணலாம்.

# அல்கொய்தாவை அழிப்பதற்கு காலம் நெருங்கி விட்டது

## ஒபாமா கூறுகிறார்

அல்கொய்தா அமைப்பை அடியோடு அழிக்கும் காலம் நெருங்கி விட்டது என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனேட்டாவுக்கு பிரிவு உபசார விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், பனேட்டா உளவுப் பிரிவின் தலைவராக பணியாற்றிய காலத்தை எப்போதும் மறக்க முடியாது. அல்கொய்தா அமைப்பின் நிறுவுநர் ஒசாமா பின்லேடனின் இருப்பிடம் தொடர்பான தகவலைக் கண்டறிவதில் முக்கிய பங்காற்றியுள்ளார். இதன்மூலம் பின்லேடன் கொல்லப்பட்டார். அமெரிக்க வரலாற்றில் இந்த சம்பவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என குறிப்பிட்டிருந்தார்.

மேலும் பயங்கரவாத குழுக்களுக்கு எதிராக தமது அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஈராக் மீதான போர் முடிந்ததோடு அங்கிருந்து நமது படைகள் திரும்பி விட்டனர். அடுத்தபடியாக நமது இராணுவம் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டு அல்கொய்தா அமைப்புக்கு எதிராக போராடி வருகிறது. அந்த அமைப்பை அடியோடு வேரறுக்கும் காலம் நெருங்கி விட்டது. இதன் மூலம் ஆப்கான் போரும் விரைவில் முடிவுக்கு வரும் என்று தெரிவித்தார். (அ-5)

### போருக்கு மத்தியிலும் அமைச்சரவை மாற்றம்

சிரியாவில் கடந்த 2 ஆண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டு போரில் இதுவரையிலும் 60 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவை சரிகட்டும் நோக்கில் அமைச்சரவையில் ஜனாதிபதி ஆசாத் மாற்றம் செய்துள்ளார். இதன்மூலம் புதிதாக 7 அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 20 சதவிகிதம் பொருளாதார சரிவை சிரியா சந்தித்துள்ளதாகவும் இது 2013 ஆம் ஆண்டு இறுதியில் 50 சதவிகிதமாக அதிகரிக்கும் என்றும் உலக வங்கி எச்சரித்துள்ளது. (அ-5)

# சொந்த நாட்டை காட்டிக்கொடுத்த கனடா அதிகாரிக்கு 20 வருட சிறை

ரஷ்யாவிற்கு உளவு பார்த்த கனடா அதிகாரிக்கு கனடா நீதிமன்றம் 20 வருட சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. கனடா நாட்டின் கடற்படையில் ஜெப்ரி டெலிஸ்லி (வயது 41) என்பவர் அதிகாரியாக பணியாற்றினார்.

அதன்போது இவர் கடற்படை நடமாட்டம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் பரிமாற்றம் செய்யப்பட்ட இரகசிய தகவல்களை கணனியில் இருந்து சேகரித்து ரஷ்யா தூதரகத்துக்கு கொடுத்திருந்தார்.

இதன் பிரதிபலனாக அவர் பல ஆயிரம் டொலர்களுக்கு முக்கிய தேவைகளையும் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

இதனையடுத்து 2012ஆம் ஆண்டு ஜனவரிமாதம் கைது செய்யப்பட்ட இவரின் வழக்கை விசாரித்த கனடா நீதிமன்றம் அவருக்கு 20 ஆண்டு சிறை தண்டனையும் 60 இலட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது. (அ-5)

### கொலம்பியாவில் நேற்று நிலநடுக்கம்

கொலம்பியா நாட்டின் தென் மேற்கே உள்ள பாஸ்டோ நகரில் நேற்று மதியம் 2.15 மணியளவில் 6.9 ரிக்டர் அளவில் மிகக் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தின்போது 130 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கியூட்டோ நகர் வரை இந்த அதிர்வுகள் தென்பட்டன என்று அமெரிக்க வானிலை ஆய்வு மையம் நேற்று மாலை செய்தி வெளியிட்டிருந்தது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011/2012 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளி

| கற்கைநெறி | யாழ்ப்பாணம் புதிய பாடத்திட்டம் | யாழ்ப்பாணம் பழைய பாடத்திட்டம் | கிளிநொச்சி புதிய பாடத்திட்டம் | கிளிநொச்சி பழைய பாடத்திட்டம் | முல்லைத்தீவு புதிய பாடத்திட்டம் | முல்லைத்தீவு பழைய பாடத்திட்டம் | வவுனியா புதிய பாடத்திட்டம் | வவுனியா பழைய பாடத்திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| MEDICINE | 2.1195 | 1.6216 | 1.1028 | 1.3761 | 1.4795 | 1.1183 | 1.499 | 1.564 |
| DENTAL SURGERY | 2.1194 | 1.6061 | 0.9937 | 1.3048 | 1.46 | 0.8578 | 1.4562 | 1.4321 |
| VETERINARY SCIENCE | 1.9872 | 1.5348 | 0.9098 | 1.1381 | 1.0992 | 0.3639 | 1.1845 | 1.2394 |
| MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY | 2.0712 | 1.6008 | 0.7523 | 1.2636 | 1.3999 | 0.6656 | 1.4409 | 1.4089 |
| AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | 1.737 | 1.4392 | 0.3348 | 0.6076 | 0.6021 | 0.3585 | 1.0635 | 1.1128 |
| AGRICULTURE | 1.048 | 0.8042 | -0.2926 | 0.1385 | 0.0319 | 0.0988 | 0.7166 | 0.6737 |
| FOOD SCIENCE & NUTRITION | 1.5852 | 1.4307 | 0.7980 | 1.1516 | 0.6994 | 0.1651 | 1.086 | 1.0162 |
| FOOD SCIENCE & TECHNOLOGY | 1.9043 | 1.5629 | -0.0516 | 0.7348 | 0.7981 | 0.168 | 1.0348 | 1.1342 |
| BIOLOGICAL SCIENCE | 1.0331 | 0.7766 | 0.9513 | -0.2788 | NQC | -0.2802 | 0.4319 | 0.2406 |
| APPLIED SCIENCES (BIO.SC) | 1.0156 | 0.7615 | NQC | 0.0784 | NQC | -0.5814 | 0.2699 | 0.2612 |
| ENGINEERING | 1.9827 | 1.5955 | 0.7919 | 0.9949 | 0.1423 | 0.494 | 1.6021 | 1.5253 |
| ENGINEERING (EM) | 1.8982 | 1.5907 | 0.6140 | 0.8797 | 0.073 | 0.4412 | 1.5749 | 0.963 |
| ENGINEERING (TM) | 1.8343 | 1.5395 | 0.2077 | 0.5601 | 0.058 | 0.4336 | 1.5675 | 0.4576 |
| QUANTITY SURVEYING | 1.8684 | 1.5731 | NQC | 0.9942 | -0.0546 | -0.0648 | 1.4839 | 1.1478 |
| COMPUTER SCIENCE | 1.5676 | 1.1810 | NQC | 0.3893 | NQC | NQC | 1.1584 | 0.2963 |
| PHYSICAL SCIENCE | 1.0232 | 0.5770 | NQC | -0.1825 | NQC | -0.2652 | 0.2495 | -0.2819 |
| SURVEYING SCIENCE | 1.5039 | 1.3339 | 0.1434 | 0.4093 | 0.0507 | 0.0016 | 1.0325 | 1.0293 |
| APPLIED SCIENCES (PHY.SC) | 1.0178 | 0.5659 | NQC | NQC | NQC | -0.224 | 0.3615 | -0.1992 |
| MANAGEMENT | 1.1942 | 0.5470 | 0.6524 | 0.9169 | 0.9479 | 0.6986 | 0.8445 | 1.0304 |
| ESTATE MANAGEMENT & VALUATION | 1.748 | 0.5327 | 1.1597 | 1.3965 | 1.3072 | 0.6952 | 1.4126 | 0.8584 |
| COMMERCE | 1.1322 | 0.5053 | 0.5622 | 0.8876 | 0.8324 | 0.6653 | 0.8292 | 0.8682 |
| PUBLIC MANAGEMENT (SPECIAL) | 1.8464 | 1.2531 | 1.5413 | 1.5324 | 1.609 | 0.8349 | 1.4468 | 1.1871 |
| BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | 1.6172 | 0.6177 | 1.4798 | 1.5554 | 1.3371 | 0.8375 | 1.5655 | 1.0088 |
| LAW | 1.9238 | 1.6305 | 1.3860 | 1.0409 | 1.0489 | 0.9832 | 1.9681 | 1.4264 |
| ARTS * | 1.3626 | 1.1501 | 1.3626 | 1.1501 | 1.3626 | 1.1501 | 1.3626 | 1.1501 |
| ARTS (SP) / MASS MEDIA* # | 1.138 | 0.9829 | 1.1380 | 0.9829 | 1.138 | 0.9829 | 1.138 | 0.9829 |
| ARTS (SP) / PERFORMING ARTS * # | 1.0779 | 0.3915 | 1.0779 | 0.3915 | 1.0779 | 0.3915 | 1.0779 | 0.3915 |
| ARTS (SAB) - A * | 1.4367 | 1.1692 | 1.4367 | 1.1692 | 1.4367 | 1.1692 | 1.4367 | 1.1692 |
| ARTS (SAB) - B * | 1.414 | 1.3508 | 1.4140 | 1.3508 | 1.414 | 1.3508 | 1.414 | 1.3508 |
| MANAGEMENT STUDIES (TV) - A | 1.1251 | 0.4923 | 0.5655 | 0.9113 | 0.8833 | 0.5577 | 1.2815 | 0.7946 |
| MANAGEMENT STUDIES (TV) - B | 1.3575 | 1.1467 | 1.3340 | 1.1429 | 1.3528 | 1.1598 | 1.5848 | 1.1189 |
| COMMUNICATION STUDIES * | 1.3535 | 1.1415 | 1.3535 | 1.1415 | 1.3535 | 1.1415 | 1.3535 | 1.1415 |
| PEACE & CONFLICT RESOLUTION * | 1.7508 | 1.5165 | 1.7508 | 1.5165 | 1.7508 | 1.5165 | 1.7508 | 1.5165 |
| ISLAMIC STUDIES * | 1.2108 | 1.0359 | 1.2108 | 1.0359 | 1.2108 | 1.0359 | 1.2108 | 1.0359 |
| ARABIC LANGUAGE * | 0.6782 | 0.8866 | 0.6782 | 0.8866 | 0.6782 | 0.8866 | 0.6782, | 0.8866 |
| ARCHITECTURE # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| DESIGN (ARCHITECTURE) # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| LANDSCAPE ARCHITECTURE # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| TOWN & COUNTRY PLANNING | 1.7793 | 1.5021 | NQC | 0.6626 | 0.534 | 0.4154 | 1.8903 | 0.7832 |
| FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| INFORMATION TECHNOLOGY (University of Moratuwa) # | 1.6452 | 1.4076 | NQC | NQC | NQC | NQC | 1.1949 | 0.2345 |
| INFORMATION TECHNOLOGY & MANAGEMENT # | 1.643 | 1.3969 | NQC | NQC | NQC | NQC | 1.4124 | 0.9656 |
| FACILITIES MANAGEMENT | 1.7071 | 1.3120 | NQC | 0.7467 | 0.6251 | 0.386 | 1.6387 | 1.1362 |
| TRANSPORT & LOGISTICS MANAGEMENT | 1.7988 | 1.4754 | NQC | 0.6904 | NQC | 0.2558 | 1.3563 | 0.1466 |
| MANAGEMENT & I. T (University of Kelaniya) # | 1.2917 | 1.2685 | NQC | NQC | NQC | NQC | 0.9536 | NQC |
| INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | 1.6221 | 1.4275 | NQC | 0.4834 | NQC | -0.0766 | 0.8912 | 0.2612 |
| STATISTICS & OPERATIONS RESEARCH | 1.6024 | 1.3200 | NQC | 0,4196 | NQC | 0.0697 | 0.8981 | 0.7442 |
| COMPUTATION & MANAGEMENT | 1.5741 | 1.2047 | 0.4505 | 0.9326 | 1.4679 | 0.855 | 1.6419 | 0.841 |
| INFORMATION & COMMUNICATION TECHNOLOGY # | 0.1594 | 0.2619 | NQC | NQC | NQC | 0.7722 | 0.5779 | NQC |
| INFORMATION SYSTEMS (Uni. of Colombo School of Computing) | 1.5297 | 1.1424 | NQC | 0.2768 | 0.4664 | NQC | 1.3435 | 0.779 |
| AYURVEDIC MEDICINE & SURGERY | -0.0975 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | -0.4353 |
| UNANI MEDICINE & SURGERY | 1.0581 | 0.6632 | NQC | 0.0156 | NQC | -0.3432 | 0.3322 | -0.0065 |
| SIDDHA MEDICINE | 0.955 | 0.6284 | NQC | 0.2875 | 0.054 | 0.1357 | 0.9501 | 0.4811 |
| HEALTH PROMOTION | 1.2284 | 1.0638 | NQC | 0.2702 | NQC | -0.2718 | 0.0457 | 1.0072 |
| NURSING | 1.2912 | 1.0761 | NQC | 0.3716 | NQC | 0.0359 | 0.7396 | 0.5253 |
| PHARMACY | 1.6936 | 1.4917 | 0.4470 | 0.7310 | NQC | NQC | 1.0154 | 1.3027 |
| MEDICAL LABORATORY SCIENCES | 1.8835 | 1.5171 | -0.2278 | 0.5231 | 0.4576 | -0.2602 | 0.9749 | 1.368 |
| RADIOGRAPHY | 1.6729 | 1.4214 | 0.7134 | 0.2915 | 0.7374 | -0.3712 | 0.822 | 0.7551 |
| PHYSIOTHERAPY | 1.9923 | 1.5952 | 0.8861 | 1.1961 | 0.7919 | 0.5238 | 1.0813 | 1.3708 |
| ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | 1.3538 | 1.1077 | NQC | 0.3107 | NQC | -0.2617 | 0.7613 | 0.678 |
| FISHERIES & MARINE SCIENCES (University of Ruhuna) | 1.2457 | 0.9898 | NQC | 0.1170 | NQC | -0.5409 | 0.1339 | 0.6743 |
| ANIMAL SCIENCE & FISHERIES (University of Peradeniya) | 1.3588 | 1.1982 | NQC | 0.1892 | 0.3543 | -0.2143 | 0.8231 | 0.7525 |
| FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT | 1.3962 | 1.2149 | 0.4143 | 0.4214 | 0.4224 | -0.0678 | 0.8826 | 0.8665 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL) | 1.4751 | 1.2301 | 1.3138 | 1.3621 | 1.3254 | 1.147 | 1.5305 | 1.0705 |
| COMPUTING & INFORMATION SYSTEMS # | 0.687 | NQC | NQC | 0.1348 | NQC | NQC | NQC | NQC |
| PHYSICAL EDUCATION # | 0.4409 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| SPORTS SCIENCES & MANAGEMENT # | 0.5411 | 0.4807 | NQC | 0.0642 | NQC | NQC | 0.467 | NQC |
| SPEECH & HEARING SCIENCES | 1.3629 | 1.1391 | 1.1999 | 1.0922 | 1.2382 | 1.109 | 1.335 | 1.005 |
| TOURISM & HOSPITALITY MANAGEMENT | 1.4812 | 1.1609 | 1.3455 | 1.1203 | 1.3223 | 1.08 | 1.3837 | 1.145 |
| AGRICULTURAL RESOURCE MANAGEMENT & TECHNOLOGY | 1.0132 | 0.6291 | 0.5812 | 0.6745 | 0.4138 | -0.1595 | 0.2451 | 0.3352 |
| AGRIC BUSINESS MANGEMENT | 0.993 | 0.7358 | NQC | -0.1748 | NQC | -0.1187 | 0.6821 | 0.2743 |
| GREEN TECHNOLOGY | 1.0572 | 0.9000 | NQC | -0.0917 | NQC | -0.5175 | 0.6913 | 0.2478 |
| SCIENCE & TECHNOLOGY # | 0.5026 | -0.5617 | NQC | NQC | NQC | NQC | 0.7055 | NQC |
| COMPUTER SCIENCE & TECHNOLOGY # | 0.9518 | 0.7344 | NQC | NQC | NQC | NQC | 0.1789 | NQC |
| ENTREPRENEURSHIP & MANAGEMENT # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.7922 | -0.3142 |
| ANIMAL SCIENCE # | 0.1819 | 0.4358 | NQC | NQC | NQC | NQC | -0.3362 | -0.4986 |
| EXPORT AGRICULTURE # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| TEA TECHNOLOGY & VALUE ADDITION # | 0.3218 | -0.116 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| INDUSTRIAL INFORMATION TECHNOLOGY # | 1.154 | 0.7721 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.4352 |
| MINERAL RESOURCES & TECHNOLOGY # | 0.5099 | 0.0177 | NQC | NQC | NQC | NQC | NQC | 0.9028 |
| AQUATIC RESOURCES TECHNOLOGY # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | -0.3663 |
| PALM AND LATEX TECHNOLOGY & VALUE ADDITION # | 0.0983 | -0.323 | NQC | NQC | NQC | NQC | NQC | -0.1542 |
| HOSPITALITY, TOURISM AND EVENTS MANAGEMENT (Uwa) # | 0.0962 | 1.0021 | NQC | NQC | NQC | 0.9694 | 0.44 | NQC |
| VISUAL ARTS (University of the Visual & Performing Arts) # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| MUSIC (University of the Visual & Performing Arts) # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| DANCE (University of the Visual & Performing Arts) # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.7654 | -0.8828 |
| DRAMA & THEATRE (Uni. of the Visual & Performing Arts) # | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.6146 | NQC |
| ART & DESIGN (Ramanathan Academy of Fine Arts) # | 0.0329 | 0.6208 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC |
| MUSIC (Ramanathan Academy of Fine Arts) # | 0.7396 | 0.1493 | -0.1547 | 0.3011 | NQC | 0.625 | 0.6948 | NQC |
| DANCE (Ramanathan Academy of Fine Arts) # | 0.4634 | -0.2027 | 0.5507 | 0.7050 | 0.5891 | 0.3859 | -0.0943 | NQC |
| VISUAL & TECHNOLOGICAL ARTS (Swami Vipulananda Institute) | 0.89 | 0.4383 | 0.5076 | 0.0381 | 1.1131 | NQC | 0.1413 | NQC |
| MUSIC (Swami Vipulananda Institute) | 0.7951 | 0.5485 | 0.6956 | 0.3469 | 0.8073 | 0.5498 | 0.8042 | NQC |
| DANCE (Swami Vipulananda Institute) | 0.8593 | 0.4043 | 0.6420 | 0.1706 | 0.5172 | 0.1916 | 0.8606 | NQC |
| DRAMA & THEATRE (Swami Vipulananda Institute) | 1.2733 | 1.1384 | 0.9276 | 1.1056 | 1.2867 | 0.9965 | 1.1374 | 0.2216 |

## இலங்கையை குறி...

ஜெனிவாவில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் இலங்கை மீது அமெரிக்கா கொண்டுவரவுள்ள புதிய தீர்மானத்தில் இந்த விடயமே முதன்மை பெறும் என அறியமுடிகின்றது.

அதேவேளை இலங்கை மீதான இப்புதிய தீர்மானம் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவி[illegible] அங்கத்துவ நாடுகளுக்கு தெளிவுபடுத்[illegible] நடவடிக்கையும் அமெரிக்கா தீவிரப்படு[illegible]புள்ளது.

இது தொடர்பில் ஜெனி[illegible]ல் முகாமிட்டு பரப்புரைகளை முன்னெடு[illegible] வரும் வாஷிங்டனின் விசேட இராஜதந்[illegible]ள் குழு ஐ.நா மனிதவுரிமைகள் ஆ[illegible]க்குழுவுடன் கலந்துரையாடி வருவதா[illegible]தரியவருகின்றது.

இலங்கைமீதான அ[illegible]க்காவின்புதிய தீர்மானத்தின் இலங்கை [illegible]காரம் தொடர்பில் பல விடயங்கள் உள்[illegible]க்கப்பட்டிருந்தாலும் அவற்றில் போர்[illegible] குற்ற விசாரணைக்கு ஐ.நாவின் ஆணை[illegible]என்ற விடயமே முதன்மை பெறுவதாக அறி[illegible] முடிகின்றது. எனவே ஜெனிவாத் தொட[illegible]ல் இம்முறை இலங்கை அரசாங்கம் கடந்த தடவையை விட கடும் சவால்களை எதிர்நோக்க நேரிடும் என மேற்குலகு இராஜதந்திரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 22-வது கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் சில தினங்களே எஞ்சியுள்ள நிலையில் ஜெனிவாவில் பரப்புரைகளை முன்னெடுத்துள்ள அமெரிக்க இராஜதந்திர குழு, ஐ.நாமனித உரிமைகள் ஆணைக்குழுவின் 19-வது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளாத இலங்கை அரசாங்கம், இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தவறிவிட்டது.

குறிப்பாக உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும் இந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது. எனினும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு அந்நாட்டு அரசு காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. அதன் காரணமாகவே இம்முறை மீண்டும் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கும் பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியாயத்தை பெற்றுக்கொடுப்பதற்கும் வழிசமைக்கும் வகையிலே இத்தீர்மானம் அமைந்துள்ளது. எனவே சர்வதேச சமூகம் அதை ஆதரிக்க வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு விளக்கியுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் நிபுணர் குழு ஒன்றை நியமித்து அது தொடர்பில் அறிக்கையை பெற்றிருந்தாலும், அவர் இதுவரை அது தொடர்பிலான அடுத்த நடவடிக்கை என்ற கட்டத்திற்குச் செல்லவில்லை.

இலங்கை அரசாங்கத்தால் தாருஸ்மன் அறிக்கை என விபரிக்கப்படும் ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை வெளியாகி பல மாதங்கள் கடந்துள்ள போதிலும் இலங்கை அரசாங்கத்தின் மீது ஐ.நா இதுவரை உத்தியோக பூர்வமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற போரின் போதான தமது செயற்பாடுகள் குறித்து மீள்பரிசீலனை செய்வதற்கு ஐ.நா செயலாளர் உள்ளக விசாரணைக் குழுவொன்றை அமைத்தார். அந்த குழு சமர்ப்பித்த விசாரணை அறிக்கையில் பொதுமக்களை பாதுகாப்பதில் இருந்து ஐ.நா தவறிழைத்து விட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த பின்னர் கூட நடவடிக்கை என்ற கட்டத்திற்கு ஐ.நா செல்லவில்லை.

இந்த நிலையில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இம்முறை நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தைக் கருத்திற் கொண்டு போரின் போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐ.நா சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் கோரிக்கையாக உள்ளது. இந்த விடயத்தை மையப்படுத்தியே இலங்கை மீதான அமெரிக்காவின் புதிய தீர்மானம் அமையும் என மேலும் அறிய முடிகின்றது.(செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரெட்டுக்களுடன் நால்வர் கைது

(கொழும்பு)

வரி செலுத்தாது நாட்டிற்குள் எடுத்துவந்த சுமார் ஏழு கோடி ரூபாயிற்கும் அதிக பெறுமதியான சிகரெட்டுக்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

ராகமகிந்த பிரதேசத்தில் களஞ்சிய சாலை ஒன்றில் ஆறுகோடி பெறுமதியான சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை விற்பனைக்கு தயாராக பதுக்கி வைக்கப் பட்டிருந்த மேலும் ஒரு கோடிக்கும் அதிக பெறுமதியான சிகரெட்டுக்கள் பிறிதொரு இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போதும் இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித் துள்ளனர். (செ-4)

## 'எமக்குச் சார்பா...

யிட்டுள்ளார்.

இலங்கையின் விடயத்தை இந்தியா வித்தியாசமாகவே நோக்கும் என்று தாம் எண்ணுவதாகவும் அவர் தெரிவித்துள் ளார். (செ-4)

## இரண்டு கட...

வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலையில் இசற் புள்ளி பரீட்சைகள் திணைக்களத் தால் வெளியிடப்பட்டது.

நீதிமன்ற தீர்ப்பிற்கு இணங்க இம்முறை பல்கலைக்கழகத்திற்கு அதிகளவான மாண வர்களை உள்வாங்கவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை 2012ஆம் ஆண்டு உயர் தர பரீட்சைக்கு தோற்றிய பல்கலைக்கழகத் திற்கு தகுதி பெற்ற மாணவர்களை இவ்வாண்டு இறுதிக்குள் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உயர் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். (செ-4)

# சிறுபான்மை இனமக்...

நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர்மாநாட்டிலேயே அவர் இந்த கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவர் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் தொடர்ந்தும் குறிப்பிட்டதாவது,

இந்த நாட்டிலே ஒழுக்கம், நீதி முழுமையாக உடைந்து காணப்படுகின்றது. பெண்கள் கற்பழிக்கப்படுவதைப் பற்றி புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஒரு நாளைக்கு ஐந்து பேர் கற்பழிக்கப்படுவதாக புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன. செய்யப் பட்ட முறைப்பாடுகளுக்கு அமையவே இந்த கணிப்பு என்றால், முறைப்பாடு செய்யப்படாத கற்பழிக்கப்படும் சம்பவங்கள் எவ்வளவு என்று எம்மால் கணக்கிட முடியாதுள்ளது.

மாத்தளையில் மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. 89-ம் ஆண்டிலே இப்படியாக காணாமல் போனவர்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் குழுவிற்கு பெயர் பட்டியலைக் கொடுத்தவரே இந்த ஜனாதிபதி தான். அந்த பெயர்ப்பட்டியலில் இருக்கின்ற பலரின் எலும்புக்கூடுகள் மாத்தளையில் இருக்கும் என நாங்கள் நம்புகின்றோம். இது முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும். ஜனாதிபதியே இதனை முன்னின்று சுதந்திர மான, நேர்மையான, சர்வதேச விசாரணையை மேற்கொள்வார் என நாங்கள் எதிர்பார்க்கின் றோம்.

சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக பல வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள் ளன. விசேடமாக இன்று முஸ்லிம் மக்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள் ளன. பொதுபலசேனா என்ற அமைப்பு முற்று முழுதாக அரசாங்கத்தினாலேயே நடத்தப்படுகின்ற ஒரு நாடகம். அரசாங்க சக்திகள்தான் இதற்கு பின்னாலே நின்று அந்த அமைப்பை இயக்குகின்றன. வேண்டு மென்றே தேவையில்லாமல் இன்னொரு பிரச்சினையைக் கிளப்பி விடுவதற்காக அதன் மூலமாக தாங்கள் தொடர்ந்தும் பதவி யில் இருப்பதற்காக இப்பொழுது முஸ்லிம் மக்களுக்கு எதிராக இப்படியான ஒரு அநியா யத்தை அரசாங்கம் செய்ய முன்வந்துள்ளது.

எல்லா மக்களோடு அதிகாரத்தை பகிர்ந்து கொள்வேன் என்று கடந்த 7 வருடங்களாக ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கும், அண்டை நாடான இந்தியா வின் வெளிவிவகார அமைச்சருக்கும், தொடர்ச் சியாக 13-வது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்வேன், அதற்கு மேலாகவும் சென்று அதிகாரப் பரவலாக்குதலை நாங்கள் அர்த்தமுள்ளதாக்குவோமென்று தொடர்ச் சியாக பலருக்கு வாக்குறுதிகளைக் கொடுத்த ஜனாதிபதி, இந்த வருடம் சுதந்திரதின உரை யின் போது கொடுத்த வாக்குறுதிகளுக்கு மாறாக தமது உண்மையான நிலையை இப் போது வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளார்.

இதுதான் அவருடைய உண்மையான நிலைமை ஆகையால் இவ்வளவு காலமும், உலகத்தை ஏமாற்றிய நிலையில் இருந்து மாறுபட்டுள்ளார். அப்படி மாறுகின்ற போது அது நாட்டிற்குத்தான் கேடினை விளைவிக்கும் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார். (செ-4)

# 'விஸ்வரூபம்' திரை...

முஸ்லிம் அமைப்புக்களின் எதிர்ப்பைக் காரணம் காட்டி விஸ்வரூபம் திரைப்படத்தை திரையிடுவதற்கு ஆரம்பத்தில் தமிழக அரசு தடைவிதித்திருந்தது.

இந்தப் பின்னணியிலேயே இலங்கையிலும் படத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

தமிழகத்தில் முஸ்லிம் அமைப்புக்களுடன் காணப்பட்ட இணக்கப்பாட்டை அடுத்து அந்தத் திரைப்படத்திற்கான தடையை அரசு நீக்கியது. அங்கு திரையரங்குகளில் தற்போது படம் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையிலே இலங்கையிலும் திரைப்படத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக தடையை அரசாங்கம் நீக்கியிருக்கிறது.

முஸ்லிம் அமைப்புக்களை அழைத்து திரைப்படம் காண்பிக்கப்பட்டதாகவும் அதன் பின்னர் படத்தில் மூன்று காட்சிகள் மட்டும் நீக் கப்பட்டதாகவும் அமைச்சர் டீ.பி.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஒருவர் தூக்கிலிடப்படும் காட்சி, கழுத்து வெட்டப்படும் காட்சி உள்ளிட்ட மூன்று காட்சி களை மட்டும் நாங்கள் நீக்கியிருக்கின்றோம். தமிழ்நாட்டில் 7 காட்சிகளை நீக்கினார்கள், ஆனால் நாங்கள் மூன்று காட்சிகளை மட்டுமே நீக்கியிருக்கின்றோம் என்று அமைச் சர் ஏக்கநாயக்க பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

மூன்று காட்சிகளை மட்டும் நீக்கிவிட்டு திரைப்படத்தை வெளியிடும் இலங்கைத் தணிக்கைச் சபையின் தீர்மானத்திற்கு முஸ்லிம் அமைப்புக்கள் மற்றும் முஸ்லிம் தலைவர்களிடமிருந்து எந்தவித எதிர்ப்பும் வரவில்லை.

அவர்களின் இணக்கத்துடனேயே திரைப் படம் வெளியாகிறது என்றும் இலங்கையின் கலை மற்றும் கலாசாரத் துறைக்கான அமைச் சர் தெரிவித்தார். (செ-4)

## 'ரோ' தலை...

யும் வெளியாகவில்லை.

இரண்டு நாட்கள் இந்தியாவில் தங்கி இருந்த ஜனாதிபதி இந்தியாவின் எந்த அரசியல் தலைவர்களையும் சந்தித்திருக்காத நிலையிலேயே, ரோ உளவு அமைப்பின் தலைவர் ஜனாதிபதியை சந்தித் துள்ளார். (செ-11)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA
French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புக்கள் மிகவிரைவில்.. T.P.021.222.8093
61, Kachcheri-Nallur Road, Jaffna
(ருக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)
(1704)

தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கம்
தாளையடி - பாதை இல. 806



Valampurii Graphics

உள்ளம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்
Best Wishes

கடந்த பத்து ஆண்டுகளாக யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவராகவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும் கடந்த மூன்று ஆண்டுகளாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவராகவும் சேவையாற்றி தற்போது இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள
எமது தலைவர்
திரு.பொன்னுத்துரை கெங்காதரன்
அவர்கள் இறைவனின் நல் ஆசியுடன் சேவைதனில் பல உயர்வுகள் பெற்று சிறப்புடன் பெருமைபெற்று விளங்க உளம் நிறைந்த வாழ்த்துக்கள்
உரிமையாளர்கள், பணியாளர்கள், சாரதி நடத்துநர்கள்,
சிற்றூர்திச்சேவை சங்கம், தாளையடி.
(1712)

DMI ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
A/L- DAY CLASS
புவியியல்- N.பாபு
அலகு- GIS, GPS
(திங், புதன், வெள்ளி -7 am)
புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
(1718)

வேலை வாய்ப்பு
நெல்லியடி, சாவகச்சேரி நகரில் இயங்கும் முன்னணி கணினி நிறுவனத்துக்கு Ms office தெரிந்த இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
தொடர்புகளுக்கு - 0779906299

தவறிவிட்டது
வல்லிபுரம் சிவகுமார் ஆகிய என்னுடைய விக்கினேஸ்வரா வீதி, தையிட்டி எனும் முகவரியினையுடைய 691071120V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கொக்குவில் -தாவடிக்கு இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே: 0775488849
(1717)

ஆங்கிலம் / கணிதம்
பிரத்தியேக வகுப்பு
தரம் 06 - O/L
வீடு வந்து கற்பிக்கப்படும்
English & Tamil Medium
075 065 9477
(1680)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-2332)
WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org